பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை 22.10.2017 கதிர் 350

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# கைதிகள் விடயத்தில் தவறிழைத்தால் நல்லிணக்கப் படிமுறை பாதிப்புறும்

## சம்பந்தன் நேற்று எச்சரிக்கை ஐ.நா.பிரதிநிதியிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 22

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைநீக்குதல்மற்றும்அரசியல்கைதிகள் விடயத்தில் தவறிழைக்கப்படுமானால், அது நல்லிணக்கப் படிமுறைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

ஐ.நா.விசேட பிரதிநிதியை நேற்றுச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்கம் 22 ›››



## அதிகாரப் பகிர்வு மக்களுக்காகவே; அரசியல்வாதிகளுக்காக அல்லவாம்!

### வவுனியா நிகழ்வில் நேற்று ஜனாதிபதி தெரிவிப்பு



வவுனியா, ஒக்.22

அதிகாரப்பகிர்வுஅரசியல்வாதிகளுக்கு அல்ல, அது மக்களை பலப்படுத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவேயாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அபிவிருத்தியின்நன்மைகளை அனைவருக்கும்பெற்றுக்கொடுத்து சமமான வசதிகளுடன் பக்கம் 22 ›››

## அரசமைப்பின் வடிவத்தை நாடாளுமன்றம் முடிவு செய்த பின்பே அது மகாசங்கத்துக்கு

### பிரதமர் விளக்கம்



கொழும்பு, ஒக்.22

உத்தேச அரசமைப்பின் வடிவம் முதலில் நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்படல் வேண்டும் எனவும் இதற்காகவே எதிர்வரும் 30 திகதி முதல் செப்டம்பர் முதலாம் திகதி வரையில் மூன்று நாள் விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடி இதனை ஆராயும். அங்கு விவாதம் நடைபெற்ற பின்னர், இந்த அரசியல் யாப்பில் சேர்க்கப்பட பக்கம் 22 ›››

## தமிழக மீனவர்கள் நான்கு பேர் கைது

மன்னார், ஒக். 22

இலங்கைக் கடற்பரப்பிற்குள்சட்டவிரோதமான முறையில் அத்துமீறி சிறிய படகு மூலம் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர் கள்என்றுகூறப்படும்தமிழகத்தின்இராமேஸ்வரம், தங்கச்சி பக்கம் 22 ›››

## காப்பாற்றப்பட்ட 7 தமிழக மீனவர்களும் இந்தியத் தூதரகத்தில் நேற்று சேர்ப்பு

கொழும்பு, ஒக்.22

கடலில் தத்தளித்த நிலையில்இலங்கைக்கடற்படை மற்றும் இலங்கை மீனவர்களால் மீட்கப்பட்ட ஏழு தமிழக மீனவர்கள் இலங்கையிலுள்ள இந்தியத்தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடியிலிருந்து மாலைதீவுக்குப் பொருள்களை ஏற்றிச்சென்ற தமிழக மீனவர்களின் நாட்டுப் படகு ஒன்று கடல் சீற்றம் காரணமாக கடலில் மூழ்கியது. பக்கம் 22 ›››

## கிளிநொச்சியில் 13 கிலோ கஞ்சா பொலிஸார் மீட்பு

கிளிநொச்சி, தொண்டமான்நகரில்வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த13கிலோ730கிராம் கஞ்சாப் பொதிகள் நேற்று முன்தினம்இரவுகிளிநொச்சிக்காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இராணுவத்தை விட்டோடிகளுக்கு மீண்டும் பொது மன்னிப்புக் காலம்

கொழும்பு, ஒக்.22

இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் நேரடியாக இராணுவ முகாம்களுக்கு சமுகம் தந்து தங்களைச் சட்ட ரீதியாக விடுவித்துக் கொள்வதற்காகப் பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 23 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 15 ஆம் திகதி வரையான காலத்தில் அவர்கள் முகாம்களில் சரணடைந்துதங்களைச்சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியும் என இராணுவப் பேச்சாளர் மேஜர்ஜெனரல் றொஷான் செனிவிரத்ன தெரிவித்தார்.

கடந்த வருடம் இது போன்று பக்கம் 22 ›››

# அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் வெறியை ரணிலும் தம் கட்சிக்குப் பயன்படுத்தினார்



## முதல்வர் விக்னேஸ்வரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஒக்.22

தமிழர்களுக்கு உரிமை ஏதும் வழங்கப்படக்கூடாது என்ற வெறி சிங்களவர்களுள் ஒரு சாராரிடம் நிலையான எண்ணமாக உள்ளது. அந்த வெறியை ரணில் விக்கிரமசிங்கவும் தமது கட்சிக்குச் சார்பாகப் பயன்படுத்தினார் என்று முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கூறுகிறார்.

மக்களால் கேட்கப்படும் பொதுவான கேள்விகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து முதல்வர் விக்னேஸ்வரன், வாராவாரம் அதற்கான தனது பதில் கருத்தை அந்த மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

அந்த வரிசையில் இவ்வாரம் தாம் அளித்த பதிலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கேள்வி – பதில் விவரம் வருமாறு:-

பக்கம் 03 ›››

# பொறுப்புக்கூறல் விவகாரங்களைத் துரிதப்படுத்த ஐ.நா. சிறப்பு நிபுணரிடம் ஜனாதிபதி வாக்குறுதி

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தகவல்

கொழும்பு,ஒக்.22

பொறுப்புக்கூறல் விவகாரங்களைத் துரிதமாக முன்னெடுப்பதாக ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப்பிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்திருக்கிறார் எனத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்குச் சென்று, எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளருடனான சந்திப்புத் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தகவல் வெளியிடுகையில் -

இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. சிறப்பு அறிக்கையாளருடனான, தனிப்பட்ட சந்திப்பாக இது நடைபெற்றது. இதன்போது புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகவும் தற்போது அந்த முயற்சியில் காணப்படுகின்றநிலைமைகள் தொடர்பாகவும் அவருக்கு விவரித்தேன்.

நிலைமாறு கால நீதிப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தல், மீள நிகழாமையை உறுதி செய்தல், காணாமல் போனவர்களுக்கான பணியகத்தை அமைக்கவேண்டியதன் அவசியம், காணாமற் போனவர்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிதல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாரதூரமான நிலைமை, அது முழுமையாக நீக்கப்பட வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தேன்.

காணிகள் விடுவிப்பு தொடர்பாக காணப்படும் தாமதங்கள், மக்களின் மீள்குடியேற்றம், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் நான் எடுத்துக் கூறியிருந்தேன்.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அதில் காணப்படுகின்ற தாமதங்களையும் சுட்டிக்காட்டினேன்.

இந்த விடயங்களைக் கேட்ட ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்



பப்லோ டி கிரெய்ப், நான் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் பற்றித் தாம், சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளார் எனவும், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாக அது தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி பல்வேறு விடயங்கள் குறித்துத் தாம் கருத்து வெளிப்படுத்தவுள்ளார் எனவும் குறிப்பிட்டார். - என்றார் சம்பந்தன்.

தமிழ் மக்களின் விடயங்களில் தமது அக்கறை தொடரும் நீடிக்கும் என உறுதிபடத் தெரிவித்த அவர், நான் குறிப்பிட்ட விடயங்களில் காணப்படும் காலதாமதங்கள் தொடர்பாகத்தான், இலங்கை அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது சுட்டிக்காட்டினார் எனவும், அந்த விடயங்களை துரித மாக முன்னெடுப்பதற்கு அவர் இணங்கியுள்ளார் என்றும், அவர் என்னிடம் குறிப்பிட்டார் என் றார்.

அதேவேளை, புதிய அரமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் முக்கிய பங்களிப்புச் செய்கின்ற வழி நடத்தல் குழு உறுப்பினர்களான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடனும் ஐ.நா .சிறப்பு அறிக்கையாளர், குழு அறையில் கலந்துரையாடியிருந்தார்.

---

## மஹிந்த தரப்பு பரப்புரை நவ.12 அ'புரவில் ஆரம்பம்



கொழும்பு,ஒக்.22

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை இலக்கு வைத்து, மஹிந்த தரப்பினரின் சிறிலங்கா பொதுஜன முன்னணி தொடர் பேரணிகளை நடத்த முடிவுசெய்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம்12ஆம் திகதி அநுராதபுரவில்முதலாவது பரப்புரைப் பேரணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பேரணிகளுக்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவார் என்று சிறிலங்கா பொதுஜன முன்னணி வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

அத்துடன், சிறிலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிடவுள்ள கூட்டு எதிரணியில் உள்ள கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேரணிகளில்கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

---

# கடற்படையின் முன்னாள் பேச்சாளரை நீதிமன்றில் ஆஜர் செய்யாதமை ஏன்?

### மாணவர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கில் நீதிவான் கேள்வி

கொழும்பு,ஒக்.22

2008/09 காலப்பகுதியில், 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை சம்பந்தமான வழக்கில் கைது செய்யப்பட்ட, கடற்படையின் முன்னாள் பேச்சாளர், கொமடோர் டி.கே.பி. தசநாயக்கவை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாதமை ஏன் என்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் நீதிமன்றம் விளக்கம் கோரியுள்ளது.

இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு, நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபராகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொமடோர் தசநாயக்க வழக்கு விசாரணைகளின் போது, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இதையடுத்து, கொமடோர் தசநாயக்கவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமைக்கானகாரணம் என்ன என்று விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு, நீதிவான் லங்கா ஜெயரத்ன, உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கொமடோர் தசநாயக்கவைசிறைச்சாலைமருத்துவமனையில் சேர்க்காமல் இன்னமும் வெலிசறையில் உள்ள கடற்படை மருத்துவமனையில் அனுமதித்திருக்கின்றமை ஏன் என்றும் விளக்க மளிக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும்,முன்னாள் கடற்படைப் பேச்சாளர் தொடர்பாகச் சரியான தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குமாறும், கடற்படைத்தளபதிக்குநீதிவான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய - இன்னமும் தலைமறைவாக இருக்கும் - லெப்டினண்ட் கொமாண்டர் பிரசாத் ஹெற்றியாராச்சியை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணையை பிறப்பித்த நீதிவான், கொமடோர் தசநாயக்க உள்ளிட்ட ஏழு சந்தேக நபர்களையும் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

2008/09 காலப்பகுதியில் சர்வதேசப் பாடசாலை மாணவர்கள் 6 பேரும், பல்கலைக்கழக மாணவர்கள்5 பேரும்கடற்படையினரால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

---

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 22

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைதிங்கட்கிழமை- **வவுனியா பிரதேசத்தில்** காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை சாளம்பைக் குளம் பிரதேசம் - **மன்னார் பிரதேசத்தில்** காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை திருக்கேதீஸ்வரம் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

---

# கைதுசெய்யப்பட்ட பிக்குவுக்கு 30ஆம் திகதி வரை மறியல்!

கொழும்பு,ஒக்.22

கைது செய்யப்பட்ட சிங்கள ஜாதிக்க பலவேகவின் செயலாளர் வண. அரம்பே பொல ரத்னசார தேரரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்கிஸை நீதிவான் நீதிபதி மொஹமட் மிஹால் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த தேரர் அடையாள அணிவகுப்பொன்றுக்கும் உட்படுத்தப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்கிஸையில் ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் அனுசரணையில் தங்கவைக்கப்பட்டிருந்த ரோஹிங்யா அகதிகளை அச்சுறுத்தியமை மற்றும் அவர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியமை ஆகியன தொடர்பில் கடந்த சில வாரங்களாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேரர் நேற்று முன்தினம் நிட்டம்புவவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இதன்போது தேரரிடமிருந்து இரு தேசிய அடையாள அட்டைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியிருந்தார்.

அகதிகளை அச்சுறுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் சந்தேகநபர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இன்னும்இருவர்எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

---

## ஆங்கில தினப் போட்டிகள்: பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கப்படும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (இ)

# நிறைவான அரசியல் தீர்வு கிட்டுகின்ற வரை அரச அதிகாரங்களைக் கையாள மாட்டோம்

## நேற்று வவுனியாக் கூட்டத்தில் சுமந்திரன் தெரிவிப்பு

வவுனியா,ஒக்.23

இந்த நாட்டிலே நிறைவான ஓர் அரசியல் தீர்வு நமது தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அது கிடைக்கிற வரைக்கும் – எங்களுடைய மக்களுக்கும் அரச அதிகாரங்கள் சரியான முறையிலே பகிர்ந்தளிக்கப்படுகின்ற வரைக்கும் – நாங்கள் அரச அதிகாரங்களை கையாளமாட்டோம். அந்தக் கொள்கையோடுதான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பணியாற்றுகின்றோம்.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடமாடும் சேவை ஊடாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பல இடங்களிலேயே இந்த நாட்டு மக்களுக்கு இத்தகைய நன்மைகளைச் செய்து வருகின்றது. வவுனியா மாவட்டம் ஒரு முக்கியமான மாவட்டம். தமிழ்பேசும் வடக்குமாகாணத்தில் வாசல்படியாக அமைந்திருக்கும் மாவட்டம். இந்த மாவட்டத்திலே தமிழ் மொழி பேசும் மக்களுடன் சிங்கள மொழி பேசும் மக்களும் வாழ்கிறார்கள்.

இந்த நாட்டிலே ஓர் இன ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்பதற்காக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த தேசிய அரசாங்கத்தின் இந்த மாவட்டத்தின் செயற்பாடுகளை நாம் முக்கியமானதொன்றாகப் பார்க்கிறோம்.

இந்த அரசாங்கம் உருவாவதற்கு வடக்கு மாகாண மக்கள் ஆற்றிய பங்களிப்பு என்பது அனைவருக்கும் தெரிந்தது. வட மாகாணத்தைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே அரசுடன் நாம் ஊடாடுகின்றோம். மற்ற மாகாணங்களை விட இந்த அரசாங்கம் உருவாக வடக்கு மாகாணம் அதிகம் காரணமாக இருந்திருந்தாலும் கூட வடக்கு மாகாணத்தின் பிரதானமான கட்சியான நாம் அரசாங்கத்தில் பங்காளிகளாகச் சேரவில்லை. ஆனால் அரசாங்கத்தினுடைய அத்தகைய முற்போக்கான செயற்திட்டங்கள் அனைத்திற்கும் நாங்கள் உதவியாக, உறுதுணையாக செயற்பட்டு வருகின்றமை அரசாங்கத் தலைவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இந்த நாட்டிலே நிறைவான ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அது கிடைக்கிறவரைக்கும் – எங்களுடைய மக்களுக்கும் அரச அதிகாரங்கள் சரியான முறையிலே பகிர்ந்தளிக்கப்படுகிற வரைக்கும் – நாங்கள் அரச அதிகாரங்களை கையாளமாட்டோம் என்ற கொள்கை முடிவோடு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறோம். ஆனால் அப்படியான ஒரு முடிவை எதிர்பார்த்து இந்த அரசாங்கம் ஒரு பயணத்தை செய்து வருவதை நாங்கள் வரவேற்கிறோம். அந்த வேலைத்திட்டத்தில் எங்களுடைய முழுமையான பங்களிப்பை நாங்கள் செய்து வருகிறோம்.

இந்த நாட்டிலே முதல் தடவையாக அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசமைப்பை உருவாக்குகின்ற நடவடிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு எந்தவித குறைவுமில்லாத முழுமையான பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றது.

அது சரியான முறையில் நிறைவேறினால்தான் இத்தகைய வேலைத்திட்டங்களினுடைய முழுப் பெறுமதியையும் நாங்கள் அடையக் கூடியதாக இருக்கும்.

இந்த நடமாடும் சேவை மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் இந்த மக்களுக்கு



அத்தியாவசியமான சேவைகள்.

இந்த நாடு சுதந்திரம் பெற்றத்தில் இருந்து இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து மக்களும் சம பிரஜைகள் என்று வாழ்வதற்கான அத்திவாரமாகப் போடப்பட வேண்டியது புதிய அரசமைப்பு உருவாக்கம் தான். இறுதியாக இந்த நாடு சுபீட்சம் அடைவதற்கும், ஒரு புதுப்பாதையில் பயணிக்க ஆரம்பிப்பதற்கும் அத்திவாரமாக அதுவே இருக்கும். ஆகவே அந்த வேலைத்திட்டத்தையும் தற்போது ஆரம்பித்திருக்கின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் வாழ்த்துக்களை கூறி, அதைத் திறப்படசெய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார். (உ–100)

## அதிகாரப் பகிர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி – அரசியல் யாப்பை மாற்றக்கூடாதென மகா நாயக்க தேரர்கள் கோரியிருக்கின்றனர் எனச் செய்தி வந்தது. தற்போது பிரதமர், மகா நாயக்க தேரர் ஒருவர் வெளிநாட்டில் இருக்கும் போது இவ்வாறான தவறான செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன எனக் கூறியுள்ளார். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் – இன்று தமிழர்கள் படும் அவஸ்தைக்கு போதிய உரித்துக்கள் அவர்களுக்கு சட்டப்படி வழங்கப்படவில்லை என்பதை விட தமிழர்களுக்கு எதுவும் வழங்கப்படாது என்ற சிங்களவர்களுள் ஒரு சாராரிடம் வெறியாக அமிழ்ந்திருக்கும் எண்ணமே காரணம். அந்த வெறிதான் பண்டா – செல்வநாயகம் உடன்பாட்டை கிழித்தெறியச் செய்தது. டட்லி – செல்வநாயகம் உடன்பாட்டை கைவிடச்செய்தது. தமிழ் மக்களின் விடிவுக்கென ஒருவரால் நடவடிக்கை எடுக்கும் போது அதற்கு எதிர்ப்புக்காட்டி வந்தமைக்கு இந்த வெறியே காரணம். அதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விதிவிலக்காக இருந்தார் என்று கூறமுடியாது. சந்திரிக்கா அம்மையார் 2000ஆம் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றிப் பேசிய போது அந்தத் திருத்த ஏற்பாடுகளின் பிரதிகளை அவரின் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தினுள்ளேயே எரித்தனர். அந்த வெறியை அப்போது ரணில் விக்கிரமசிங்க தமது கட்சிக்குச் சார்பாகப் பாவித்தார் என்றும் கூறலாம்.

ஆக மொத்தத்தில் தமிழர்களுக்கு எந்த விதச் சலுகையும் அளித்து விடக்கூடாது என்பதில் சிங்களத் தலைவர்களுள் ஒரு முக்கியமான பிரிவினர் கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர். பௌத்த சங்கத்தினர் அதற்கு விதிவிலக்கல்லர். இவ்வாறான தமிழர் மீதான வெறுப்பின் அடியை அல்லது ஆரம்பத்தை நாம் அடையாளம் காண வேண்டுமானால் 1919ஆம் ஆண்டுக்குச் செல்ல வேண்டும். இலங்கையர்களுக்குக் கூடிய அரசியல் சட்ட சலுகைகளையும் உரிமைகளையும் தாம் தர இருக்கின்றார்கள் எனவும் எல்லாப் பிரிவினரும் அதாவது முக்கியமாகத் தமிழ், சிங்கள மக்கள் தலைவர்கள் ஒன்று சேர்ந்து எவ்வாறான அரசியல் சட்டரீதியான திருத்தங்கள் கொண்டுவர வேண்டு மென்று கேட்கின்றார்களோ அவற்றை அவர்கள் தருவார்கள் எனவும் ஆங்கிலேயர்கள் அறிவித்தனர். முக்கியமாக மக்கள் பிரதிநிதிகளை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் இரு சாராரும் ஒருமித்த கருத்தை முன்வைத்தால் தாம் அதை ஏற்றுக்கொள்வார்கள் என ஆங்கிலேயர்கள் கூறினர்.

வடமாகாணத் தமிழ் மக்களின் சங்கத் தலைவராக அப்போது சபாபதி இருந்தார். சிங்கள மக்கள் தலைவர்கள் பிரதேசவாரியாக நாட்டைப் பிரித்து ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒருவரைத் தேர்தல் மூலம் நியமிக்க வேண்டும் என்று கோரிய போது சபாபதி அது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது என்றும், இனரீதியாக அந்தந்த இனங்களைப் பாதுகாக்கும் வண்ணம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தார். அதுவரையில் ஆங்கிலேயர் செய்து வந்ததும் அதைத்தான். அதாவது இனங்கள் எல்லாவற்றையும் சமமாகக் கருதி அந்தந்த இனங்களுக்காகப் பிரதிநிதிகளை ஆங்கிலேயர் நியமித்து ஆட்சியை நடத்தி வந்தனர். இதை எப்படியாவது பிரதேசவாரித் தேர்தல் முறைக்கு மாற்ற சிங்களத் தலைவர்கள் கங்கணம் கட்டியிருந்தார்கள். அதாவது அவர்களின் பின்னணியில் நாட்டின் முழுமையான அதிகாரக் கையேற்பு என்ற குறிக்கோள் கரவாக உள்ளிருந்தது. தமிழ் மக்களின் எதிர்ப்பு இருந்ததை அறிந்து அவர்கள் சேர் பொன்னம்பலம் அருணாசலத்தை அண்டினார்கள். ஆங்கிலேயரின் சட்டவாக்க மன்றத்தில் முன்னர் கடமையாற்றியவர் என்ற முறையிலும் பல முக்கியமான அரசபதவிகளை வகித்தவர் என்ற முறையிலும் அவருக்கு சகல மக்களிடையேயும் செல்வாக்கு இருந்தது. அத்துடன் சிங்கள மக்கள் தலைவர்களை அவர் முழுமையாக நம்பியிருந்தார். அவரைப் பொறுத்தவரையில் தமிழர்களும் சிங்களவர்களும் இந்த நாட்டின் இரு கண்கள் என்றும், இந்து மதமும் பௌத்தமும் ஒரே பாரம்பரியத்தில் உதித்தாலும் என்பதாலும், இந்து மத ஆதிக்கம் பௌத்தத்தில் நடைமுறையில் காணப்பட்டதாலும் இலங்கையானது மத இணக்கத்திலும், இன இணக்கத்திலும் மேம்பட்டு நல்லிணக்கத்திற்கும் ஒத்துழைப்புக்கும் ஓர் எடுத்துக்காட்டாக வருங்காலத்தில் அமையும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார்.

அவரை அண்டி சபாபதியின் மனதை மாற்றி பிரதேசவாரியான தேர்தலுக்கு அவரை உடன்பட வைக்க வேண்டும் என்று கோரினார்கள் அப்போதைய சிங்களத் தலைவர்களான சேர். ஜேம்ஸ் பீரிஸும், ஈ.ஏ சமரவிக்கிரமவும். கொழும்பில் தமிழர்களுக்கென ஒரு மேலதிக ஆசனத்தைத் தருவார்கள் என எழுத்து மூலம் ஒப்புக்கொண்டார்கள். வடமாகாணத்திற்கு மூன்று ஆசனங்கள், கிழக்கிற்கு இரண்டு ஆசனங்கள், கொழும்புக்கு ஓர் ஆசனம் என்று கூறப்பட்டது. மலைநாட்டில் இருந்தும் தமிழ்ப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தமையாலும் மேலும் தமிழ்ப்பேசும் முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தமையாலும் 55 ஆசனங்களில் இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர், தமிழ்ப் பேசும் முஸ்லீம் மக்கள், தமிழ்ப் பேசும் மலாய் மக்கள் எனப் பலரும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்ற அடிப்படையிலும் இனரீதியான பிரதிநிதித்துவத்தைக் கைவிட்டு பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்திற்கு உடன்படுமாறு சேர் அருணாச்சலம் கோர, அதைத் தட்டமுடியாமல் சபாபதி பிரதேசப் பிரதிநிதித்துவத்திற்கு ஒத்துக் கொண்டார்.

சிங்கள மக்கள் தலைவர்கள் மத்தியில் கரவான எண்ணமொன்று இருந்து வந்ததை சேர் அருணாசலம் அறிந்திருக்கவில்லை. உண்மையில் தமையனார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் சிங்கள மக்கள் தலைவர்கள் கபட உள்ளம் கொண்டவர்கள், அவர்களை நம்பாதே என்று தம்பியை எச்சரித்தும் இன்றைய எமது தமிழ் மக்கள் தலைவர்கள் போல் அன்று சிங்கள அரசியல் தலைவர்களை சேர் பொன்னம்பலம் அருணாசலம் நம்பிக் கெட்டார். ஆறு கடந்ததும் நீயாரோ நான் யாரோ என்றனர் அச் சிங்களத் தலைவர்கள்.

பிரதேச வாரியான தேர்தல் முறையைத் தமிழர்களும் சிங்களவர்களும் ஒத்துக் கொண்ட உடனே அதன் அடிப்படையில் தேர்தல்களை நடத்தினார்கள் ஆங்கிலேயர்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக பிரதேச ரீதியாக நியமிக்கப்பட்டார்கள். அரசியல் அதிகாரம், நிர்வாக அதிகாரம் போன்றவை சிங்கள மக்கள் தலைவர்கள் வசம் சிக்குண்டன. தமிழர்களுக்கென கொழும்பில் ஓர் ஆசனம் என்றவர்கள் தேர்தலின் போது அதற்கு இடமளிக்கவில்லை. சேர் அருணாசலம் ஏமாற்றப்பட்டார். சிங்கள ஆதிக்கம் அப்பொழுதிருந்தே ஆரம்பமாகியது. அதிகாரத்தைத் தம்வசம் எடுத்துக் கொண்ட சிங்கள மக்கள் தலைவர்கள் அதனைச் சிறிதும் தளர்த்த முன்வந்தாரில்லை. மாறாக அரச அவை (State Council) தாபிக்கப்பட்ட போது சிங்களவர் மட்டும் அமைச்சரவையை (Pan Sinhala Cabinet) நியமித்தார்கள். அதற்கு அடி எடுத்துக் கொடுத்தவர் எமது மதிப்பிற்குரிய அப்போதைய கணிதப் பேராசிரியர் சி.சுந்தரலிங்கம்.

ஆகவே இன்று அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டாமென்று மகா நாயக்க தேரர்களோ வேறெந்த சிங்களத் தலைவர்களோ கோருகின்றார்கள் என்றால் அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அன்று 1919ஆம் ஆண்டில் இருந்து தாம் பெற்றுக் கொண்ட அரசியல் அதிகாரத்தை எவ்வகையிலேனும் விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதே அவர்களின் குறிக்கோளும் அபிலாஷையும். அதிகாரம் பகிரப்பட்டால் இதுவரை சிங்கள மக்கள் தலைவர்கள் முழு நாட்டையும் ஆண்டு வந்த முறைமை இல்லாதொழிக்கப்படும். மீண்டும் தமிழ் மக்கள் தங்கள் தங்கள் இடங்களில் தலை நிமிர்ந்து வாழத் தலைப்பட்டுவிடுவார்கள் என்ற பயமே அவர்களின் இந்தக் கோரிக்கைக்குக் காரணம்.

எப்பொழுதுமே சிங்கள அரசியல் தலைவர்களுக்கு தமிழ் மக்கள் மீது ஒரு பயம் இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் இரு தரப்பாரும் பரீட்சைகளில் ஒருமித்து ஆஜரானால் தமிழர்கள் எந்தத் துறையானால் என்ன அவற்றில் சிறப்பாகப் பரீட்சையெழுதி வெற்றி காண்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே தமிழர்களை எழும்ப விடக்கூடாது என்ற எண்ணம் அவர்கள் மனதில் கரவாக இடம்பிடித்திருந்தது. அவ்வாறான கரவு எண்ணங்கள் கொண்ட பலர் இன்றும் சிங்கள மக்கள் தலைவர்களிடையே வாழ்கின்றார்கள். அவர்களின் சிந்தனையும் எதிர்பார்ப்புமே அரசியல் யாப்பில் மாற்றம் வேண்டாமென்பது. இதன் அடிப்படை நோக்கம் தமிழர்களுக்கு ஆட்சி அதிகாரம் கொடுக்கும் போது அதனை நிர்ணயிக்கும் பொறுப்பைத் தாம் தம்வசம் வைத்துக் கொண்டே கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே. தேரர்களோ வேறெவராயினும் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டாம் என்றால் அதற்குரிய காரணம் நான் மேலே குறிப்பிட்ட காரணங்களேயாவன. ★

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கைதிகள் விடயத்துக்குத் தீர்வின்றேல் அரசியல் தீர்வும் அசாத்தியமாகும்

இலங்கை வந்துள்ள ஐ.நாவின் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையை உறுதி செய்தல் ஆகியவை தொடர்பான விசேட அறிக்கையாளர் பவ்லோ டி க்ரீப்பை நேற்றுச் சந்தித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் அரசியலில் இப்போது உடனடிப் பிரச்சினையாக இருக்கும் விடயங்களையும், நீண்ட காலப்பிரச்சினைக்கான தீர்வையும் சம்பந்தன் எடுத்துரைத்திருக்கின்றார்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயம் ஆகியவற்றையும் –

பொறுப்புக் கூறல் உட்பட சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு தானாக முன்வந்து அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடித்தல் போன்றவற்றையும் –

இலங்கையில் நல்லிணக்கம், புரிந்துணர்வு ஆகியவற்றை உருவாக்கி, அவற்றின் அடிப்படையில் நிரந்தரமான, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வை உருவாக்குதல் பற்றியும் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எடுத்துரைத்திருக்கின்றார்.

காணி விவகாரம் மக்களின் உணர்வுகளோடும், உரிமைகளோடும் சம்பந்தப்பட்ட விடயம். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களது சொந்த நிலங்களை விடுவித்துப் பெற்றுக்கொள்வது என்பதில், மக்கள் மிகவும் தீவிரத்துடனும், உறுதியுடனும் இருக்கின்றார்கள். அதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்பதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. இதனை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், ஐ.நா. நிபுணருக்கு விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார்.

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் ஒரு தீர்வைக் காண்பதில் கொழும்பு அரசு மெத்தனமாக இருக்கின்றது. உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக ஆராயும் பொறுப்புள்ள 'காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம்' அரசின் மெத்தனப் போக்கால் – அல்லது வேண்டுமென்றே முன்னெடுக்கப்பட்ட அரச செயற்பாடுகளால் – செயற்படாமலேயே 'கட்டையில்' ஏறிவிட்டது. அதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் சம்பந்தன்.

அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை சம்பந்தன் ஓரளவு தெளிவாகப் பிரதிபலித்தார் என்றே கருத வேண்டியுள்ளது.

"இந்தக் கைதிகள் தமது சொந்த நன்மைகளுக்காகக் களவு செய்தவர்களோ, சூறையாடியவர்களோ அல்லர். இந்த அரசியல் கைதிகள் ஒவ்வொருவரினதும் வழக்கிலும் அரசியல் பரிமாணம் உள்ளது. ஆகவே, அந்த அடிப்படையிலேயே இந்த விடயங்கள் கையாளப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்." – என்ற சம்பந்தரின் வாதம்தான் ஒட்டுமொத்த தமிழர்களின் கருத்து நிலைப்பாடு. அதுதான் நீதி, நியாயமான நிலைமையுமாகும்.

நாட்டில் கடந்த 38 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகக் கேடானது என்பதை ஐ.நா. மன்றம் வரை சர்வதேச அரங்குகளில் ஒப்புக்கொண்டு, அதனால் அந்தச் சட்டம், இலங்கையின் சட்டப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட வேண்டும் என இலங்கை அரசே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றமையைச் சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன், அத்தகைய சட்டங்களின் கீழ் தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகளை, சிறையில் தடுத்துவைத்து, அந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை வெட்கக் கேடானது; மோசமானது எனக் கூறுகின்றமை முற்றிலும் சரியானதாகும்.

இந்த விடயத்தில் அரசு இனியும் தவறிழைக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற சம்பந்தன், அதை ஒட்டித் தெரிவிக்கும் பிறிதொரு கருத்தும் முக்கியமானதாகின்றது.

அரசியல் கைதிகள் விடயம் ஓர் உணர்வுபூர்வமான விவகாரமாகத் தமிழர் தாயகம் எங்கும் இப்போது எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. இதில் அரசு இனிமேலும் தவறுவிடக் கூடாது. அரசு தொடர்ந்து தவறிழைக்குமானால், விவகாரம் விபரீதமாகும் என்பதையும் தமக்கே உரிய சொல்லாடல்களில் சம்பந்தன் முன்னிறுத்தியிருக்கின்றார்.

இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் அரசின் பொறுப்பற்ற போக்குத் தொடருமாயின், அது நல்லிணக்கப் படிமுறையில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்ற சம்பந்தனின் எச்சரிக்கை குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

ஒரு சிலர் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகளைக் குழப்புவதற்குத் தயாராக உள்ள நிலையில், இந்த விடயங்கள் அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றமையை அனுமதிக்கக் கூடாது என்று சம்பந்தன் தக்கவாறு குறிப்பிடுகின்றார்.

நல்லிணக்க முயற்சிகளுக்கு தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இரு தரப்புகளிலும் எதிர்ப்பாளர்கள் உள்ளனர்.

உணர்வுபூர்வமான விடயமாகியிருக்கும் அரசியல் கைதிகளின் விவகாரம் – நீதியற்ற முறையில் அவர்களை நீண்டகாலம் தடுத்து வைத்துக் கொடுமைப்படுத்தும் போக்கு – தொடருமானால், அது நல்லிணக்க முயற்சிக்கே ஆப்பாக முடியும் என்ற சம்பந்தனின் எச்சரிக்கையை ஆளும் தரப்பு குறைத்து மதிப்பிடக் கூடாது. அந்த எச்சரிக்கையை அரசு பொருட்படுத்தாமல் நடக்குமானால், அமைதி முயற்சி – தீர்வு எத்தனம் – நல்லிணக்க நடவடிக்கை – யாவையும் நிரந்தரமாக அடிபட்டுப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# நாட்டின் ஒருமைப்பாடு, பௌத்தத்துக்கு பங்கம் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது

## பல்கலைக்கழக நிகழ்வில் ஜனாதிபதி உறுதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.22

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கோ அல்லது பௌத்த மதத்துக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவொரு மாற்றத்தையும் அரசமைப்பில் கொண்டுவர இடமளிக்க மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக உத்தேச அரசியல் யாப்பு குறித்துப் பொய்யான பிரச்சாரங்களை அடிப்படைவாதிகள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்காக ஒன்றிணையுமாறு அனைத்துப் படித்த வர்கள் மற்றும் புத்திஜீவிகளிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்காக தமது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

# மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதை நேரமின்மையால் தவிர்த்த ஜனாதிபதி

## வவுனியாவில் காத்திருந்தோர் ஏமாற்றம்

வவுனியா, ஒக்.22

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஜனாதிபதி மக்கள் சேவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது இந்த வருடம் இடம்பெற்ற புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பரிசில்கள் வழங்கப்படவிருந்த நிலையில் அக்கௌரவிப்பு இடம்பெறமால் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு மாத்திரம் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதனையடுத்து ஏனைய மாணவர்களும், பெற்றோர்களும் மிகுந்த மனவேதனையுடன் சென்றமையைக் காணக்கூடியதாகவிருந்தது.

இவ் விடயம் தொடர்பாக பெற்றோர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

இவ்வருடம் இடம்பெற்ற புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதியின் கைகளினால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன, எனவே அனைவரும் உங்கள் பிள்ளைகளை வவுனியா சைவப்பிரகாசக் கல்லூரிக்கு அழைத்து வாருங்கள் எனப் பிரதேச செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதனை நம்பி நாங்கள் எமது பிள்ளைகளுடன் வந்தோம். ஆனால் பரிசில்கள் எவையும் வழங்கப்படாமை மிகுந்த வேதனையளிக்கின்றது. எனது மகன் இன்று காலை ஜனாதிபதியின் கையால் பரிசில் வாங்கவுள்ளேன் என சந்தோசத்தில் வந்தான். ஆனால் தற்போது அழுது கொண்டு செல்கின்றான். – என்றார்.

இது சம்பந்தமாக ஏற்பாட்டுக்குழுவுடன் தொடர்பு கொண்டு வினாவிய போது, ஜனாதிபதிக்கு நேரமின்மை காரணமாகவே இந்த கௌரவிப்பு நிகழ்வு நிறுத்தப்பட்டதாக தெரிவித்தனர்.

# அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதியால் சாதகமான தீர்வு

## – சிவாஜிலிங்கம் நம்பிக்கை –

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதகமான தீர்வைப் பெற்றுத்தருவார் என வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் விளக்கம் அளித்த போதே அவர் மேற்கொண்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் –

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதகமான தீர்வொன்றை நிச்சயம் வழங்குவார்எனநாம்நம்புகிறோம். வழங்கா விட்டால் அடுத்து என்ன செய்வது என்பதை பார்த்துக் கொள்ளலாம். ஆனால், அதுவரை அரசு எம்மை ஏமாற்றிவிட்டதாக எண்ணத் தேவையில்லை.

சிறையிலுள்ள 117 தமிழ் அரசியல் கைதிகளில் 12 கைதிகள் மேன்முறையீடு செய்துள்ளனர். அதேபோன்று சுமார் 20 பேர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாத நிலையில் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி உள்ளேன்.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியா நீதிமன்றில் நடத்துவதால் சாட்சிகளுக்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

ஆனால், ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள் ஆகியோர் சுதந்திரமாக பாதுகாப்பாக நடமாடும் போது, சாட்சிகளுக்கு மாத்திரம் எப்படி பாதுகாப்பற்று போகும் எனக் கேள்வியெழுப்பினேன்.

இந்த நிலையில், சட்டமா அதிபர், நீதி அமைச்சர் ஆகியோர் இலங்கை வந்த பின் சாதகமான தீர்வை தருவார் என ஜனாதிபதி கூறியுள்ளார். எனவே சாதகமான தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம் – என்றார்.


### உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி – 2017

மார்பகப் புற்றுநோயை உறுதிப்படுத்திட, மார்பகக் கதிர்ப்படம் (Mamogram), அல்ட்றா சவுண்ட் ஸ்கான் சோதனை (USS), இழையவியல் சோதனை போன்றவை செய்யப்படலாம்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


## நாளை

23.10.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : அனுசம் பி.ப. 3.02 வரை
திதி : சதுர்த்தி முழுவதும்

சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம்: 7.32 – 9.02 வரை

# ஐ.நா. உடன்பாட்டை இலங்கை இராணுவம் மீறிச் செயற்படுகின்றது எனக் குற்றச்சாட்டு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

இலங்கை இராணுவம் ஐ.நா.உடன்பாட்டை மீறிச் செயற்படுகிறது என, மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐக்கிய நாடுகளின் 77ஆவது செயற்குழுக் கூட்டத்தில் இலங்கையில் போரின் போது மாணவர்களின் உரிமைகள் மீறும் வகையில் அவர்களின் கல்வி வசதிகளை இராணுவத்தினர் பயன்படுத்தியமை தொடர்பில் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளது.

2010ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புக்களின் அடிப்படையில் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி வவுனியாவில் உள்ள தமிழ் பாடசாலை மற்றும் ஓமந்தையில் உள்ள மத்திய கல்லூரி ஆகிய வற்றைப்படையினர்தமது நடவடிக்கைளுக்காகப் பயன்படுத்தினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்துள்ள இந்த பாடசாலைகளின் சொத்துக்களை மீளத்திருத்த வேண்டும் என்றும் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 2017 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு படையில் 21 அதிகாரிகளும் 456 வீரர்களும் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் பணியாற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு, லெபனான், தென்சூடான் ஆகிய நாடுகளில் பாடசாலை பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. அந்த நாடுகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு போர்க் காலத்திலும் உரிய பாதுகாப்பு உத்தரவாதம் கிடைத்துள்ளது.

ஆனால், இலங்கையில் அது கிடைக்கவில்லை. ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைகளில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கைப் படையினர், ஐக்கிய நாடுகளின் கொள்கையான, பாடசாலைகள், இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்கு உடன்பட்டுள்ளார்கள் என்பதையும் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, 2017 மார்ச்சில் புவனேஸ் அயர்ஸில் நடைபெற்ற பாதுகாப்பான பாடசாலைகள் மாநாட்டில் பங்கு கொண்டமைக்காக இலங் கைக்கு கண்காணிப்பகம் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது (உ)

# நீதி வழங்கும் செயற்பாடுகளை அரசியல்மயப்படுத்தக் கூடாது

## ஐ.நா. நிபுணர் கொழும்பில் தெரிவிப்பு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதற்கான செயற்பாடுகள், அரசியல் மயப்படுத்தப் பட்டால், நிலைமாறு கால நீதிச்செயற்பாடுகள் தோற்கடிக்கப்பட்டு விடும் என்பது உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமையை உத்தரவாதப் படுத்துவது தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு வாரகாலப் பயணமாக வந்துள்ள ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், நேற்று முன்தினம் அனைத்துலக கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் சிறப்புரை ஆற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

நீண்டகாலம் மோதல் நடைபெற்ற நாட்டில் நிலைமாறுகால நீதியை எவ்வாறு முன்னெடுப்பது, எவ்வாறு மீண்டும் இயல்பு நிலையைக் கொண்டுவருவது என்பவை தொடர்பாக ஆராய்வதற்கான ஒரு பொறுப்பையே நான் வகிக்கின்றேன்.

மோதலின் பின்னரான ஒருநாட்டின் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் அங்கம் பெறுகின்ற உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமை ஆகிய நான்கு காரணிகள் போருக்குப் பின்னரான ஒரு நாட்டின் சமூகத்திற்கு முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

இந்த நான்கு விடயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுவனவாகவும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்புவழங்குவனவாகவும் அமைந்திருக்கின்றன.

நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகளுக்கு என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வடிவம் கிடையாது. அந்தந்த நாடுகள் தத்தமது சூழலுக்கு ஏற்ப போருக்குப் பின்னரான சமூகத்தின் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை வடிவமைத்துக் கொள்ள முடியும். இதன் உள்ளார்ந்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டியது மிக முக்கியம்.

பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கி பயணிக்க வேண்டுமே தவிர தீர்வை உருவாக்கி விட்டு அதனை நாடிச் செல்லக் கூடாது. மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பாக ஆராயவேண்டும் என்பதுடன் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறாதமையையும் உறுதிப் படுத்தவேண்டியதும் அவசியம்.

உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டில் உலகில் எந்தவொரு நாடும் முற்றுமுழுதான வெற்றியைப் பெறவில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்டளவில் உண்மைகளை கண்டுபிடிக்க முடியுமான நிலை ஏற்பட்டது.

இங்கு பாதிக்கப்பட்டோர் தொடர்பில் ஆராயப் பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் இருக்கின்றனர். எனவே முதலில் இங்கு நிலைமாறு கால நீதியை முன்னெடுப்பதற்கு ஓர் எதிர்பார்ப்பு இருக்க வேண்டும். இதற்காக நாங்கள் முன்நோக்கிப் பயணிக்க வேண்டியது அவசியம்.

நிலைமாறுகால நீதி செயற்பாடுகளைபொறுத்தவரையில் அந்த செயற்பாடு நீதியானதாக இடம்பெறவேண்டும். அதிலிருக்கின்ற பண்புகளில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். - என்றார் அவர்.

# கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. தனித்துக் களமிறங்குமாம்

## அதுதான் வெற்றிக்குச் சாத்தியம் என்கிறார் மஹ்ரூவ் எம்.பி.

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாணத்தில் தனித்து போட்டியிடுவதற்கான இறுதிகட்ட பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூவ் தெரிவித்தார். திருகோணமலை கட்சி முக்கியஸ்தர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை அவரது அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1989 வரை கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே தனிப்பெரும் கட்சியாக ஆட்சி அமைத்தது. ஆனால், அன்று முஸ்லிம் காங்கிரஸுடன் எமது கட்சி செய்து கொண்ட ஒப்பந்தமே கிழக்கில், அம்பாறையில் எமது கட்சியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதன் பின்னர் நாம் பெரும்பாலும் எதிர்க் கட்சியாக காணப்பட்டமையால் இந்தச் சரிவிலிருந்து எமது கட்சியை மீட்டெடுப்பதில் நாம் தோல்வி கண்டிருந்தோம்.

ஆனாலும், நல்லாட்சி ஏற்பட்டதில் இருந்து கட்சியைக் கிழக்கில் மீளக் கட்டியெழுப்பப் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். இதன் பயனாக பலர் இன்று கிழக்கில் தமது தாய் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம்.

திருகோணமலையைப்பொறுத்தவரைநாம்தனித்துப்போட்டியிட்டே முஸ்லிம்,சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அனைத்து சபைகளையும் அதிக ஆசனங்களையும் கைப்பற்றலாம். அத்தோடு அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சபைகளில் பெரும்பான்மையான இடங்களைப்பெறலாம்.

ஆகவே, கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடுவதே எமது கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு வழி அமைக்கும். இருந்தாலும் வழமை போன்று யானையின் முதுகில் சவாரி செய்ய அரசின் பங்காளிக் கட்சிகள் திட்டமிட்டு வருகின்றன.

இந்தக் கட்சிகள் திட்டமிடுகின்றமை போன்று எமது கட்சி இவர்களுடன் கூட்டணி அமைத்தால் 1989 இல் அம்பாறையில் எமது கட்சிக்கு ஏற்பட்ட நிலையே எதிர்காலத்தில் கிழக்கு மாகாணம் முழுவதும் ஏற்படும். இதைத் தடுத்து கிழக்கில் மீண்டும் தனிப்பெரும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றியமைக்க நாம் தனித்து போட்டியிடுவதே சிறந்தது.

இது தொடர்பாக எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொதுச்செயலாளர் கபீர் காசிம் மற்றும் கட்சி செயற்குழுவுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வருகின்றோம். கிழக்கில் முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதால் எமது கட்சிக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து வருகிறோம். விரைவில் இது தொடர்பாகத் தீர்க்கமான முடிவொன்று கட்சியால் எடுக்கப்படும்.

நான் இந்த விடத்தில் முஸ்லிம் கட்சிகளுக்குச் சவால் விடுகிறேன். முடிந்தால் யானையின் முதுகில் சவாரி செய்யாமல் தனித்து போட்டியிட்டு திருகோணமலையில் ஒரு சபையையாவது கைப்பற்றிக் காட்டுங்கள். - எனத் தெரிவித்தார். (உ)

# வடக்கு மாகாணத்திலேயே வறுமை நிலைமை மோசம்

## புள்ளிவிவரத் தகவல்கள் வெளியீடு

இலங்கையில் வறுமை நிலை குறைந்துள்ள போதிலும், வடக்கு மாகாணத்தில் வறுமை நிலை அதிகளவில் உள்ளது என இலங்கையின் சனத்தொகைப் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் அதிகாரபூர்வ தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வியாழனன்று வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களுக்கு அமைய, 2012/13 காலப்பகுதியில் 6.7 வீதமாக இருந்த நாட்டின் வறுமை நிலை கடந்த ஆண்டில் 4.1 வீதமாகக் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில், 4,166 ரூபாவுக்கு உட்பட்ட தனிநபர் ஒருவரின் மாதாந்த செலவினம் வறுமைக் கோட்டு எல்லையாக அதிகாரபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2012/13 இல் 3,624 ரூபாவாக இருந்தது.

2012/13இல், மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 13 லட்சமாக இருந்த வறுமை நிலையில் இருந்தவர்களின் எண்ணிக்கை 2016இல், 8 லட்சத்து 43 ஆயிரத்து 913 ஆகக் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு புள்ளிவிவரங்களின்படி, மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 3.1 வீதமான (169,392) குடும்பங்கள் வறுமை நிலையில் உள்ளன.

அதிகபட்சம் வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கிளிநொச்சி மாவட்டமும், குறைந்த பட்ச வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கொழும்பு மாவட்டமும் காணப்படுகின்றன.

கண்டி மாவட்டத்திலேயே வறுமை எல்லைக்குக் கீழ் உள்ள மக்கள் அதிகளவில் உள்ளனர். மன்னார் மாவட்டத்தில் வறுமை எல்லைக்கு கீழ் உள்ள மக்கள் குறைந்தளவில் உள்ளனர்.

மாகாண அடிப்படையில், குறைந்தபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக மேல் மாகாணம் உள்ளது. இங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 1.7 வீதமானோர் (101,342) வறுமை நிலையில் உள்ளனர்.

வடக்கு மாகாணம் அதிகபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக உள்ளது. இங்கு, 7.7 வீதமான மக்கள் ( 83,834) வறுமை நிலையில் உள்ளனர்.

மாவட்ட அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில், அதிகபட்சமாக வறுமை நிலை 12.7 வீதமாக உள்ளது.

(உ)







# ஆன்மீகப் பற்றுறுதியியை மேம்படுத்த

# மகிழ்ச்சியுடன் கற்பிக்கும் வழிகளை தேடுங்கள்

## கலந்துரையாடலில் பிரதேச செயலர் அறிவுரை

> பெற்றோர், ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் திருவிழாக்களிலும், களியாட்டங்களிலும், தொலைக் காட்சியிலும் நேரத்தைச் செலவிடுவதைத் தவிர்த்து அறநெறி மறைக் கல்வி, அஹதியா கற்பித்தலுக்கு பிள்ளைகளை பங்கேற்க வைப்பது பெற்றோரின் பொறுப்புக்களாகும்.

நாட்டில் ஏற்பட்டு வரும் அசாதாரண சூழலுக்கு ஆன்மீகப் பற்றுறுதிவளர்க்கப்படாததால் ஏற்பட்ட இளமைகளின் மனப்பிறழ்வே முக்கிய காரணங்களாகும். இதனை முன்னெடுக்க வேண்டியது ஆன்மீக வழிகாட்டிகள், அறநெறி, மறைக் கல்வி, அஹதியா பாடசாலைகளும், பாடசாலை சமூகமும் அக்கறையோடு செயற்பட வேண்டியது காலத்தின்தேவையாகும் என யாழ். பிரதேச செயலர் பொ. தயானந்தன் சமய,சமூகத் தலைவர்களுடனான , யாழ் பிரதேச செயலக கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நல்ல சூழலை எமதுசமூகத்தில் மேம்படுத்தத் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றலுக்குச் கொடுக்கும் கரிசனைகள், பெற்றோர், ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் திருவிழாக்களிலும், களியாட்டங்களிலும், தொலைக் காட்சியிலும் நேரத்தைச் செலவிடுவதைத் தவிர்த்து அறநெறி மறைக் கல்வி, அஹதியா கற்பித்தலுக்கு பிள்ளைகளை பங்கேற்க வைக்கின்றமை பெற்றோரின் பொறுப்புக்களாகும்.

இதனைக் கண்காணிக்க பாடசாலைச் சமூகம் முன்வரவேண்டும் இதற்குத் தனியார் கல்வி நிறுவனங்கள் யாழ். பிரதேச செயலகபிரிவில் முன்வந்து வெள்ளிக்கிழமை மாலையும் ஞாயிறுகாலையும் பணிகளை ஆன்மீகக் கற்றலுக்காக நிறுத்த முன் வந்துள்ளனர்.

இதனை யாழ் மாவட்டம் எங்கும் நடைமுறைப்படுத்த யாழ். மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கும் முயற்சிகளை மாவட்ட செயலர் நா.வேதநாயகன் சகல பிரதேச செயலகங்களிலும் முன்னெடுக்கும் படி கேட்டுள்ளார் என்றார்.



தனியார் கல்வி நிலையத்தினரது கூற்றின்படி நாம் இதற்கு ஆதரவு தர முயன்றாலும் அந்நேரத்தை முழுமையாக ஆன்மீகத் தேடலுக்கு மாணவர்களை வழிகாட்டுவது கண்காணிப்பது யார்? எனக் கேள்வி எழுப்பிய போது, பலரது விடையாக மாணவர்கள் பங்கேற்புஅரிதாகவும் அதுவும் ஒரு பாடம், பரீட்சை, சான்றிதழ் என மீண்டும் பாடசாலை கல்வி போல் இருக்கின்றமையால் மாணவர்களின் ஆர்வம் அருகி வருதலும், ஊக்கப்படுத்துவதில் நாட்டமின்மையும் வெளிப்பட்டது.

மாணவர்கள் ஆர்வமுடன் கற்க மகிழ்ச்சியுடன் கற்பித்தல் முறையை அறநெறி மறைக்கல்வி, அஹதியா ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதும் இதனை பாடசாலை ஆசிரியர் களின் கண்காணிப்பும் பெற்றோர் பங்கேற்பும், மிக அவசியமானது என கியூடெக் கரித்தாஸ் சர்வமத இணைப்பாளர் யோசப்பாலா தெரிவித்தார்.

இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட சபையின் சார்பில் பிரதேச செயலரின் கோரிக்கையாக மகிழ்ச்சியுடன் ஆன்மீகக் கற்றல் கற்பித்தல் பயிற்சி வழிகாட்டலை ஏற்று கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் ஆலோசனை வழிகாட்டலுடன் ஆவணி 14 ஆம் திகதி அறநெறி, அஹதியா மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியை யாழ் பிரதேச செயலகம்,கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் இணைந்து கியூடெக் மண்டபத்தில் மேற்கொண்ட பயிற்சியில் 40 சர்வமத ஆசிரியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

ஆரம்பஉரையை யாழ். பிரதேச சபை கலாசார உத்தியோகத்தர் திருமதி மேசியும், ஆசியுரையை மௌலவி A.M.A.அசீஸும் நிர்வாக உத்தியோகத்தர் A.E.திலகரட்ணம் சிறப் புரையையும் வழங்கினர். இந்தப் பயிற்சியில் வளவாளராக சர்வமத இணைப்பாளர் யோசப்பாலாவுடன் ஆசிரிய ஆலோசகர்திருமதி விக்ரோறியா, ஆசிரியர் டோமினிக் ஜீவாவும் செயற்பட்டனர்.

பிற சமய ஆசிரியர்களுடனான நல்லு றவும் பிற சமய விழுமியங்களை அறிதலுடன், தமது கற்றல் செயன்முறைகளை ஆர்வமுடன் கற்பிக்கும் வழிகளையும் கற்றுக் கொண்டனர். ★





## சுற்றுலா பயணிகளை ஈர்க்கும்

# 'காதல்' மாளிகை தாஜ்மஹால்

உலக அதிசயங்களில் ஒன்றாகப் பெருமை பெற்ற தாஜ்மஹால் தற்போது விவாதப் பொருளாகிவிட்டது. உத்தரப் பிரதேச மாநில சுற்றுலாத் தலங்கள் தொடர்பான கையேடுகளில் இருந்து தாஜ்மஹால் நீக்கப்பட்ட பின்பு சர்ச்சைகள் அதிகரித்தன.

தாஜ்மஹாலின் வரலாற்று முக்கியத்துவத்தைப் பற்றி பாரதிய ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர் சன்கீத் சோம் முன்வைத்த விமர்சனங்கள் சர்ச்சைகளை உச்சத்துக்குக் கொண்டு சென்றுவிட்டன.

விவாதப் பொருளாக தாஜ்மஹால் இருந்தாலும், இது உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதிக அளவிலான மக்களை ஈர்க்கும் இந்த நினைவுச்சின்னத்தின் அழகோ அல்ல து கம்பீரமோ விவாதத்திற்கு உள்ளாக வில்லை.

கட்டடக்கலையின் சிறந்த உதாரணமாகவும், காதலின் அடையாளச் சின்னமாகவும் மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது தாஜ்மஹால். தாஜ்மஹாலின் பிரம்மாண்டத்திற்கு சற்றும் சளைத்ததல்ல அதைச் சுற்றியுள்ள சர்ச்சைகளும், நம்பிக்கைகளும் கட்டுக்கதைகளும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செவிவழிச் செய்திகளாக ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு எனப் பரவிய இந்த புனைகதைகள். அவற்றில் சில...

**கறுப்பு தாஜ்மஹால் பற்றிய உண்மை**

தற்போது ஆக்ராவில் இருப்பது போலவே மற்றொரு தாஜ்மஹாலை கட்ட விரும்பினாராம் ஷாஜஹான். ஒரே வித்தியாசம், இப்போது இருப்பதைப் போல வெண் பளிங்கு நிற தாஜ்மஹால் இல்லை, அவர் கட்ட விரும்பியது கறுப்பு நிற தாஜ்மஹால். 'கறுப்பு பளிங்கு கற்களால் தாஜ்மஹாலைப் போன்ற மற்றொரு பிரம்மாண்ட கட்டுமானத்தைக் கட்ட வேண்டும் என்பது ஷாஜஹானின் விருப்பம்' என்று கூறுகிறது உத்தர பிரதேச மாநில அரசின் தாஜ்மஹால் வலைத்தளம்.

யமுனை நதியின் மறுபுறத்தில் மாஹ்தாப் பாக் பகுதியில் கறுப்பு தாஜ்மஹால்கட்ட திட்டமிடப்பட்டது. காதல் மனைவி மும்தாஜுக்காக வெண் பளிங்கு கற்களால் 'சொர்க்கத்தை' கட்டிய ஷாஜகான், தனது சொந்தக் கல்லறைக்காக கறுப்பு நிற மஹாலை கட்ட விரும்பினார். ஆனால், அவரது மகன் அவுரங்கசீப் புடன்ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் ஷாஜகானின் கறுப்பு தாஜ்ம ஹால் கனவு கனவா கிப்போனது. தந்தை ஹாஜஹானை வீட்டுக் காவலில் வைத்தார் மகன் அவுரங்கசீப்.

1665ஆம் ஆண்டு ஆக்ரா வருகை தந்த ஐரோப்பிய எழுத்தாளர் ஜென் பாப்டிஸ்ட் (Jen-Baptiz) கூறிய கருத்து இது என்று மாநில அரசின் வலைத்தளம் குறிப்பிட்டுள்ளது.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நாள்களில் நோய் வாய்ப்பட்டிருந்த ஷாஜஹான், தனது அறையின் சுவரில் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் பிரத்தியேகமாக பொறிக்கப்பட்ட ஒரு வைரத்தின் உதவியால் தாஜ்மஹாலை பார்த்து ரசித்தார். இருந்த போதிலும், இதுவும் கற்பனைக் கதை என்பதே வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாக இருக்கிறது.

டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியரான நஜஃப் ஹைதர் இடைக்கால வரலாற்றில் நிபுணத்துவம் பெற்றவர். அவர் கூறுகிறார், கறுப்பு தாஜ்மஹால் கதையில் எந்த உண்மையும் இல்லை. இது ஒரு கற்பனைக் கதை. அவர் சொல்கிறார், வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் மத்தியில் தாஜ்மஹால் பற்றி நிறைய கதைகள் உலாவுகின்றன. உண்மையில், தாஜ்மஹால் அவர்களை மிகவும் ஈர்க்கிறது. ஆனால், அவர்களுக்கு தாஜ்மஹாலைப் பற்றி அதிக தகவல்கள் தெரியவில்லை. இதனால் பல கட்டுக்கதைகள் புனையப்படுகின்றன. அவை எளிதில் கிடைக்கும் ஆங்கில புத்தகங்களாக இருப்பதால் மிகவும் பரவலாக பேசப்படுகின்றன.






**தொழிலாளிகளின் கைகள் வெட்டப்பட்ட கதை**

தாஜ்மஹாலை உருவாக்கிய தொழிலாளர்களின் கைகளை ஷாஜகான் வெட்டியது பற்றிய கதையும் பிரபலமனதே. தனதுகைவெட்டப்படுவதற்கு முன்னதாக ஒரு தொழிலாளி தாஜ்மஹாலின் கூரையில் துளையிட்டுவிட்டதால், இப்போதும் அந்த துளையின் வழியாக தண்ணீர் சொட்டுகிறது என்ற கதையையும் சிலர் அறிந்திருக்கலாம்.

இந்தக் கதையில் உண்மை இல்லை என்று விளக்குகிறார் நஜஃப் ஹைதர். 'ஷாஜஹான் கையை வெட்ட வேண்டும் என்றால் தாஜ்மஹால் கட்டுமானத்தில் ஈடுபட்டிருந்த உயரதிகாரிகளின் அதாவது திட்டங்களை வகுத்து அதை செயற்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தவர்களின் கையைத்தானே வெட்டியிருக்க வேண்டும்? இடப்பட்ட பணியை நிறைவேற்றியவர்களுக்குத் திட்டமோ அதன் பிரம்மாண்டமோ தெரிய வாய்ப்பில்லை.

தொழிலாளர்களின் கைகளை வெட்டுவதன் மூலம் என்ன கிடைக்கும்? இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றி, அந்த உழைப்புக்கான கூலியைப் பெறுபவர்களின் கையை வெட்டுவார்களா என்று சிந்தித்துப் பார்த்தாலே இது கட்டுக்கதை என்று புரிந்துவிடும்''. கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த வேலையாள்களுக்கு முழு ஊதியம் வழங்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.'' இத்தகைய கதைகள் சுற்றுலா வழிகாட்டி களால் புனையப் பட்டு, பரப்பப்படுகின்றன என்று வரலாற்றுத் துறை பேராசிரியர் நஜஃப் ஹைதர் கூறுகிறார். தாஜ்மஹால் பற்றிய புதிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பதால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத் தாங்களாகவே புதிய கதைகளை சுற்றுலா வழிகாட்டிகள் உருவாக்கி சுற்றுலாப் பயணிகளின் மனதை ஈர்க்கிறார்கள்.

**மும்தாஜ் கோரிய நான்கு சத்தியங்கள்**

மும்தாஜின் 'சொர்க்கம்' என்று தாஜ்மஹால் சொல்லப்படுவதும் கற்பனையே. சொர்க்கம் எப்படி இருக்கும் என்ற கற்பனையில் அதைப் போன்றே அழகுடன் வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.பல புதிய சிறப்பு வழிமுறைகள் மற்றும் யோசனைகளின்படி தாஜ்மஹால் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

மும்தாஜ் உயிருடன் இருந்த காலத்தில் தன் காதல் கணவரிடம் நான்கு வாக்குறுதிகளை வாங்கினார் என மாநில அரசின் தாஜ்மஹால் வலைத்தளம் கூறுகிறது.

தான் இறந்துவிட்டால், நினைவுச் சின்னம் கட்டவேண்டும் என்பது மும்தாஜின் முதல் வேண்டுகோள். அதை நிறைவேற்றுவதாக சத்தியம் செய்த ஷாஜஹான், தாஜ்மஹாலை கட்டி முதல் வாக்கை மெய்யாக்கினார். தான் இறந்துவிட்டால், ஷாஜஹான் மறுமணம் செய்து கொள்ளவேண்டும் என்பது இரண்டாவது வாக்குறுதி.

பெற்ற பிள்ளைகளை கையாள்வதில் கடுமைகாட்டக்கூடாது, மென்மையான அணுகுமுறை வேண்டும் என்பது ஷாஜஹானிடம் மும்தாஜ் வாங்கிய மூன்றாவது சத்தியம். இந்த மூன்று சத்தியங்களையும் நிறைவேற்றினார் காதல் கணவர். ஆண்டுதோறும் தனது நினைவுநாளில் தாஜ்மஹாலுக்கு கணவர் வரவேண்டும் என்ற மும்தாஜின் நான்காவது வேண்டுகோளையும் நிறைவேற்றுவார் என வரமளித்தார் ஷாஜஹான்.

முதல் மூன்று சத்தியங்களையும் காப்பாற்ற முடிந்த ஷாஜஹானால் நான்காவது சத்தியத்தை நிறைவேற்ற முடியவில்லை. வீட்டுக்காவலும், ஆரோக்கிய குறைவுமே காதல் மனைவிக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது ஷாஜஹானை.

**தாஜ்மஹாலின் சிறப்பம்சங்கள்**

1631ஆம் ஆண்டு தாஜ்மஹாலின் கட்டுமானப் பணிகள் தொடங்கினாலும், அது 1653இல் பூர்த்தியானது. தாஜ்மஹால் கட்டுமானப் பணிக்காக இந்தியாவின் வடபகுதியில் இருந்து கிட்டத்தட்ட 20 ஆயிரம் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். இந்திய-இஸ்லாமிய கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த உதாரணமாக தாஜ்மஹால் கூறப்படுகிறது. ★

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

22.10.2017
29.10.2017

**சந்திராட்டமநாள்:** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் கால், ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 6 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருதியைத் திதி பி.இ. 4.51 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: விசாகம் பகல் 12.22 மணிவரை. பின்னர் அனுஷம். மரணயோகம் முழுவதும். பின்னர் சுபயோகம்.

பிறந்த நட்சத்திர வழிபாடு: விசாகம்.

ராகுகாலம்:- மாலை 4.20 மணிமுதல் 5.49 மணிவரை.

சுபநேரம்:- பகல் 9.03 மணி முதல் 10.32 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஐப்பசி மாத வளர்பிறை திருதியை.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

## மேஷம்:

சஞ்சலமான வாரம். மனக் குழப்பம், கவலை அதிகரிக்கும். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். எதிர்பார்த்தவை தாமதமாகும். உடல் உபாதை வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களை முறியடிக்க அதிக நேரம் உழைக்க வேண்டி வரும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். இவர்களைச் சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். எதிலும் அவசரம் வேண்டாம். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகம் காட்டுவார்கள்.

## ரிஷபம்:

சம பலன்கள் உள்ள வாரம். பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். உடல்நலம் குன்றும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும்.

வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும். தொழிலில் பாடுபட்டாலும் பலன்குறையும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும்.

மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பயணத்தில் கவனம் தேவை.

## மிதுனம்:

ஆக்கபூர்வமான வாரம். வருமானம் வளமாக இருக்கும். நல்லவர்களின் நட்பால் தடைப்பட்ட காரியங்களை விரைவாக முடிப்பார்கள். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். வருமானம் வளமாக இருக்கும்.

வியாபாரத்தில் வேலையாள்கள், வாடிக்கையாளர்கள் மனநிறைவு அடைவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளும், உயர்வுகளும் கிடைக்கும்.

மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள். பெண்களுக்கு அரச உதவியால் சுயதொழில் வாய்ப்புகள் கிடைக்கும். மனம் அமைதியாகக் காணப்படும்.

## கடகம்:

யோகமான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் சேரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் வரவு உயரும். பூர்வீகச் சொத்துகள் வந்துசேரும். உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். விவசாயத்தில் நிறைய ஆதாயம் கிடைக்கும். சிலர் புதுத் தொழிலைத் தொடங்குவார்கள். வராது என்றிருந்த கடன்பணம் வந்துசேரும். நினைத்த காரியம் நிறைவேறும்.

## சிம்மம்:

யோசனையான வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். தடைகளும், ஏமாற்றங்களும் வரும். பிள்ளைகளால் கவலை உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும்.

உத்தியோகத்தில் சக ஊழியர்கள் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவரும். பயணங்களால் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும். நினைத்தவை தாமதமாக நிறைவேறும்.

## கன்னி:

சுபீட்சமான வாரம். பணவரவு திருப்திதரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சுபநிகழ்ச்சிகள் பொது விழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.

ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் இவர்களின் திறமையால் உயர் அதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வுகளும் கிடைக்கும். சகோதர வழியால் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். உறவினர், நண்பர்களுடனான உறவு பலப்படும். மாணவர்கள் திறமையாகச் செயற்பட்டு பெற்றோர், ஆசிரியர்களிடம் பாராட்டைப் பெறுவார்கள்.

## துலாம்:

யோகமான வாரம். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். சுயதொழிலில் முன்னேற்றம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் சேர்வார்கள். சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். உத்தியோகத்தில் உயர்பதவிகள், சம்பள உயர்வு என்பன கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

## விருச்சிகம்:

இன்பமான வாரம். தனவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நண்பர்கள், உறவினர்களின் சகாயம் கிடைக்கும். அசையாச் சொத்துகளை வாங்கும் சந்தர்ப்பம் உண்டாகும். உத்தியோகத்தில் வரவேற்பு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும்.

வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். பெண்களுக்குத் திருமண வாய்ப்புகள் வலிய வரும். நீண்டகாலம் காணாதிருந்த நண்பரைக் கண்டு மகிழ்வார்கள். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும். திருமண வாய்ப்புகள் கைகூடிவரும்.

## தனுசு:

அலைச்சல் மிகுந்த வாரம். தொழில் விடயமாய் நிறைய அலைய வேண்டிவரும். சிலர் அரச வேலை தேடி அலைவார்கள். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் உடல்நலக் கோளாறு காரணமாக மருத்துவ உதவியை நாடுவார்கள்.

சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள். பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு வங்கிகளின் உதவியை நாடுவார்கள். சிலர் வெளிநாடு செல்வதற்கான வேலைகளுக்காக கடும் முயற்சி செய்ய வேண்டிவரும்.

## மகரம்:

நன்மையான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். விவசாயத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

அரசால் அனுகூலம் உண்டாகும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். வரவேண்டிய பணம் வசூலாகும். உத்தியோகத்தில் திறமை பளிச்சிடும். உயர்வுகள் தானே கிடைக்கும்.

## கும்பம்:

சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். உடலில் உபாதை உண்டாகும். அரச காரியங்கள் இழுபறியாகும். வேலைச்சுமையால் சோர்வு அடைவார்கள்.

எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். வெளியூர்ப் பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. அடுத்தவரின் விஷயங்களில் தலையிடாதிருப்பது நன்று.

## மீனம்:

அனுகூலமான வாரம். திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். குடும்பத்தில் அமைதி நிலவும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பழைய சொத்தை விற்றுப் புது மனை வாங்குவார்கள். பழைய கடன் பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டாகும்.

அந்நிய நாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். சகோதர உறவு பலப்படும். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் செல்வாக்கு கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகள் மதிப்பார்கள்.



# வேற்றுக் கிரகவாசிகளை சில ஆண்டுகளில் சந்திப்போம்!

இடந்த சில மாதங்களுக்கு முன் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா காணொலி (வீடியோ) ஒன்றை தனது இணையத் தளத்தில் வெளியிட்டது. அதில் நிலவில் மனித உருவம் நடப்பது போன்ற காட்சிகள் உள்ளன. அது வேற்றுக்கிரகவாசியாக இருக்கலாமோ என்ற பரபரபரப்பை உலகம் முழுவதும் ஏற்படுத்தியது.

அந்த வீடியோ யூ- டியூப் தளத்தில் பதிவேற்றபட்டது . சில நாள்களிலேயே உலகம் முழுவதும் 20 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பார்த்து சிலர் பரவசப்பட்டார்கள், அநேகர் இது ஏமாற்றுவேலை என்று நம்ப மறுத்தார்கள். கடைசியில் அது வெறும் தூசுதான் என்று விளக்கமளித்து பரபரப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது நாசா.

இதே போன்று அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தின் ஹௌஸ்டன் நகர வானில் மேகங்களுக்கு மத்தியில் ஒரு வித்தியாசமான பொருளைப் பல மக்கள் புகைப்படம் எடுத்து தமது டுவிட்டர் மற்றும் ஏனைய சமூகத் தளங்களில் வெளியிட்டிருக்கிறார்கள்.

அப்பொருள் வட்ட வடிவில் வித்தியாசமான ஒளிகளுடன் ஒரு மர்ம பறக்கும் தட்டு போன்ற தோற்றத்தில் இருந்தது . உண்மையில் நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தில் வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்களா?அவர்களை நாம் எப்போது சந்திப்போம். இந்த கேள்வி நமக்கு மட்டுமல்ல விண்வெளி விஞ்ஞானிகளுக்கும் தீர்க்கப்படாத கேள்வி.

## உயிர்களைத் தேடுவது அசாத்தியமான பணி

நிண்ட நெடுங்காலமாகவே வானவியல் விஞ்ஞானிகளுக்கு பிரபஞ்சத் தனிமையில் நாம் இருக்கிறோமா? என்ற கேள்வி ஏற்பட்டது. இந்தப் பரந்த பிரபஞ்சத்தை ஆராயவும், தெரிந்து கொள்ளவும் நாம் மட்டுமே முயற்சி செய்கிறோமா, நமக்குத் துணையாக வேற்று கிரகவாசிகள் இல்லையா என்ற ஆதங்கம் இருக்கிறது.

விஞ்ஞானிகள் செயற்கைக் கோள்களையும், 'கலீலியோ' போன்ற வானில் மிதந்து கொண்டே ஆராய்கிற டெலஸ்கோப்புகள் மற்றும் பூமியில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான டெலஸ்கோப்புகளையும் கொண்டு இந்த பிரபஞ்சத்தை துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வேற்றுக் கிரகவாசிகளைத் தேடுவது விஞ்ஞானிகள் உட்பட அறிவியல் ஆர்வம் கொண்ட அனைவருக்குமானது. இதன் வெளிப்பாடாகவே பறக்கும் தட்டு கதைகள். பறக்கும் தட்டுகள் உண்மையில்லை என்கிறது அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா. ஆனால், கென்னத் ஆர்னோல்ட் என்பவர் மூன்றடி வெள்ளி மனிதர்கள் என்ற நூலை வெளியிட்டு பலகோடி டொலர்கள் சம்பாதித்தார். ஹர்பெர்ட் ஜோர்ஜ் எழுதிய உலகங்களுக்கிடையே போர், போன்ற நாவல்களும், மென் இன்பிளாக், மார்ஸ்ஆட்டாக், அவதார் போன்ற திரைப்படங்களும் வந்துள்ளன.

நாம் வாழும் பூமி மிகப் பிரமாண்டமான பிரபஞ்சத்தின் ஒருபகுதியே. இதில் உயிர்களைத் தேடுவது அசாத்தியமான பணியாகும். பல சமன்பாடுகள், டெலஸ்கோப்புகள், ஒளியுணர் கருவிகள், டிஸ் அண்டனாக்கள், செயற்கைக்கோள்கள் மூலமாக விண்வெளியில் பிற கிரகவாசிகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

## சிலநூறு கிரகங்களில் வளர்ச்சியடைந்த உயிர்கள் வசிக்கலாம்

எல்லையற்ற இந்த பிரபஞ்சத்தில் வேற்று கிரகவாசிகள் நிச்சயமாய் இருப்பார்கள் என்கிறார் பிராங்டிரேக் என்ற விஞ்ஞானி. அவரின் கணிப்புப்படி நம் சூரியன் அங்கம் வகிக்கும் ஆகாயகங்கை(milkey way) நட்சத்திர மண்டலத்தில் 60 கோடி கிரகங்களில் உயிர் வசிக்கலாம். அதிலும் சிலநூறு கிரகங்களில் வளர்ச்சியடைந்த உயிர்கள் வசிக்கலாம் என்கிறார். இந்த முடிவை ஒரு சமன்பாட்டின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.



N=n.p1,p2,p3,p4,t1/T

N-வெளியுலகசமூகஎண்ணிக்கை.

n- பால்வெளிமண்டல நட்சத்திரங்களின் எண்ணிக்கை.

p1-நட்சத்திரங்களைச் சுற்றி கிரகங்கள் இருப்பதற்கான நிகழ்தகவு.

p2-கிரகத்தில் உயிர் தோன்றுவதற்கான் நிகழ்தகவு.

p3- நுண்ணிய பரிணாம வளர்ச்சிக்கான நிகழ்தகவு.

p4-நுண்தொழில் சகாப்த நிகழ்தகவு.

t1- தொழில் கலை சகாப்த நிகழ்தகவு.

T - பால்வெளிமண்டலத்தின் வயதுடன் ஒப்பிடக்கூடிய கால அளவு.

இந்தச் சமன்பாட்டை வைத்துக் கொண்டு ஆகாயகங்கை நட்சத்திர மண்டலத்தில் தேட ஆரம்பித்தால் தேடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

## விண்வெளி மனிதர்களுக்கான முதல் செய்தி

வேற்றிகிரக மனிதர்களைத் தேடுவதற்கு 'சேதி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள் (seti - search fore extra terrestrial intelligence). 1974 நவம்பர் 16 இல் நமது சூரியனுக்கு ஓர் ஒளியாண்டு (ஒரு நொடியில் ஒளிசெல்லும் வேகம் ஒரு லட்சத்து 80 ஆயிரம் கீலோமீற்றர், இவ்வளவு வேகத்தில் நாம் போனாலும் சீரிஸ் நட்சத்திரத்தை அடைய ஒரு ஆண்டு ஆகும்) தூரத்தில் உள்ள சீரிஸ் நட்சத்திரத்திற்கு மின் அலைகள் மூலம் விண்வெளி மனிதர்களுக்கான முதல் செய்தி அனுப்பப்பட்டது.

நாம் அனுப்புகிற செய்தி சரியான நட்சத்திரதிற்கு போய்ச் சேருமா? சந்தேகம் தான். ஏன் என்றால் பிரபஞ்ச வெடிப்பு கொள்கைப்படி பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் ஒரு மையத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. நாம் செய்தி அனுப்பிய நட்சத்திரம் ஒரு ஒளியாண்டு தூரத்தில் இருப்பதாக வைத்துக் கொண்டால், நாம் பார்க்கும் நட்சத்திரத்தின் ஒளி ஒரு ஆண்டுக்கு முன் அந்த நட்சத்திரத்தில் இருந்து புறப்பட்டு வந்த ஒளியாகும்.

இந்தச் சூழ்நிலையில் நாம் செய்தி அனுப்புவதோ, பெறுவதோ மிகமிக சிரமமான பணியாகும். வேறு என்ன தான் வழி ? விண்வெளி மனிதர்கள் செய்தி அனுப்பினால் பெறுவதற்காக 1985 முதல் ஹார்வேர்ட் பல்கலைக் கழகத்தில் மாபெரும் அலைதிரட்டி செயல்பட்டு வருகிறது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

## விஞ்ஞானிகள் சிலரின் நம்பிக்கை





தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**வடகொரியாவின் அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை நிறுத்தவோ அல்லது தடை செய்யவோ புதிய பொருளாதாரத் தடைகள் வடிவமைக்கப்படவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் வெளிப்படையாகத் தெரிவித்தனர்.**

அமெரிக்கப் பொருளாதாரத் தடைகள், வடகொரியாவுக்கு எதிரான அமெரிக்க அச்சுறுத்தல்களின் தீவிரப்பாடு குறித்து சீனா மற்றும் ரஷ்யாவின் ஆட்சேபனைகளையும், ஜேர்மன் மற்றும் பிரான்ஸின் கவலைகளையும் ஆத்திரமூட்டும் வகையில் மீறுகின்றன. ஐ.நா. வீட்டோ அதிகாரத்தைக் கொண்டிருக்கும் சீனா மற்றும் ரஷ்யா இரு நாடுகளுமே அண்மையில் விதிக்கப்பட்ட ஐ.நாவின் சமீபத்திய பொருளாதாரத் தடைகளை ஒப்புக்கொண்டன. என்றாலும், வடகொரியாவை முடக்கி, ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்கும் பொருளாதார மற்றும் அரசியல் முறிவைத் தூண்டும் ஒட்டுமொத்த வங்கியியல் கட்டுப்பாடுகளை எதிர்த்தன.

வடகொரியாவின் அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை நிறுத்தவோ அல்லது தடை செய்யவோ புதிய பொருளாதாரத் தடைகள் வடிவமைக்கப்படவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் வெளிப்படையாகத் தெரிவித்தனர். வொஷிங்டனின் ஐ.நா. தூதர் நிக்கி ஹேலி பின்வருமாறு அறிவித்தார்: ''கிம் இன் நடத்தையை இது அவசியம் மாற்றும் என்று அர்த்தமல்ல.''

பதிலாக, வடகொரிய ஆட்சியை எப்பொழுதும் இயங்கவிடாது கட்டுக்குள் வைப்பதற்கும், அணுசக்தித் தாக்குதலுக்கான போலிக் காரணமாக வொஷிங்டன் அதைப் பற்றிக்கொண்டு இராணுவ விடையிறுப்பைத் தூண்டுவதற்கும் இந்தப் பொருளாதாரத் தடைகள் நோக்கம் கொண்டிருக்கின்றன. ''நாங்கள் போரை விரும்பவில்லை'' என்று ஹேலி செய்தியாளர்களிடம் கூறினார். ஆயினும்கூட, அமெரிக்கா எப்பொழுதும், பதிலடி கொடுக்கிறது எனவும் அல்லது ஓர் இராணுவ அச்சுறுத்தலையிட்டு முன்கூட்டியே தாக்கித் தடுக்கின்றது எனவும் பொய் கூறியே போர்களைத் தொடுத்துள்ளது.

அதே நேரத்தில், தனது பிராந்திய மற்றும் உலகளாவிய மேலாதிக்கத்துக்கு முக்கிய தடையாக அமெரிக்கா கருதும் சீனாவை கீழறுப்பதான பரந்ததொரு மூலோபாய நோக்கத்தின் ஓர் அங்கமாகவே வடகொரியாவுடனான மோதல் தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் பொறுப்பற்ற விஸ்தரிப்பு உள்ளது என்ற யதார்த்தத்தை இந்தப் பொருளாதாரத் தடைகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

''இந்த நடவடிக்கை குறிப்பாக சீனாவை நோக்கி இயக்கப்படவில்லை'' என்று Mnchin கூறினார். ட்ரம்ப் அறிவிப்புக்கு முன்னதாகவே அவர்களுக்குத் தெரிவிக்கச் சீன அதிகாரிகளை அவர் அழைத்தார் எனவும் Mnchin தெரிவித்தார். இந்த மறுப்பும், பெய்ஜிங் உடனான தகவல் பரிமாற்றத்தைச் சுட்டிக்காட்டியமையும், சீனாதான் முக்கிய இலக்கு என்பதை மட்டுமே உறுதிப்படுத்துகிறது.



**அமெரிக்க அழுத்தத்துக்கு வெளிப்படையாக எதிர்வினை ஆற்றுவது போல, ஐரோப்பிய ஒன்றியம் வடகொரியாவில் முதலீடு மீதான தடை உட்பட ஐரோப்பிய ஒன்றிய எண்ணெய் ஏற்றுமதிகள் மீதான அதன் சொந்தப் பொருளாதாரத் தடைகளையும் அறிவித்தது**

ஏற்கனவே பெய்ஜிங், அமெரிக்க பொருளாதாரத் தடைகள் குறித்த நகர்வுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சீனாவின் மத்திய வங்கி, ஐ.நா. பொருளாதாரத் தடைகளைக் கடுமையாகச் செயற்படுத்த நிதி நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது என ராய்ட்டர்ஸ் பத்திரிகை அறிவித்தது. அவரது வழமையான குண்டர் பாணியில், ட்ரம்ப் இதை ஒரு வெற்றியாகக் கூறினார். சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குக்கு அவர் நன்றி தெரிவித்தமையோடு, இந்த நடவடிக்கை ''மிகவும் தைரியமானது'' என்றும் ''ஓரளவு எதிர்பாராதது'' என்றும் தெரிவித்தார்.

அதே நாளில், அமெரிக்க அழுத்தத்துக்கு வெளிப்படையாக எதிர்வினையாற்றுவது போல, ஐரோப்பிய ஒன்றியம் வடகொரியாவில் முதலீடு மீதான தடை உட்பட ஐரோப்பிய ஒன்றிய எண்ணெய் ஏற்றுமதிகள் மீதான அதன் சொந்த பொருளாதாரத் தடைகளையும் அறிவித்தது.



முன்னதாக, சீனாவும் ரஷ்யாவும், வடகொரியாவுக்கு எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தும், வடகொரியத் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் தடை விதிக்கும் மற்றும் வெளிநாட்டு வருமானத்துக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும் அந்த நாட்டின் ஜவுளி ஏற்றுமதிகளைத் தடை செய்யும் ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் பொருளாதாரத் தடைகளுக்கு வாக்களித்தன. ஓகஸ்டில் பியோங்யோங்குக்கு எதிராக விதிக்கப்பட்ட மற்றொரு சுற்று ஐ.நா. பொருளாதாரத் தடைகளை இது



தொடர்ந்தது.

பல மாதங்களாக, வடகொரியா அதன் ஏவுகணை மற்றும் அணுஆயுதச் சோதனைகளைத் தற்காலிக நிறுத்தம் செய்வதற்குப் பதிலீடாக, அமெரிக்கா, கொரிய தீபகற்பம் மீதான தனது இராணுவப் பயிற்சிகளை நிறுத்துவதற்கு ஒப்புக்கொள்ளச் செய்யும் சீனா மற்றும் ரஷ்யாவின் ''முடக்கத்துக்கான - முடக்கம்'' முன்மொழிவுகளை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

**அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தெஹ்ரானுடன் கையொப்பமிட்ட 2015 உள்நாட்டு அணுஆயுத ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள ட்ரம்ப் நிர்வாகம் அச்சுறுத்திய போது, அமெரிக்க போர்வெறி மேலும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது.**

இரண்டு தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அமெரிக்க நிர்வாகங்கள், வடகொரிய ஆட்சியுடன் மேற்கொள்ளப்பட்ட முந்தைய உடன்படிக்கைகளைக் கிழித்தெறிந்துவிட்ட நிலையில், எந்தவொரு சமாதான உடன்படிக்கை மீதும் இந்த நிராகரிப்புத் தொடர்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தெஹ்ரானுடன் கையொப்பமிட்ட 2015 உள்நாட்டு அணுஆயுத ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள ட்ரம்ப் நிர்வாகம் அண்மையில் அச்சுறுத்திய போது, அமெரிக்கப் போர்வெறி மேலும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது. ஈரான் ஒப்பந்தம் தொடர்பாக மறுதலிப்பும், வடகொரியா உடனான எந்தவோர் ஒப்பந்தத்தையும் தடுக்கும் வொஷிங்டனின் உறுதிப்பாடு தொடர்பான இன்னுமொரு தெளிவான சமிக்ஞையையும் அனுப்புகிறது.

சமீபத்திய அமெரிக்க நடவடிக்கைகளுக்கு பெய்ஜிங் இன்னும் பகிரங்கமாக விடையிறுக்கவில்லை என்றாலும், ட்ரம்பின் ஐ.நா. உரைக்கு எச்சரிக்கையுடன் எதிர்வினையாற்றியது. அண்மையில் People's Daily தலையங்க எதிர்ப்புறக் கட்டுரை பின்வருமாறு தெரிவித்தது: ''கொரிய தீபகற்பம் விளிம்பில் உள்ளது, இந்த மோசமான பதற்றங்கள், அதிகரித்த வார்த்தைகளாலும் செயல்களாலும் உருவாகின. நெஞ்சை அதிரவைக்கும் ட்ரம்பின் அரசியல் உதவப்போவதில்லை, வடகொரிய ஆட்சியின் நிலைமை ஆபத்தில் உள்ளதால், மேலும் அபாயகரமான கொள்கைகளைக் கூடத் தொடருமாறு DPRK (வட கொரியா) ஐ மட்டும் கட்டாயப்படுத்தும்.''

தலையங்கம் ஒரு வேண்டுகோளை வெளியிட்டது: ''சீனா, DPRK ஐ தனது சொந்த நலன்களுக்காக தக்க வைத்துக்கொள்ள அழுத்தம் கொடுப்பதற்குப் பதிலாக, வடகொரிய விரிவாக்கத்தின் சுழற்சியை உடைக்கவும், அதனுடனான பேச்சில் ஈடுபடவும் அமெரிக்கா அதன் பெரும் வல்லமையையும் செல்வாக்கையும் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டும்.''

அந்த வேண்டுகோள், மில்லியன் கணக்கில் உயிர்களைக் கொன்றொழிக்கும் கொரிய தீபகற்பம் மீதான பேரழிவு கரமான மோதல்களின் அபாயத்தை அதிகரிக்கச் செய்யும் போர் மற்றும் அணுஆயுத நிர்மூலமாக்கல் தொடர்பான போர்வெறி கொண்ட அச்சுறுத்தல்களை விடுக்கும் அமெரிக்க நிர்வாகத்தின் காதுகளில் செவிடன் காதில் ஊதிய சங்காகின.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்ப மான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக் கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.

133




## அத்தியாயம் - VIII

## வன்னியில் அனுபவித்த இன்னல்கள்

தொண்ணூறுகளின் நடுப்பகுதியிலிருந்து இறுதிப் பகுதிவரை நாம் வன்னியில் வசித்து வந்தோம். அப்பொழுது, மூன்று வகைப்பட்ட மக்கள் சமூகத்தை நாம் வன்னியில் காணக் கூடியதாக இருந்தது. ஒன்று, உள்ளூர் வாசிகள். இரண்டாவது யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள். மூன்றாவது உள்ளூரில் இடம்பெயர்ந்த வன்னி மக்கள். (1999 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில், ஓயாத அலைகள் - 3 இராணுவ நடவடிக்கையின் மூலம் வன்னி மாநிலத்தை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்தமையைத் தொடர்ந்து உள்ளூரில் இடம்பெயர்ந்த வன்னி மக்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பிச் சென்று தமது இயல்பான வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர் எனப் பின்பு அறிந்தோம்). இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் முற்றாகவே வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. சில மூடை, முடிச்சுகளுடன் வன்னிக்கு வந்த இவர்களுக்கு இருப்பிடம் இருக்கவில்லை. வேலை வாய்ப்பும்கிடைக்கவில்லை. இவைதான் இவர்களது முக்கிய பிரச்சினையாக இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஏதிலிகளான நிலையிலிருந்தே இவர்கள் மீண்டும் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

பயிர் செய்யக்கூடிய நிலங்களைத் தெரிவுசெய்து, புதிய குடியேற்றத் திட்டங்களை அமைத்து, இவர்களை குடியேற்றுவதற்குப் புலிகள் அமைப்பின் சமூக பொருளாதாரப் பிரிவுகள் கடும் முயற்சிகளை எடுத்தன. இது ஒருபுறமிருக்க, சுயமரியாதை கொண்டவர்களும், தங்கள் வழியைத் தாங்களே பார்த்துக்கொள்கின்றனர் எனக் கூறித் தனி வழி சென்றனர். வெளிநாடுகளிலுள்ள தமது சொந்த பந்தங்களிடம் இருந்து நிதியுதவியைப் பெற்று இவர்கள், குடிசைகளை அமைத்து ஒருவாறு நிலைமையைச் சமாளித்தபோதும், குடும்ப வாழ்வை ஓட்டக்கூடிய வேலை வாய்ப்பைப் பெறமுடியவில்லை. வெளிநாடுகளிலிருந்து உதவிபெற முடியாத ஏழ்மையான மக்களே பெரும் பாதிப்புக்கு ஆளாகினர். இவர்கள் விடுதலைப் புலிகளிடமிருந்தும், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் சிறிய உதவிகளைப் பெற்று அகதி முகாம்களில் மிகவும் அவலமான வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். பணமின்றி, குடியிருக்க வசதியின்றி, விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட இந்த மக்கள், செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொடுத்த பிளாஸ்ரிக் விரிப்புகளை மரங்களின் கீழ் கட்டி அவற்றுக்குள் குடியிருந்தனர். வீதியோரங்களில் அவர்கள் வசித்த பகுதியால் நாங்கள் பல தடவைகள் சென்றிருக்கின்றோம். மழைகொட்டும் வேளைகளில், பிளாஸ்ரிக் கூடாரங்கள் அருகே, முற்றாகத் தோய்ந்து நனைந்தபடி குளிரில் அவர்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றமையையும் மழைநீர் வெள்ளமாகப் பெருகி அவர்கள் வசித்த சூழலை சேறும் சகதியுமாக மாற்றியிருப்பதையும் நாம் நேரில் கண்டிருக்கின்றோம். 1996, 1997 ஆம் ஆண்டுகளில், வன்னியில், கொடிய மலேரியா நோய் பரவியபோதும் இடம்பெயர்ந்த மக்கள் பேரவலத்துக்கு ஆளாகினார்கள். பொருளாதாரத் தடையால் மருந்துகள் பெறமுடியாத சூழலில், வீதிகளோரமும் மூலைமுடுக்குகளிலும் மலேரியா நோயால் பீடிக்கப்பட்ட மக்கள் நடுநடுங்கியபடி போகுமிடம் தெரியாமல் அவஸ்தைப்பட்டனர். மலேரியா தொற்றி, உடலை எரிக்கும் காய்ச்சலையும் அதனைத் தொடர்ந்துவரும் குளிரையும் சமாளிப்பதற்காக, போசாக்குக் குறைவால் துவண்டுபோன தமது உடலை, துவாய் அல்லது மெல்லிய போர்வையால் மூடிக்கொண்டு வீதிகளில் அலைகின்றமையையும் நாம் கண்டிருக்கின்றோம். தாய்மார்கள் தங்கள் நோயுற்ற குழந்தைகளைச் சுமந்த வண்ணம் கொட்டும் மழையில் அல்லது சுட்டெரிக்கும் வெய்யிலில் மருத்துவமனைக்குச் செல்வதற்காக பஸ் தரிப்பு நிலையங்களில் பல மணிநேரமாகக் காத்து நிற்கின்றமையையும் நாம் பார்த்திருக்கின்றோம். பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்றமையைவிட கால் நடையில் செல்வது உகந்தது என எண்ணி வீதியோரமாகத் தள்ளாடியபடி நடந்து செல்லும் நடைபிணங்களையும் நாம் காணக்கூடியதாக இருந்தது.











சொந்த முயற்சியால் பலர் வேலை தேட முயற்சித்தனர். அதன்போதும் வேலைவாய்ப்பே பலருக்குப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. இதனால், ஏற்பட்ட பணநெருக்கடி இடம் பெயர்ந்த யாழ்ப்பாண மக்களின் சுய கௌரவத்தையும் தனித்துவத்தையும் பாதித்தமையுடன் அவர்களை துன்பத்தின் எல்லைக்கே துரத்திச் சென்றது. பொருளாதாரத் தடைகளும், வாழ்க்கைச் செலவு உயர்வும், உணவுக்காகப் பணத்தைச் செலவிடமுடியாத நிலைக்குப் பல குடும்பங்களைத் தள்ளியது. பட்டினியால் பல குடும்பங்கள் அவலப் படுகின்றமையைக் கேள்வியுற்றதும் விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு அமைப்பினர் இந்த அவலப்படும் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்து உதவினர். வன்னி முழுவதிலும் போசாக்கின்மை பரவியிருந்தது. போசாக்கின்மையால், பானை வயிறும், மெலிந்த காலும், சுருங்கிய தோலும் செம்பாட்டு நிற முடியுமாகக் குழந்தைகள் காட்சியளித்தன. மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற பொதுவான நோய்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் சாதாரண காய்ச்சலுக்குக் கொடுக்கப்படும் ‘பரசித்தமோல்’ போன்ற மாத்திரைகளுக்கும் கூடத் தட்டுப்பாடு நிலவியது. இந்த நிலைமை மக்களின் அவலநிலையை மேலும் மோசமாக்கியது. இதனால், உயிரைப் பறிக்கும் நோய்களுக்கு மக்கள் ஆளாகும் ஆபத்து நிலவியது.

(தொடரும்...)




# படத்தின் எதிரொலி

## கமலை முந்திக் கொண்டு

# அரசியல் ‘சாக்கடை’யில் விழுவாரா விஜய்?

மெர்சல் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து நடிகர் விஜய் புதிய கட்சியைத் தொடங்குவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் வகையில் ரஜினியும், கமலும் அரசியலில் குதிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. குறிப்பாக கமல் தனது புதிய கட்சி பற்றி அறிவிப்பார் எனக் கூறிப் பரபரப்பை ஏற்படுத்தினார். ஆனால், அதற்கான எந்தப் பணிகளும் நடைபெறாதமையால், அவரது அரசியல் பற்றி மக்கள் சற்று சலிப்பான மன நிலைக்கு வந்துள் ளனர்.

இந்த நிலையில், ரஜினி, கமல் இருவரையும் மெர்சல் ஆக்கும் வகையில் புதிய எதிர்பார்ப்பை இளைய தளபதி விஜய் உருவாக்கி இருக்கிறார். மெர்சல் படம் வெளியான முதல் நாளே அரசியல் தீ பயங்கரமாக பற்றி எரியத் தொடங்கி விட்டது.

மத்திய அரசைத்தாக்கும் வகையில் படத்தில் வரும் வசனங்கள் இருக்கிறார் எனத் தகவல்கள் பரவியதும் ‘மெர் சல்’ பற்றி மக்களிடம் ஒருவித எதிர்பார்ப்பு உருவாகி இருக்கிறது. டிஜிட்டல் இந்தியா பற்றியும் ஜி.எஸ்.ரி. வரி விதிப்புப் பற்றியும் தாக்கிப் பேசப்படும் வசனங்கள் ரசிகர்கள் மத்தியில் கரவொலியை ஏற்படுத்துவதில் இருந்து இதை நன்கு உணர முடிகிறது.

இது மட்டமன்றி, விஜய் பேசும் பல வசனங்கள் இன்றைய அரசியல் வாதிகளையும் ஆட்சியாளர்களையும் மெர்சலாக்கி உள்ளன. ஏற்கனவே



விஜய் தமது முந்தைய படங்களிலும் அரசியலைச் சாடும் வசனங்கள் பேசியுள்ளார்.

2ஜி ஊழல் பற்றிக் கூட அவர் ஒரு படத்தில் சூடாக வசனம் பேசினார். ஆனால், மெர்சல் பட வசனங்கள் விஜய்யின் அரசியல் ஆக்ரோஷத்தை அதிகப்படுத்திக் காட்டுகின்றன என உள்ளன.

ஜி.எஸ்.டி. வரி 7 சதவீதம் வாங்குகிற சிங்கப்பூரில் மருத்துவம் இலவசம். ஆனால், 28 சதவீதம் ஜி.எஸ்.ரி. வரி வாங்குகிற இந்தியாவில் மருத்துவம் இலவசமில்லை என்று அவர் பேசும் வசனத்துக்கு ரசிகர்களிடம் அதிக வரவேற்பு உள்ளது.

அதுபோல, நான் போட்டு இருக்கிற டிரஸ்ஸும், பேசுகிற பாஷையும் தான் பிராப்ளம்னா... மாற வேண்டியது நான் இல்ல நீங்கதான், மனிதாபிமானம் என்கிறது ஸ்பெஷல் குவாலிட்டி இல்ல, ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய பேஷிக் குவாலிட்டி, எப்பல்லாம் நாம பெரிய

28 சதவீதம் ஜி.எஸ்.ரி. வரி வாங்குகிற இந்தியாவில் மருத்துவம் இலவசமில்லை என்று அவர் பேசும் வசனத்துக்கு ரசிகர்களிடம் அதிக வரவேற்பு உள்ளது.



ஆள் என்ற தலைக்கனம் வருகிறதோ, அப்பவெல்லாம் ஏர்போர்ட் வந்தால் நாம் ஒரு சாதாரண ஆள் என்று செக்கிங்கில் சொல்லிடுவாங்க என்பன போன்று விஜய் பேசும் சீர்திருத்த கருத்து வசனங்களும் சூட்டைக் கிளப்புகின்றன.

மொத்தத்தில் ‘மெர்சல்’ படம் நடிகர் விஜய்யின் அரசியல் உலக பிரவேசத்துக்கு மிக வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

ஒரு குழந்தை பிறக்கணும்னா 10 மாசம். ஒரு தலைவன் உருவாக ஒரு யுகம் என்ற விஜயின் வசனம் இதை உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, விஜய் அரசியலுக்கு வருவாரா? என்ற எதிர்பார்ப்பை எகிற செய்துள்ளது.

நடிகர் விஜய்க்கு சினிமா மட்டுமல்ல.... அரசியலிலும் ஒரு கண் உண்டு. அவர் செய்து வரும் நலத் திட்ட உதவி நிகழ்ச்சிகளை நன்கு உன்னிப்பாகக் கவனித்து வருபவர்களுக்கு இது தெள்ளத்தெளிவாகப் புரியும்.

அரசியல் மீதான தனது ஆசையை, விருப்பத்தை 2009 ஆம் ஆண்டிலேயே விஜய் வெளிப்படையாகக் கூறி விட்டார். புதுச்சேரியில் நடந்த ஒரு விழாவில் அவர் பேசினார். அதன் போது, அவர் அரசியலுக்கு வருவேன். - என்றார்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், ரூபாய் போட்டு செல்லாது என்ற அறிவிப்புக்கு எதிர்ப்பாகவும் அவர் வெளியிட்ட அறிக்கைகள் அவரிடம் உள்ள அரசியல் ஆர்வத்தை வெளிப்படுத்தின.

ராகுல்காந்தியை அவர் சந்தித்துப் பேசினார் அப்போது விஜய் மீதான அரசியல் பார்வை அதிகரித்தது. இன்று ‘மெர்சல்’ விஜய்யின் அரசியல் பிரவேச எதிர்பார்ப்பை உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

விஜய் தீவிர அரசியலுக்கு வர வேண்டும் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. விஜய் ரசிகர்கள் அனைவருமே அவரது அரசியல் அதிரடிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ‘மெர்சல்’ படத்துக்காக ரசிகர்கள் வைத்திருந்த பதாகைகள் அனைத்தும் இதையே பிரதிபலித்தன.

விஜய் மட்டும் அரசியலுக்குத் தயார் என்று ஒரே ஓர் அறிவிப்பு வெளியிட்டால் போதும், ரசிகர்கள் சரவெடியாக மாறி விடுவார்கள். ஆனால், ரசிகர்களை விஜயின் தந்தை எஸ். ஏ.சந்திரசேகர் கட்டுப்படுத்தி வைத்துள்ளார்.

விஜயின் திரை உலக வெற்றிகளுக்கு அடித்தளங்கள் அமைத்துக் கொடுத்த எஸ்.ஏ.சந்திரசேகர் அடுத்தக் கட்டமாக அரசியல் வானிலும் விஜய் வெற்றிகளைக் குவிப்பதற்கான அடித்தளக் கட்டுமானத்தை உருவாக்கி வருகிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினை, ஜல்லிக் கட்டு பிரச்சினை, கதிராமங்கலம் பிரச்சினை என்று ஒவ்வொரு முக்கிய பிரச்சினைகளின் போதும் விஜயின் கருத்தையும் குரலையும் அவர் மிகத் தெளிவாக வெளிப்படச் செய்தார். அந்த வரிசையில் தற்போது மெர்சல் மூலம் விஜய் அரசியலுக்கு விரைவில் வரப்போகின்றமையை அவர் கூறி இருக்கிறார் என ரசிகர்கள் கருதுகிறார்கள்.

எனவே தான் விஜயை எதிர்த்து குரல் கொடுத்த பா.ஜ.க. தலைவர்களுக்கு எதிராக ரசிகர்கள் கண்டனக் குரலை உயர்த்தி உள்ளனர். விஜய் பேசிய வசனத்தில் என்ன தவறு உள்ளது? என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதே கேள்வியை பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணியும் கேட்டுள்ளார். ஜி.எஸ்.ரி. வரி பற்றி விஜய் பேசும் வசனத்தில் எந்த தவறும் இல்லை என்று டாக்டர் அன்புமணி கூறியுள்ளார். வேறு சில அரசியல் தலைவர்களும் அந்த வசனத்தை ஆதரிக்கிறார்கள்.

‘மெர்சல்’ படத்தில் வரும் வசனங்கள் விஜய் ரசிகர்களிடம் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. முக்கிய நிர்வாகிகள் அனைவரும் விஜய் அடுத்து அரசியலுக்கு வரவேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தி உள்ளனர்.

விஜய் புதிய அரசியல் கட்சி தொடங்க வேண்டும் என்பதே 99 சதவீத ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. விஜய்யும் அந்த முடிவைத் தான் எடுப்பார் என்கிறார்கள்.

தற்போதைய வெற்றிடத்தைப் பூர்த்தி செய்ய விரைவில் அவர் கட்சி தொடங்குவார் என்று அரசியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். இதனால் விஜய் கட்சிக்கு என்ன பெயர் சூட்டுவார்? கட்சிக் கொடி எப்படி இருக்கும்? என்பன போன்ற சூடான விவாதங்கள் உருவாகியுள்ளன. இந்த விவாதங்கள் எழுப்பும் ஓசையே விஜய் அரசியல் வாழ்வை தீர்மானிப்பதாக அமையும். ★



அருட்திரு.
**தமிழ்நேசன் அடிகளார்**

# கண் துஞ்சாது பசி நோக்காது

# இன்னலுற்ற மக்களுக்கு ஓடியோடி உதவினார் இராயப்பு ஆண்டகை

(நேற்றைய தொடர்ச்சி...)

ஈழத்தமிழர் வரலாற்றில் என்றுமில்லாத கொடிய போர்ச்சூழல் நிலவிய காலத்தில் ஆயர் யோசேப்பு ஆண்டகை குரலற்ற தமிழ் மக்களின் குரலாக ஒலித்தார். உண்மைகளை எடுத்துக்காட்டிய, நீதியை வலியுறுத்திய அவருடைய குரல் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஓங்கி ஒலித்தது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள், சொல்லொணாத் துன்பங்கள் போன்றவற்றை உள்நாட்டு ஊடகங்கள் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை நிலவிய அந்த நாள்களில் இவருடைய அறிக்கைகளும், நேர்காணல்களும், தகவல்களும் உண்மை நிலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிச்சம் போட்டுக் காட்டின.

மன்னாரில் 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் இடம்பெற்ற எல். எல். ஆர். சி. அமர்வில் மன்னார் ஆயர், ஏனைய குருக்களோடு இணைந்து மக்களின் பிரச்சினைகளை எழுத்து மூல மாக அறிக்கையாக முன்வைத்தார். காணாமலாக்கப்பட்டவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ. சந்தேக நபர்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், போரால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு போன்ற உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பல விடயங்கள் மற்றும் அரசியல் தீர்வின் அவசியம் போன்ற விடயங்களை அவர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். வன்னியில் இருந்த மக்களில் 146, 679 பேருக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியைக் கேட்டு இலங்கை அரசை ஆட்டம் காணச் செய்தார்.

குரலற்ற மக்களின் குரலாக ஒலித்த ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையுடன் ஆயர் பணியில் 25 வருடங்கள் பூர்த்தி.

21.08.2012ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை ஊடாக விடுத்த வேண்டுகோளின் பேரில் தமிழ் மக்களோடு தொடர்புடைய தீர்க்கப்படவேண்டிய 14 பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் முன்வைத்து அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்தார். ஆனால், இவற்றுக்கான உரிய தீர்வுகள் வழங்கப்படாமையை அவர் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தார்.

**சுயாட்சிக்கு உரித்துடையவர்கள்**

ஜெனீவாவில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற 14 ஆவது சர்வதேச தொடர் வரிசை மதிப்பீட்டு அமர்வில் (Side Event at the 14 th session of the Universal Periodic Review) ஸ்கைப் மூலமாக வழங்கிய உரையில் தமிழ் மண்ணின் நிலைமைகளை விளக்கியதுடன், தமிழ் மக்கள் ஒரு தனியான இனம் என்ற அடிப்படையில் ஒரே நாட்டுக்குள் சுயாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதையும் வலியுறுத்தினார்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 205 தமிழ் கிறிஸ்தவக் குருக்களோடு இணைந்து ஆயர் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

மன்னாரில் 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் சாட்சியம் வழங்கவந்த ஆயர், இலங்கை அரசு நியமித்த எந்த ஆணைக்குழுவும் இதுவரை எதையுமே உருப்படியாகச் செய்யவில்லை என்றும் இந்த ஆணைக் குழுக்கள் வெறுமனே கண்துடைப்புக் கள்தான் என்பதையும் வெளிப்படுத்தி, சாட்சியம் அளிக்க மறுத்து, தான் கொண்டு வந்த அறிக்கையை வாசித்தார். இது போன்று பல சந்தர்ப்பங்களில் மக்களின் உணர்வுகளை, எதிர்பார்ப்புகளைப் பிரதிபலித்தார்.

இதைவிட, ஆட்சியில் இருக்கும் அரசுத்தலைவர்களை, அமைச்சர்களை மற்ற ஆயர்களுடனும், தனியாகவும் காலத்துக்குக் காலம் சந்தித்து மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார். தன்னைச் சந்திக்க வரும் அரச அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த பிரதிநிதிகள் போன்றவர்களுக்குக் கள நிலைமைகளைத் தெளிவாக விளங்கப்படுத்தினார். இவ்வாறு அவர் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார்.

**உயிராபத்துக்கள் மத்தியிலும் துணிவுடன் செயற்பட்டார்**

ஆயர் யோசேப்பு ஆண்டகை இயல்பாகவே இறைவாக்கினருக்குரிய துணிவைப் (Prophetic Courage) பெற்றிருந்தார். துன்புறும் மக்களுக்காக இரங்கும் இரக்க உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்துக்கும் மேலாக காலத்தின் தேவைக்குப் பதில் அளிக்க வேண்டிய ஒரு நல்ல திருச்சபைப் பணியாளனுக்குரிய தெளிவையும் அவர் கொண்டிருந்தார்.

தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் இயேசுவை அவர் தன் கண்முன் கொண்டிருந்தார். அந்த நல்லாயன் வழியில் பயணித்த திருச்சபையின் துணிவுமிக்க பல பணியாளர்கள் பற்றியும் அவர் அறிந்திருந்தார். பேராயர் ஒஸ்கார் றொமேறோ, பேராயர் டெஸ்மன்ட் டூட்டு, அருட்திரு. மேரி பஸ்ரியன், மெதடிஸ்த போதகர் ஜோர்ச் ஜெயராஜசிங்கம் போன்ற திருச்சபைப் பணியாளர்களின் வாழ்வாலும் தியாகத்தாலும் அவர் தூண்டப்பட்டிருந்தார். இவர்களின் பாதையில் உண்மைக்கு சாட்சியாக, ஏழைகளுக்கு மீட்சியாக அவர் திகழ்ந்தார்.



ஆயர் யோசேப்பு ஆண்டகை பணி செய்த காலம் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்ட ஓர் இக்கட்டான காலம். 'யுத்தத்தில் முதலில் கொல்லப்படுவது உண்மை' என்று சொல்வார்கள். தமக்கு வேண்டாதவர்களை, தமக்குசவால்விடுக்கின்றவர்களை ஆளும் தரப்பினர் காணாமலாக்கச் செய்தனர், கொலை செய்தனர். இவற்றையெல்லாம் அவர்கள் மிகவும் சாதுரியமாக, தந்திரமாகச்செய்துமுடித்தனர். இத்தகைய நிலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள்போன்றோரின் பட்டியல் மிகநீண்டது.

**நான் விடுதலைப் புலிகளின் கொலைகளையும், அட்டூழியங்களையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவர்களுடைய கொலைகளைக் கண்டித்திருக்கிறேன். இதனால் கொலை மிரட்டல்களையும் பெற்று இருக்கிறேன். நான் ஒருபோதும் தனிநாட்டை விரும்பவில்லை.**

**உயிருக்கு ஆபத்தான நிலையிலும்...**

இப்படியான உயிராபத்துமிக்க ஒரு காலகட்டத்தில்தான் ஆயர் யோசேப்பு ஆண்டகையின் பணி நடைபெற்றது. அவருடைய உயிருக்கு வெளிப்படையாகவே ஆபத்து இருந்தது. இது தொடர்பான அக்கறையை அன்றைய திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் தன்னைச் சந்திக்க வந்த அன்றைய அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி கொழும்பில் இருந்து மன்னாருக்கு வருகைதந்த சி.ஐ.டி. அதிகாரிகள், எல்.எல்.ஆர்.சி. அமர்வில் இறுதிப்போர்க் காலத்தில் காணாமற்போன ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் தொடர்பாக ஆயர் தெரிவித்த விடயம் தொடர்பாக ஆயர் இல்லத்தில் வைத்து அவரை விசாரித்தனர்.

**அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார்**

ஆயர், மக்களின் அடிப்படைத் தேவைகள், நிவாரணம் வழங்கல், மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார். விடுதலைப் புலிகள், தமிழ் அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினருடனும் அவர் தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்தார்.

மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அவர் பல்வேறு காலகட்டங்களில் கடிதங்களை எழுதினார். அவற்றுக்கு அவரிடமிருந்து பதில்கள் வந்தது மல்லாமல் பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அன்றைய அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை அவர் சந்தித்து மக்கள் நலன்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பல்வேறு தொடர்பாடல்களை, கலந்துரையாடல்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆலோசித்தார். அதே போன்று அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களோடும் நெருங்கியவிதமாகச் செயலாற்றினார்.

**பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்களை எதிர்கொண்டார்**

ஆயர் அவர்களின் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள், தகவல்கள், அறிக்கைகள், நேர்காணல்கள் பலருக்குக் கசப்பாய் இருந்தன. பௌத்த சிங்கள கடும்போக்காளர்கள், அரச தரப்பினர், சிங்களத் திருச்சபைத் தலைவர்கள் எனப் பல்வேறு தரப்பினரிடமிருந்து எதிர்ப்புக்களை, விமர்சனங்களை, கண்டனங்களைஎதிர்கொண்டார்.

இவரை சிங்கள இனவாதிகள் 'மஹா கொட்டியா' அதாவது 'பெரியபுலி' எனவும் 'புலி ஆயர்' (Tiger Bishop) எனவும் அழைத்தனர். 'இவர்தான் பெரிய புலி. கண்ட இடத்தில் இவரைக்கைதுசெய்ய உத்தரவு பிறப்பியுங்கள்' என சிங்களப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் எழுதினர்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# அளவுக்கு மிஞ்சினால் பார்வையும் பறிபோகும்!

சீனாவின் டோங்குவான் பகுதியைச் சேர்ந்த 21 வயது வூ, ஸ்மார்ட்போனில் தொடர்ந்து விளையாடி பார்வையை இழந்திருக்கிறார்.

ஒக்ரோபர் மாதம் வழக்கம்போல் ஸ்மார்ட்போனில் நீண்ட நேரம் விளையாடினார். திடீரென்று வலது கண்ணில் பார்வை குறைந்தது. உடனே தூங்கிவிட்டார். மறுநாள் காலை விழித்தபோது பார்வை முற்றிலும் பறிபோயிருந்தது. உடனே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது விழித்திரை மிக மோசமாகச் சேதமடைந்திருக்கிறது. வயதானவர்களுக்கு மட்டுமே இது போன்ற பிரச்சினை வரும். அளவுக்கு அதிகமான அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட கண், இறுதியில் செயலிழந்துவிட்டது.

நிதித்துறையில் வேலை செய்து வரும் வூ, ஒரு நாளைக்கு 8 மணி நேரம் கணினித் திரையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

வேலையிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன்ஸ்மார்ட்போனில் விளையாட ஆரம்பிப்பார். ஒரு நாளைக்கு 7 மணி நேரம் கூட விளையாடுவார். இதனால் கண்களுக்கு ஓய்வே இல்லாமல் போய்விட்டது. இவரது பார்வையை மீட்க முயற்சி செய்துவருகிறோம்.

சிறிய முன்னேற்றம் தெரிகிறது. ஆனால் அவரால் ஒளியை உணர முடியவில்லை என்று தெரிவித்தார்.





# 50,000 புத்தகங்களுடன் அட்டகாசமான விடுதி!

போர்த்துக்கலின் ஒபிடோஸ் நகரில் உள்ளது 'தி லிட்ரரி மேன் ஹோட்டல்'. இங்கு சுமார் 50 ஆயிரம் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விடுதி, உலகின் மிகச் சிறந்த விடுதி என்று புத்தகப் பிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

30 அறைகள் கொண்ட இந்த விடுதியில் அறைகள், மாடிப் படிகள், சுவர்கள் என்று எங்கு பார்த்தாலும் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வசதியான நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. நாவல்கள், கவிதைகள், வாழ்க்கை வரலாறு, சமையல் என்று பல விதமான புத்தகங்கள் இருக்கின்றன.

ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தால் அதை முடிக்காமல் வைக்க முடியாது. அதற்காக இன்னொரு நாள் தங்கவும் நேரிடலாம். புத்தகத்தை விலை கொடுத்து வாங்கிச் செல்லலாம். ஆனால், அதற்கான கட்டணத்தைக் கேட்டால் மயக்கமே வந்துவிடும்.

அரிய புத்தகங்கள் என்றால் 35 ஆயிரம் ரூபா வரை கொடுக்க வேண்டியிருக்கும். எங்கள் அறையில் தங்குவதற்கு ஓர் இரவுக்கு 5,900 ரூபாய்தான் கட்டணம். இன்னொரு நாள் தங்கிப் படித்துவிட்டுச் செல்வது செலவு குறைந்தது.

இங்கே வரும் வாடிக்கையாளர்கள் கூட எங்களுக்கு நன்கொடையாகப் புத்தகங்களை அனுப்பி வைக்கிறார்கள். அதனால் விரைவில் ஒரு லட்சம் புத்தகங்களை எட்டி விடுவோம் என்று நம்புகிறோம். எங்களைப் போன்ற விடுதிகள் பல நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால், நியூ யோர்க்கில் உள்ளதி லைப்ரரி ஹோட்டலில் 6 ஆயிரம் புத்தகங்களும் போர்ட்லாண்ட், டோக்கியோவில் உள்ள விடுதிகளில் 3 ஆயிரம் புத்தகங்களும்தான் இருக்கின்றன என்கிறார் விடுதியின் உரிமையாளர்.

# வயது தடையில்லை சகலகலா பாட்டி!



இங்கிலாந்தைச் சேர்ந்த 85 வயது ட்ரிஷ் வாக்ஸ்டாஃப், பரசூட்டில் பறந்து சாகசம் செய்திருக்கிறார்.

கடந்த 10 ஆண்டுகளாக மலையேற்றம், பாராக்ளைடிங், சிறிய ஹெலிகளில் பறத்தல் என்று பல சாகசங்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறார் அவர். 70 வயதுக்காரர்களே வயதாகிவிட்டது, என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்கின்றார்கள். வயதானாலும் எதையும் செய்ய முடியும் என்பதைக் காட்டவே நான் சாகசங்களில் ஈடுபட்டு வருகிறேன்.

பயமில்லையா என்று கேட்காதவர்களேஇல்லை. நான் ஓர் இராணுவ வீரரின் மனைவி. போர்க்களத்தில் கூட வாழ்ந்திருக்கிறேன்.

துப்பாக்கி எதிரில் நிற்பதைவிட ஆபத்து ஏதாவது இருக்க முடியுமா? என்று என்னைக் கேட்டால் வீதியைக் கடப்பது தான் பெரிய ஆபத்து என்பேன். மற்ற எதைக் கண்டும் பயமில்லை. என் கணவர் மறைந்த பிறகுதான் சாகசங்களில் இறங்கினேன்.

என் குடும்பம் உற்சாகப்படுத்துகிறது. இது வரை சாகசங்களின் மூலம் சம்பாதித்த ஒரு கோடியே 29 லட்சம் ரூபாவை அறக்கட்டளைகளுக்கு வழங்கியிருக்கிறேன் என்கிறார் 85 வயது ட்ரிஷ்.




# இந்த அப்பாவை நாளை மகளும் கொண்டாடுவார்!

இங்கிலாந்தைச் சேர்ந்த 36 வயது ஷாலோம் பெர் சாலமோன் அமெரிக்காவில் வசிக்கிறார். தன்னுடைய 9 மாதக் குழந்தை ஜோவுடன் சேர்ந்து பல வேடங்களில் ஒளிப்படங்கள் எடுத்து வருகிறார். அந்தப் படங்கள் உலகம் முழுவதும் பிரபலமாகி உள்ளன.

இவரது இன்ஸ்டகிராமில் ஒன்றரை லட்சம் பேர் பின்தொடர்கிறார்கள். ஜோ பிறப்பதற்கு முன்பு பழைய பொருள்களை விற்கும் கடையை நடத்திவந்தேன். எங்கள் நண்பர்கள் அந்தக் கால ஆடைகளை அணிந்து கொண்டு, மேசை, நாற்காலிகளில் அமர்ந்து ஒளிப்படங்கள் எடுத்துக் கொள்வார்கள்.

அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என் மகள் பிறந்தவுடன் அவளுடன் சேர்ந்து வித்தியாசமான ஒளிப் படங்கள் எடுக்கும் எண்ணம் தோன்றியது. ஹவாய் நடனம், காவல் துறை அதிகாரி, தோட்டக்காரர், காட்டு உலா, சமையல்காரர், ஓவியர் என்று பலவிதமான வேடங்களையும் போட்டிருக்கிறேன்.

சிக்கன் வாங்கிய டப்பாவை ஜோவுக்கு ஆடையாக அணிவித்து, நான் சிக்கன் சாப்பிகின்றமை போல் இருக்கும் படமும் தோட்டத்தில் இருந்த சிங்கப் பொம்மையை நானும் ஜோவும் படுத்தபடி பைனாகுலரில் கண்காணிக்கும் படமும் மண் தொட்டியில் மலர்போல் ஜோ இருக்க, நான் தண்ணீர் ஊற்றுகின்றமை போல் இருக்கும் படமும் அதிக மக்களால் விரும்பப்பட்ட படங்கள்.

என் மனைவி கார்லி தான் ஒளிப்படக்காரர். குழந்தையைக் கவனமாக உற்று நோக்கி, சரியான தருணத்தில் படங்கள் எடுப்பது சவாலானது என்கிறார் ஷாலோம்.

# சிறுநீர்ப் பாதையில் தொற்றா? இதோ இருக்கிறதே மலிவான சுரைக்காய்!

சுரைக்காய் குடுவையில் நீர் நிரப்பி, குளிர்ச்சியாக குடித்து வந்தனர் நம் முன்னோர். உடலுக்குக் குளிர்ச்சியையும், ஊட்டத்தையும் தரும் சுரைக்காயில் மருத்துவ குணங்கள் ஏராளம். சுரைக்காய் வெள்ளரி குடும்பத்தைச் சேர்ந்த நீர்க்காய். இனிப்பு, கசப்பு என இரு சுவைகளில் இருந்தாலும், இனிப்புச் சுவை கொண்டதையே நாம் அதிகமாகப் பயன்படுத்துகிறோம்.

ஆண்மைக் குறைபாட்டை நீக்கும் சிறந்த காய் இது. தினசரி உண்டு வந்தால், கல் அடைப்பு நீங்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது. சிறுநீர் பெருக்கத்தைத் தூண்டும், உடலின் வெப்பநிலையையும், பித்தத்தையும் சமநிலைப்படுத்தும்.







இதனை பித்த சமனிசு என்பர். சுரைக்காயில் விட்டமின் பி, சி உள்ளன.

கை, கால்களில் குறிப்பாகப் பாதங்களில் ஏற்படக்கூடிய எரிச்சல் நீங்க, சுரைக்காயின் சதைப்ப குதியை துணியில் வைத்துக் கட்டினால் எரிச்சல் குணமாகும். சுரைக்காயின் சதைப் பகுதியோடு எலுமிச்சம் பழத்தின் சாற்றையும் கலந்து தலையில் தேய்த்து குளித்துவந்தால், குளிர்ச்சி ஏற்படும்.

தினமும் சுரைக்காய் சாறு அருந்தி வந்தால், சிறுநீர் பாதையில் ஏற்படக் கூடிய எரிச்சல், பெண்களுக்கு சிறு நீர்ப்பாதை தொற்றுநோயால் ஏற்படக்கூடிய எரிச்சல் ஆகியவற்றைக் குணப்படுத்தும். குழந்தை பிறந்த பிறகு தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கவும், உடல் எடையை குறைக்க நினைப்பவர்களும், சுரைக்காயுடன் பாசிப்பயிறு சேர்த்து கூட்டு வைத்து சாப்பிடலாம். உடலில் உள்ள தேவையற்ற நீர்ச்சத்துக்கள் நீங்கி எடை குறையும்.

சுரைக்காயின் சதைப்பகுதியை அரைத்து நெற்றியில் தடவிவர, கண் எரிச்சல் குணமாகும். வெயிலில் அதிகமாக அலைவதால் ஏற்படும் தலைவலி, ஒற்றைத்தலைவலி ஆகியவற்றுக்கு இந்த சுரைக்காயின் சதைப் பகுதியை துணியில் வைத்து கட்டியும், அதனை அரைத்தும் பயன்படுத்தலாம்.

மெலனின் குறைபாட்டால் ஏற்படும் அல்புனிசம் பாதிப்பு உள்ளவர்களுக்கு (உடலில் ஆங்காங்கே வெள்ளையாக இருக்கும், சூரியஒளி பட்டால் எரிச்சல் ஏற்படும்) சுரைக்காயை அரைத்துத் தேய்த்து வந்தால், எரிச்சல் குணமாகும்.

பொதுவாகச் சுரைக்காய் குளிர்ச்சி தன்மை வாய்ந்தது. இதனை, குளிர்காலத்தில் பயன்படுத்தும்போது சளி பிடிக்க வாய்ப்பு உள்ளது. எனவே, சுரைக்காயுடன் மல்லி, மிளகுத்தூள், உப்பு ஆகியவை கலந்து சாலட் செய்து சாப்பிடலாம்.

சுரைக்காய் குடுவையில், தண்ணீரை சேமித்து வைத்துக் குடித்து வந்தால் அதிகப்படியாக ஏற்படும் தாகம் குறையும்.

அந்தத் தண்ணீரில் விட்டமின் சத்துக்களும் அதிகமாகும். இந்த நீரில் தேனை வைத்து பாதுகாத்தும் உண்டு வரலாம். இந்தச் சுரை ஓட்டைச் சாப்பிட அல்லது உணவுப்பொருள்கள் வைக்கும் பாத்திரமாகவும் பயன்படுத்தலாம். ★

# மாதவிடாய் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நான்கு, ஐந்து தடவை சாப்பிடுவோம்!

மாதவிடாய் நாள்களில் பெண்கள் சந்திக்கும் சிரமங்கள் அதிகம். சில பெண்களுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே அதற்கான அறிகுறிகள் வெளிப்படத் தொடங்கிவிடும். அப்போது தலைவலி, மூட்டு வலி, முதுகுவலி, கை, கால் வலி போன்ற பிரச்சினைகள் தலைதூக்கும்.

உடலில் சோர்வும் எட்டிப் பார்க்கும். முகப்பருக்களும் சிலருக்குத் தோன்றும். ஆர்வமின்மை, கவனக்குறைவு, முன்கோபம், மனஅழுத்தம் போன்றவைகளும் ஏற்படக்கூடும். தூக்கமின்றி அவதிப்பட நேரிடும். இது வழக்கமானதுதான். மாதவிடாய் நாள்களுக்கு பிறகு சரியாகிவிடும்.

அந்த காலகட்டத்தில் வயிறு தொடர்பான பிரச்சினைகளில் இருந்து விடுபட உணவு விஷயத்தில் பெண்கள் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும். வயிறு நிரம்ப சாப்பிடாமல் உணவை நான்கு, ஐந்து முறையாக பிரித்து சாப்பிடவேண்டும். எளிதில் ஜீரணமாகும், சத்தான உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும்.

உணவில் உப்பின் அளவையும் குறைக்கவேண்டும். உப்பு அதிகம் சேர்த்து பதப்படுத்தப்படும் ஊறுகாய் வகைகள், பலகாரங்களை சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், நொறுக்கு தீனிகள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். மாதவிடாய் சமயங்களில் இஞ்சித் தேநீர் பருகுவது நல்லது.





**மாதவிடாய் காலகட்டத்தில் வயிறு தொடர்பான பிரச்சினைகளில் இருந்து விடுபட உணவு விஷயத்தில் பெண்கள் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும்.**

அது வலியை கட்டுப்படுத்த உதவும். சத்தான காய்கறிகள், கீரை வகைகள், முழு தானியங்கள், பழங்களை சாப்பிட வேண்டும். பால் பருகி வருவதும் நல்லது. மதிய உணவில் முட்டை சேர்த்துக் கொள்ளலாம்.

தக்காளி, ப்ராக்கோலி, சோளம், எலுமிச்சை, ஓரேஞ், வேர்க் கடலை போன்றவற்றை சாப்பிட்டு வருவது உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும்.

வாழைப்பழங்கள், வெண்ணெய், சர்க்கரைவள்ளி கிழங்கு ஆகியவற்றில் பொட்டாசியம் அதிகம் இருக்கிறது. அவைகளை சாப்பிட்டு வருவது நல்ல மன நிலைக்கு பெண்களை கொண்டு செல்லும். குடல் இயக்கத் திற்கும் நலம் சேர்க்கும். கல்சியம், கார்போஹைட்ரேட் உள்ளடக்கிய உணவுகளையும் சாப்பிட வேண்டும். அவை சர்க்கரை அளவை கட்டுப்படுத்தத் துணை புரியும். போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். மூச்சுப்பயிற்சி, யோகா போன்றவற்றை செய்துவர வேண்டும். அவை தலைவலி, தூக்கமின்மை போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும். *

## லட்சக்கணக்கான சிறார் செபமாலை பக்தி முயற்சி

போர்த்துக்கல் நாட்டின் பாத்திமாவில் அன்னை மரியா காட்சியளித்ததன் நூறாம் ஆண்டு நிறைவை ஒட்டி உலகின் பல பகுதிகளில் ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான சிறார் செபமாலை செபிக்கும் பக்தி முயற்சி ஒன்றை 'எயிட் இன் நீட்' அமைப்பு நடத்தியுள்ளது.

18 ஒக்ரோபர் அன்று நடைபெற்ற இப்பக்தி முயற்சியில் இலட்சக்கணக்கான சிறார் கலந்துகொண்டு உலகின் அமைதிக்காகச் செபித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## திருப்பீட பல்சமய உரையாடல் அவை: தீபாவளி செய்தி

கலாசாரங்கள் மற்றும் பழக்க வழக்கங்களின் பன்மைத்தன்மையை உண்மையாகவே மதித்து போற்றுவதன் வழியாக ஒற்றுமையும் நலமும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். சகிப்புத்தன்மையும் ஒற்றுமையும் நிறைந்த ஒரு நலமான சமுதாயத்தை உருவாக்க இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டும் என திருப்பீட பல்சமய உரையாடல் அவை தீபாவளி செய்தியில் தெரிவித்துள்ளது.

# 'மறைகாத்த மாவீரன்' நாட்டுக் கூத்தில் நடித்த யாழ். மறைமாவட்டக் குருக்கள்

## யாழ். ஆயர் நேரில் பார்த்து பாராட்டு



யாழ் மறைமாவட்ட கலை கலாசார பண்பாட்டுக் குழுவின் முயற்சியில் வரலாற்றில் முதற் தடவையாக யாழ். மறை மாவட்ட குருக்களின் நடிப்பில் மணியந்தோட்டத்தில் 10 ஆவது தடவையாக மறைகாத்த மாவீரன் என்ற நாட்டுக்கூத்து மேடையேறிய போதே யாழ். ஆயர் கூத்தை முழுமையாகப் பார்வையிட்டு பங்கு பற்றி சிறப்புச் செய்த குருக்கள் அனைவருக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பாசையூர் அண்ணாவியார் கலாபூசணம் அன்ரனி பாலதாஸ் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் யாழ். மறை மாவட்ட குருக்களின் நடிப்பில் ஏற்கனவே சக்கோட்டை, குருநகர் , இளவாலை, யாழ் பேராலயம், சில்லாலை , ஊர்காவற்றுறை, முழுங்காவில், இரணைப் பாலை,நெடுந்தீவு ஆகிய 9 இடங்களில் மறைகாத்த மாவீரன் என்ற நாட்டுக் கூத்து மேடை ஏறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உண்மையின் எண்ணங்கள்

தூய யோசவ் வாஸ் ஆண்டு கண்டி வாகக்கோட்டை புனித அந்தோனியார் தேசிய திருத்தலத்தில் தேசிய புனித யோசவ்வாஸ் தினமாகக் கொண்டாடப்படும் போது அதில் யாழ். மறை மாவட்டத்தினரும் பங்குபற்றுவர் என்பது சிறப்பு செய்தியாகும். தூய யோசவ் வாஸ் ஆண்டு நிறைவை நெருங்கும் வேளை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் தூய யோசவ் வாஸ் ஆண்டு பற்றிய செய்திகளை நிறைய தந்து கொண்டே வருகிறது.

தனது 59 வருட வாழ்வில் 35வருட குருத்துவப்பணியை புரிந்த இவர் அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றி உள்ளார். இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணி யாற்றிய இவர் இலங்கையின் அப்போஸ்தலர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் முதற் புனிதரான யோசவ் வாஸ் அடிகளார் யாப்பு மூலமான அரசியல் தீர்வை தமிழ் மக்கள் வேண்டி நிற்கும் போது அருள் வரம் பொழிவாராக.

# தேசிய யோசவ் வாஸ் தினம் நவ. 04 கண்டி வாகக்கோட்டையில்




தூய யோசவ் வாஸ் ஆண்டை ஒட்டிக் கத்தோலிக்க தேசிய பொது நிலையினர் ஆணைக் குழுவின் தலைமையில் 4 ஆம் திகதி நவம்பர் மாதம் 2017 அன்று கண்டி வாகக்கோட்டை புனித அந்தோனியார் தேசிய திருத்தலத்தில் தேசிய புனித யோசவ்வாஸ்தினம் கொண்டாடப்படவுள்ளது. கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி விழாவில் கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உட்படப் பல ஆயர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்விற்கு யாழ். மறைமாவட்டத்தில் இருந்து இரண்டு பஸ் வண்டிகளில் செல்லவுள்ளனர். செல்லவிரும்புவோரை பங்குத் தந்தையருடன் தொடர்புகொள்ளுமாறு யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிக்கிறார்.

# 2 ஆம் யோவான் பவுல் கண்காட்சி கண்டு பயனடையுமாறு அழைப்பு

## யாழ். குருமுதல்வர் விடுக்கிறார்




புனித 2ஆம் யோவான் பவுல் பற்றிய கண்காட்சி ஒன்று ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி முதல் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வரை யாழ் புனித மரியன்னை பேராலய வளாகத்தில் அமைந்துள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியா புதுடில்லியில் அமைந் துள்ள நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் இச்சிறப்புக் கண்காட்சியில் புனித 2ஆம் யோவான்பவுலின்வாழ்வு பணி புனிதத்துவம் போன்றவை காட்சிகள் ஒளிப்படங்கள் போன்றவற்றால் சித்திரிக்கப்படும். குருக்கள் துறவியர் பங்கு மக்கள் பாடசாலை மாணவர் என அனைவரும் இக் கண்காட்சியைக் கண்டு பயனடையுமாறு யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் அழைப்பு விடுக்கின்றார்.

# யாழ். திருச்சபை வரலாற்றில் குருக்கள் கூத்தில் நடித்தமை இதுவே முதல் தடவை



## குருமுதல்வர் புகழாரம்


யாழ்ப்பாண கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் குருக்கள் இவ்வாறான ஒரு பொதுமேடையில் தோன்றுவது இதுவே முதல் தடவையாகும் என யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார். "இவர்கள் தமது பங்குப்பணிகள் மத்தியில் நேரம் கண்டு பிடித்து, ஒன்று சேர்ந்து, விடயத்தை பாடமாக்கி, பழகி நடிப்பது என்பது ஒரு பெரிய காரியம். பல பங்கு மக்கள் தமது பங்குகளுக்கும் வாருங்கள் என்று இவர்களுக்கு அழைப்பு விடுத்தவண்ணம் உள்ளனர். புனித யோசவ் வாஸ் ஆண்டை இதைவிட சிறப்பான விதமாக பெருமைப் படுத்தி இருக்க முடியாது என்றே கருதுகிறேன் என்றார்.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளியில் யோசவ் வாஸ் ஆண்டு நூல் வெளியீடு

(மட்டக்களப்பில் இருந்து - ஜே.எச். இரத்தினராஜா -)



தூய ஜோசப்வாஸ் ஆண்டின் சிறப்பு நிகழ்வாக கிழக்கு மண்ணில் அடிகளாரின் பாதம் பட்ட இடங்களில் ஒன்றான தாண்டவன்வெளியில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் தூய காணிக்கை அன்னை ஆலயத்தில் ஜே.எச்.இரத்தினராஜா அவர்களது தொகுப்பில் உருவான இலங்கையின் முதல் புனிதர் தூய யோசப்வாஸ் என்னும் வரலாற்று நூல் வெளியிடப் பட்டது. இந்த வெளியீட்டுநிகழ்வில் பங்குத்தந்தையுடன் இணைந்து நூல் ஆசிரியர் ஜே.எச்.இரத்தினராஜா முதல் பிரதியினை ஆயர் அவர்களிடம் கையளித்து வெளியிட்டுவைத்தார்.



# நடிகரைக் கடவுளாக்கி விட்டு நாம் தெருவில் நிற்கக்கூடாது!

## ஊர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

'சாமியே நடந்து போகுதாம்... பூசாரிக்கு 'பல்சர்' கேட்குதாம்' என்றபடியே சந்தியடியில் கச்சான் கடகத்தை அவிழ்த்து வியாபாரத்தை ஆரம்பித்தாள் செல்லாச்சி.

இதைக்கேட்ட ஜீவன் 'இண்டைக்கு யாரோ கிழவியின் வாயிலை வசமாக மாட்டுப்பட்டிருக்கினம்' என்று ரூபனின் காதில் கிசுகிசுத்தான்.

'யாரையோ அடிக்கிறாய் செல்லாச்சி. ஆனால் யாரையெண்டுதான் விளங்குதில்லை. விளக்கமாகச் சொல்லன்' என்று தூண்டினார் ஏரம்பர்.

அதற்குச்செல்லாச்சி 'வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் சிறையிலை வாடுகினம். அவைக்கு விடிவு வரவேணும் என்று ஒரு பக்கம் போராட்டம் நடக்குது. இன்னொரு பக்கம் என்னென்றால் எவனோ ஒரு நடிகனுக்கு கால்களுக்கு நடுவிலை நெருப்பை வைச்சிட்டினம் என்று ஒரு கூட்டம் ஒப்பாரி வைக்குது.' என்று விரக்தியுடன் சொன்னாள்.

'உண்மைதான். எல்லாம் விசர்க் கூட்டங்கள்தானே. சமூகஊடகங்களிலை இப்ப இதைத்தான் பெரிய விசயமாகக் கதைக்கினம். ஆளாளுக்கு சரி, பிழை என்று அடிபடுகினம்' என்று கைபேசியைப் பார்த்தபடியே சொன்னான் ஜீவன்.

இதைக் கேட்டுப் புன்னகைத்த ரூபன் 'என்னடாப்பா கதைக்கிறாய். நீங்கள் துடுப்பாட்டத்தை ஏதோ நாடுகளுக்கு இடையிலை நடக்கிற போர் மாதிரி கன்னை பிரிஞ்சு மோதுவியள். அரசியல்வாதிகளுக்குப் பக்தகோடிகளாகி புடுங்குப்படுறியள். நீங்கள் வெள்ளைக்கார நடிகர், நடிகைகளுக்கு ரசிகக் குஞ்சுகளாக இருந்தால் அது நாகரிகம். மத்தவங்கள் தமிழ் திரைப்பட நடிகைக்குக் கோவில் கட்டினால் பதறியடிக்கிறியள். இது எப்படி நியாயமாகும்?' என்று கேட்டான்.

அதுவரை அமைதியாக இருந்த வாத்தியார் 'இரசிகர்கள் என்பவர்கள் பிரபலமான ஆளுக்கோ அல்லது விளையாட்டு அணிக்கோ அல்லது இசைக்குழுவுக்கோ அல்லது ஒரு கருத்துக்கோ அர்ப்பணிப்புடன் ஆதரவளிப்பவர்கள். இவர்கள் தமது நேரத்தையும் வளங்களையும் தமக்குப் பிடித்தமானவர்கள் அல்லது பிடித்தமானதுக்கு ஆதரவளிக்கச் செலவிடுவார்கள். இப்படியானஇரசிகர்கூட்டம் வெளிநாடுகளிலும் இருக்குத்தான். ஆனால் அங்கெல்லாம் தமது காசைக் கரியாக்குவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஒரே விசயத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் சேர்ந்து குதூகலிப்பதில் ஈடுபடுவார்கள். அல்லது சேர்ந்து நற்பணிகளில் ஈடுபடுவார்கள். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை 'இரசிகர் மன்றங்கள் நற்பணி மன்றங்களாக மாறும்' என்று நடிக நடிகையர்கள் வாயளவில் சொல்வார்களே தவிர உருப்படியாக மாறியதாகக் காணவில்லை' என்றார்.

'இலங்கையிலும் அந்தக்காலத்திலை தியாகராஜா பாகவதரின் திருநீலகண்டர் திரைப்படத்தைப் பார்த்து விட்டு இளைய கூட்டம் தாடி வைத்துக் கொண்டு திரிந்தது. எம்ஜிஆர் மற்றும் சிவாஜி காலத்தில்தான் நடிகர்களுக்காகக் கன்னை பிரிஞ்சு முறுகுப்பட்ட சம்பவங்கள் அதிகரித்தன' என்றார் ஏரம்பர்.

'கீரிமலையிலை கூட எம்ஜிஆர் கடை, சிவாஜி கடை என்று இரண்டு தேத்தண்ணிக் கடைகள் இருந்தன. அந்தந்த இரசிகர்கள் தத்தமது கடைகளுக்குத்தான் போவினம்.' என்று பழைய ஞாபகத்தில் மூழ்கினார் வாத்தியார்.

'ஆனால் அதிலையும் ஒரு வியாபார நுணுக்கம் இருந்தது தெரியுமோ?' என்று சொல்லி விட்டு கண்ணைச் சிமிட்டினார் ஏரம்பர்.

'பழைய கதை என்றபடியால் உங்கடை காட்டிலைதான் இன்றைக்கு மழை. நீங்கள் சொல்லுங்கோ' என்று உற்சாகப் படுத்தினான் ரூபன்.

'முன்பு இந்தியாவிலிருந்து தமிழ்த் திரைப்படங்களை இங்குள்ளவர்கள் நேரடியாக இறக்குமதி செய்து திரையரங்குகளில் திரையிட்டனர். அதனால் ஒரே நேரத்தில் இங்கும் அங்கும் திரையிடப்பட்டன. சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டு, அதனூடாகவே திரைப்படங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதனால் இந்தியாவில் திரையிடப்பட்டு பல மாதங்களின் பின்னர்தான் இலங்கையில் அந்தத் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எழுத்துக்கள் அடங்கிய சுவரொட்டிகள் மட்டுமே இங்கு ஒட்டப்பட்டன. பலவர்ணப் படச் சுவரொட்டிகளைப் பார்ப்பது இங்கு படம் பார்த்த சந்தோசத்தைத் தந்த காலம் அது. அதனால் இந்தியாவில் படம் வெளியிட்ட உடனேயே அங்கிருந்து பெரிய வர்ணச் சுவரொட்டிகளைத் தருவித்துக் கீரிமலைத் தேத்தண்ணிக் கடைகளில் ஒட்டி விடுவார்கள். எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தமது நடிகரின் புதுப்படச் சுவரொட்டியைப் பார்க்க அந்தக் கடைக்குப் போவார்கள். அதனால் வியாபாரம் பெருகும். இதுபோலத்தான் சிவாஜி கடையிலும். ஆரியக் கூத்தாடினாலும் எங்கடையாக்கள் காரியத்திலை கண்ணாக இருந்த காலம் அது' என்று பழைய நினைவுகளில் மூழ்கித் திளைத்தார் ஏரம்பர்.

'ரசிகர் மன்றங்கள் இங்கு தத்தமது நாயகர்களுக்காகப் பத்திரிகைகள் நடத்தினார்கள். எம்ஜிஆருக்காக 'உரிமைக் குரல்', 'இதயக்கனி' என்ற பெயர்களிலும், சிவாஜிக்காக 'சிம்மக்குரல்', 'உத்தமன்' என்ற பெயர்களிலும் பத்திரிகைகள் வெளிவந்தன. அவற்றில் மற்றவர்களின் படங்களை நக்கலடித்தும், தமது நாயகரைப் புகழ்ந்தும் செய்திகள் வெளியிடப்பட்டன.' என்றார் வாத்தியார்.

இதைக்கேட்ட ஜீவன் 'அப்ப முந்தி பத்திரிகைகளில் நடந்தவைதான் இப்போது சமூக ஊடகங்களில் நடக்கின்றன. ஏதோ இப்பதான் இதெல்லாம் புதுசா நடக்கிற மாதிரி வீணாகக் கூச்சல் போடுறம் என்பதுபோலத்தானே இருக்கு' என்றான்.

'அப்போது வில்லங்கம் இல்லாமல் ரசிகர் மன்ற மோதல்கள் வேடிக்கையாக நடந்தன. ஆனால் இப்போது வெட்டுக்குத்து அளவுக்குப் போகும்போல இருப்பதுதானே அச்சமாக இருக்கு' என்று ஊர்வம்பில் கலந்து கொண்டான் பேப்பர் தம்பி.

'நான் நேரில் பார்த்த சம்பவம் ஒன்றைச் சொல்லுறன்' என்ற பீடிகையுடன் ஆரம்பித்த ஏரம்பர் 'யாழ்ப்பாணம் சிறீதர் தியேட்டரில் எம்.ஜி.ஆர். நடித்த 'மீனவ நண்பன்' திரைப்படம் திரையிடப்பட்டது. முதல் நாள் சனம் அலைமோதியது. அப்ப திரையரங்கில் ஆகக் கூடிய கட்டணமே பத்து ரூபாவுக்குள்தான். ஆனால் கடற்றொழிலாளர்கள் சிலர் கறுப்புச்சந்தையில் ஒரு சீட்டை அந்த நேரத்திலேயே ஐநூறு ரூபா கொடுத்து வாங்கிப் படம் பார்த்தனர்.' என்று சொல்லி விட்டு மூச்சு வாங்கினார்.

அப்போது ஜீவன் 'அப்ப ஐநூறு ரூபா என்றால் இன்றைக்கு அது ஐம்பதாயிரத்துக்குச் சமனாகும். அவ்வளவு காசு கொடுத்துப் பார்க்கிறதுக்கு அடுத்த நாள் வந்து பார்க்கலாமே' என்று அங்கலாய்த்தான்.

'அங்கேதான் நீ எங்கடை அந்தநாள் ஆக்களின் சூட்சுமத்தை குறைச்சு நினைக்கிறாய். அவர்களின் கணக்கு வேறு. தலைவர் எம்ஜிஆரின் படம். அதுவும் பெயரே 'மீனவநண்பன்' அதனைப் பார்க்க வேண்டும். அன்று தொழிலுக்குப் போகாமல் படம் பார்க்க வந்து விட்டார்கள். அதனால் உழைத்திருக்கக் கூடிய ஆயிரம் ரூபா நட்டம். இன்று போய் பிறகு இன்னொரு நாளில் வந்தால் அன்றைய தின வருமானமும் நட்டம். அதனால் இன்றே மேலதிகமாகக் கட்டணம் கொடுத்துப் பார்த்தால் இலாபம் என்பதுதான் அவர்களின் கணக்கு' என்று அந்தக்கால சினிமா மோகத்தை விளக்கினார் ஏரம்பர்.

இதைக் கேட்ட பேப்பர்தம்பி 'இதிலையிருந்து ஒரு விசயம் விளங்குது. அந்தக்காலத்திலை திரைப்படம் என்பதிலும், அதில் நடிக்கும் நடிகரை ரசிப்பது என்பதிலும் நமது மக்கள் மிகவும் தெளிவாக இருந்திருக்கிறார்கள். கேளிக்கை என்பது கடும் உழைப்பின் நடுவேயான கேளிக்கையே தவிர, உழைத்த காசைக் கொட்டி சினிமா நடிகரைக் கடவுளாக்கி விட்டு தாங்கள் நடு வீதியில் நிற்பது அல்ல என்பதை, அந்தக்கால இரசிகர்களைப் பார்த்து இந்தக் கால இரசிகர்கள் புரிந்து கொண்டாலே போதும்' என்றான்.

'பேப்பர்தம்பி சொல்வதில் ஒரு விசயத்தை நாங்கள் விளங்க வேணும்' என்று சொன்ன வாத்தியார் தொடர்ந்து 'அந்தக்காலத்திலை பாடசாலைகளில் அதிலும் சிறுவயது மாணவர்களிடம்தான் நடிகர்களில் யார் சிறந்தவர் என்ற சண்டை வரும். மற்றப்படி இரசிகர்களாக ஆளையாள் சீண்டி விளையாடுவார்களே தவிர, இன்று நடப்பது போல நெருப்பு வைப்பதில்லை.' என்று முடித்தார்.

அதனைத் தலையாட்டி ஆமோதித்த பேப்பர்தம்பி 'ஒரு குழுவாக இரசிகர்கள் என்ற அடிப்படையில் இயங்கிக் கொண்டு இருக்கும் வரை பெரிய பிரச்சினைகள் எழவில்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொழுதுபோக்குக் கலாசாரத்தை வணிகமயமாக்கும் போக்கு ஆரம்பித்தது. இதில் இலக்கு வைக்கப்பட்டனர் இரசிகக் கண்மணிகள். இவ்வாறு உலகளவில் வணிகமயமாக்களுக்குள் இரசிகர் குழுக்கள் ஈர்க்கப்பட்டபோது இந்தியாவில் இரசிகர்களை வைத்து அரசியல் முன்னெடுப்பை செய்து காட்டியவர் எம்ஜிஆர். அவர் ஆரம்பித்த திரையிலிருந்து அரசியல்தலைமைத்துவத்துக்கு என்ற வாய்ப்பாடுதான் இன்றைய தமிழ் நடிகர்களை அரசியல்கனவுக்குள் மூழ்கடித்து மூச்சுத் திணற வைக்கிறது' என்று சொன்னான்.

அப்போது 'இந்த நேரத்திலை எனக்கு பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது' என்று ஆரம்பித்த வாத்தியார் '1981 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்த போது சென்னையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அதில் பேராசிரியர் சிவத்தம்பி ஒரு ஆய்வுக் கட்டுரை வாசிக்கவிருந்தார். ஆனால் அதன் உள்ளடக்கத்தைப் பார்த்த விழா ஏற்பாட்டாளர்கள், அந்தக் கட்டுரையை மேடையில் வாசிக்க விடாமல் பேராசிரியரைத் தடுத்து விட்டார்கள். ஏனென்றால் எம்.ஜி.ஆர். சினிமாவை எப்படிப் பயன்படுத்தினார் என்ற விமர்சனமாகவே விழா ஏற்பாட்டாளர்கள் அந்தக் கட்டுரையைப் பார்த்தனர். தமது செயல்பாட்டால் இரசிகர்கள் சேருவது என்பதிலிருந்துஇதிட்டமிட்டு இரசிகர்களை தன்னை நோக்கி ஈர்ப்பது என்பதில் நடிகர்களுக்கு வழிகாட்டியவர் எம்.ஜி.ஆர். என்பது தெரிகிறது' என்றான்.

இதற்கு வாத்தியார் 'உலகெங்கிலும் பிரபலமானவர்கள் தமக்கான இரசிகர்களைச் சேர்ப்பதில் கணிசமான அக்கறை காட்டியிருந்தவர்களே. ஆனால் எம்ஜிஆர் திரைப்பட ரசிகர்களிடம் தனிமனித வழிபாட்டைத் தூண்டும் வகையில் தொடர்பாடலை மிகக் கவனமாக கையாண்டார். மக்களில் நடுத்தரத்துக்கும் கீழ்ப்படி நிலையில் உள்ளவர்கள் இதம்மைப்போல் உள்ள ஒருவர் மேல்நிலையை அடைவதைத் திரைப்படங்களில் காணும்போது திருப்தியடைந்தனர். அவர் ஏற்று நடித்த கதாபாத்திரங்களின் குண நலன்கள் உண்மையில் அவரிடமிருந்தன என்றே நம்பினார்கள். அவர் காட்டிய வழியிலேயே விஜயகாந்த் முதல் விஜய் வரை திரைப்பட நடிகர்கள் செல்கின்றனர். இதனைப் புரியாது எமது இளைய தலைமுறை இரசிகர் நிலையைத் தாண்டி, தனிமனித வழிபாட்டுக்குச் செல்வதுதான் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது' என்றார்.

அப்போது ரூபன் 'சில நடிகர்கள் இரசிகர் மன்றங்கள் தேவையில்லை என்று கருதும் போக்கு வந்து கொண்டிருக்கிறது. முன்னணி நடிகர் ஒருவர் வெளிப்புறப் படப்பிடிப்பில் இருந்தார். அப்போது இரசிகர்கள் கூட்டம் கூடி விட்டது. இதனால் படப்பிடிப்புக்கு பெரும் இடைஞ்சலாக இருந்தது. நடிகர் மொய்த்து நின்ற இரசிகர்களிடம் வந்தார். அவர்களிடம் 'நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?' என்று கேட்டார். ஒவ்வொருவரும் வேலையைச் சொன்னார்கள். அதற்கு நடிகர் 'அதேபோல எனக்கும் நான் வேலை பார்க்கும் இடம். உங்களால் எனது வேலை பாதிக்கப்படுகிறது' என்று எடுத்துச் சொன்னார். அதற்கு ஓர் இரசிகர் 'நாங்க இல்லையென்றால் நீங்கள் இந்த இடத்துக்கு வந்திருக்க முடியுமா?' என்று கேட்டார். நடிகர் அவரைப் பற்றி விசாரிக்க அவர் இரசிகர் மன்றத்தவர் என்று தெரிய வந்திருக்கிறது. மறுநாள் அந்த நடிகர் தனது இரசிகர் மன்றங்கள் எல்லாவற்றையும் கலைத்து விட்டாராம். ஆனாலும் அவர் இன்றும் முன்னணிக் கதாநாயகனாக நடித்து வருகிறார்.' என்றான்.

'ஆனால் இப்போது இரசிகர் மன்றம் என்பது தமிழகத்தில் பெரும் வியாபாரம் ஆகி விட்டது. அதைப்பற்றி அடுத்த கிழமை கதைப்பம்' என்றபடி எழுந்து நடந்தான் பேப்பர் தம்பி.

மற்றவர்களும் அவனைத் தொடர்ந்தனர். கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி. சந்தியடி அமைதியானது. ★

# வேற்றுக் கிரக...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
இதைப் போன்று ஒளி சமிக்ஞை மூலம் செய்தி அனுப்பினால் ஒரு நொடியில் நூற்றில் ஒருபங்கு நேரத்தில் ஏற்படும் மாறுதல்களை பதிவு செய்ய ஒளிவாங்கி அமைத்து கண்காணிக்கிறார்கள். ஆனால், இதுவரை நாம் சந்தோசப்படும் படியாக எந்தச் செய்தியும் வரவில்லை.

**அறிவுஜீவி உயிர்கள் வாழ்வது சாத்தியமே**

மற்ற நட்சத்திரங்களைச் சுற்றி வருகிற கிரகங்களைக் கண்டுபிடித்திருந்தாலும் கூட ஒரு கிரகத்தில் உயிர் தோன்றி நிலைத்து பரிணாம வளர்ச்சியடைவது சாதாரண விடயம் அல்ல. பூமி தோன்றி 400 கோடி ஆண்டுகளில் 150 கோடி ஆண்டுகளாகத்தான் உயிர்த் தோற்றமும், அதிலும் சில லட்சம் ஆண்டுகளாகத்தான் மனித பரிணாமமும் ஏற்பட்டுள்ளது.

எப்படி இருந்தாலும் நமது ஆகாய கங்கையில் மட்டுமே 1 அல்லது 2 கிரகங்களில் அறிவுஜீவி உயிர்கள் வாழ்வது சாத்தியமே என்கிறார்கள் விஞ்ஞானிகள். பிறகு ஏன் அவர்கள் நம்முடன் தொடர்புகொள்ள மறுக்கிறார்கள்.

சில விஞ்ஞானிகள் சொல்வதைப்போல நம் பூமியில் இருக்கும் விலங்குகள், தாவரங்கள்,பூச்சிகளுக்கு இடையே ஏற்படும் மிகநுட்பமான தகவல் பரிமாற்றத்தை கூட நம்மால் புரிந்து கொள்ள முடியாத போது பிற கிரக வாசிகள் அனுப்பும் செய்திகளை நாம் எப்படி புரிந்து கொள்ளமுடியும் என்கிறார்கள்.

விண்வெளி வீராங்கனை ஜோசிலின் பெல் பர்னல் அடுத்த 20 ஆண்டுகளிலிருந்து 100 ஆண்டுகளுக்குள் வேற்றுக் கிரக உயிரினங்களுடன் அல்லது மனிதனுடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்டுவிடும் என்று நிச்சயமாக நம்புகிறார்.

வேற்றுக் கிரகங்களில் வாழும் மனிதர்களிடமிருந்து வரக்கூடிய ரேடியோ சமிக்ஞைகளுக்காகத் தினந்தோறும் இடைவிடாமல் கண்காணிப்பு தொடர்கிறது. குரலாகவோ, சூசகமான சமிக்ஞையாகவோ ஒளி அடையாளமாகவோ, வேறு எதுவாகவோ விண்வெளியின் எந்தத் திசையிலிருந்தாவது, ஏதாவது வருகிறதா என்று நவீனக் கருவிகள் உதவியோடு தொடர்ந்து தேடுகின்றனர். ஆனால் இதுவரையில் ஒரு முனகல் சத்தம் கூட எங்கிருந்தும் வரவில்லை. ஆக வேற்றுக்கிரக வாசிகளை நாம் எப்போது சந்திப்போம் என்ற கேள்விக்கு விடை கிடைக்குமா? காத்திருப்போம். ★





# காதல் முறிந்தால் எதற்கு கவலை?

காதல் முறிந்தால் என்ன தான் செய்வது? வேண்டாம் கவலை. அதில் இருந்து மீள்வதற்கு மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்போதெல்லாம் காதல் முறிவு (பிரேக் அப்) பற்றி அதிகமாக பேசப்படுகிறது. காதலில் தோல்வி அடைந்தவர்கள் மிகுந்த மன வேதனைக்கு ஆளாகிறார்கள்.

ஒருசிலர் வாழ்க்கையே முடிந்து விட்டது என்ற மனநிலைக்கு வந்துவிடுகிறார்கள். படித்துக் கொண்டிருப்பவர்கள், வேலைக்குச் செல்பவர்கள் மன தொடிந்து போய்விடுகிறார்கள்.

சிலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் தவறான முடிவுக்கு வருகிறார்கள். விடுதியில் தங்கி படிக்கும் பெண்கள் காதல் முறிவு ஏற்பட்டால் போதை பழக்கத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள். காதலில் தோல்வி அடைந்து விட்டால்அதனைஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

அதில் இருந்து மீள்வதற்கு மனதை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். அவரை விட சிறந்தவர் கிடைப்பார்.வாய்ப்பு இருக்கிறது என்று சமாதானம் செய்து கொண்டு அந்த மன அழுத்தத்தில் இருந்து விடுபட வேண்டும். பெற்றோரும் சீறிச் சினக்காமல் மகளிடம் பக்குவமாக பேசி அதிலிருந்து மீள வைக்க வேண்டும்.

அதைவிடுத்து, 'நான்தான் அப்போதே சொன்னேனே. அவன் நல்லவன் இல்லை என்று! நீ கேட்காமல் அவன் பின்னால் சென்றாய். இப்போது அதற்கான தண்டனையை அனுபவிக்கிறாய்' என்று கூறி அவள் மனதை காயப்படுத்தக்கூடாது.

முன்பை விட அதிக அன்பை பொழிய வேண்டும். அவள் வாழ்க்கை மீது அதிக அக்கறை காண்பித்து, அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதுதான் சரியான வழிமுறை! ★

# இன்னலுற்ற மக்களுக்கு ஓடியோடி...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி..)
சிங்கள கத்தோலிக்க மக்களில் சிலரும் சிங்கள ஆயர்கள் சிலரும் இவருடைய செயற்பாடுகள் குறித்து அதிருப்திகொண்டிருந்தனர்.

**தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்**

2012ஆம் ஆண்டு 'லக்பிம' (Tiger Bishop) என்ற சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தன்னைப்பற்றிய பல விமர்சனங்களுக்கு அவர் பதில் அளித்திருந்தார். 'நீங்கள் 'சர்ச்சைக்குரிய ஆயர்' (Controversial Bishop) என அழைக்கப்படுகின்றீர்கள். இதுபற்றிய உங்கள் விளக்கம் என்ன?' என்ற கேள்விக்கு அவருடைய பதில், 'நான் சர்ச்சைக்குரிய ஆயர் என அழைக்கப்படுகின்றேன்.

ஏனென்றால் சர்ச்சைக்குரிய விடயங்கள் நடைபெறுகின்றன. நான் அந்த விடயங்கள்பற்றிப் பேசும்போது சர்ச்சைக்குரிய ஆளாக மாறுகின்றேன்.


நான் உண்மையைப் பேசுகின்றமையால் 'வெளிப்படையாகப் பேசும் ஆயர்' (Outspoken Bishop) என்கின்றனர். நான் ஏழைகள்மேல் கரிசனை கொண்டு நீதிக்காகக் குரல் கொடுத்தால் நான் இலங்கைக்கு எதிரானவன், எல்.ரீ.ரீ.ஈ அல்லது பிரிவினைவாதி என்கின்றனர்.

இந்தப் பெயர்களைப்பற்றி நான் அலட்டிக் கொள்பவர் அல்லர். நான் தொடர்ந்தும் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்புவேன். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவேன்.

'நீங்கள் எல்.ரீ.ரீ.ஈ யா? அல்லது அந்த அமைப்பின் தீவிர ஆதரவாளரா?' என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில், 'நான் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறேன் என்பது எனக்குத் தெரியாது. என்னை அப்படி அழைப்பது அவர்களின் பலவீனம். நான் விடுதலைப் புலிகளின் கொலைகளையும், அட்டூழியங்களையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளபவன் அல்லன்.

நான் அவர்களுடைய கொலைகளைக் கண்டித்திருக்கிறேன். இதனால் கொலை மிரட்டல்களையும் பெற்று இருக்கிறேன். நான் ஒருபோதும் தனிநாட்டை விரும்புபவன் அல்லன். கனவில்கூட விரும்பவில்லை. ஒரு குரு என்ற வகையில், உண்மையையும், வாழ்வையும், வழியையும் வெளிப்படுத்தி வன்முறைக்குப் பலியான இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் என்ற வகையில் நான் எனது கடமைகளைச் செய்கின்றேன்.'– என்றார்.

ஆயர் அவர்கள் ஒன்றுபட்ட நாட்டிற்குள் சுயாட்சியை வலியுறுத்தினார். இலங்கை ஒரு நாடாக இருக்கலாம். ஆனால் இங்கு பல தேசிய இனங்கள் (Nations) இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தமக்கென தனித்துவமான மொழி, இலக்கியம், பண்பாடு, பாரம்பரியங்களைக் கொண்டுள்ளன. ஒரு நாட்டிற்குள் சுய ஆட்சிக்கான உரிமை இந்த இனங்களுக்கு உள்ளது. இவை



அடையாளங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தி வந்தார்.

**முடிவுரை**

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் சுகவீனமடையும்வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கிவந்தார். திருச்சபையின் ஒழுங்குவிதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வுபெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இற்கு அமைவாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அறிவித்தார். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

ஆயர் அவர்கள் மக்கள் பணியில் தன்னை முழுமையாகக் கரைத்துக் கொண்டார். இரவு, பகல், மழை, வெயில் பாராது நீண்ட பயணங்களை மேற்கொண்டார். கண்துஞ்சாது, பசிநோக்காது கருமமே கண்ணாகச் செயற்பட்டார். இவர்,'மன்னாரின் ஒஸ்கார் றொமேரே' என அழைக்கப்பட்டார். சமாதானத்திற்கான நோபல் பரிசுக்குரியவர் என மக்களால் கணிக்கப்பட்டார்.

2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கம் 'இனமான ஏந்தல்' என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015 ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு கம்பன் புகழ் விருதை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்துக் கத்தோலிக்க திருச் சபை, இன்னும் குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற விழைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமைய வேண்டும். அமையுமா? ★

# ஆப்கனில் மசூதிகளைக் குறிவைத்து தற்கொலைத் தாக்குதல்; 50 பேர் பலி

காபுல்,ஒக்.22

ஆப்கானிஸ்தானில் இரு மசூதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 50 பேர் பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படைகள் மற்றும் பொலிஸாரைக் குறிவைத்து தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சில பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கமும் உள்ளது. இவர்களை ஒடுக்குவதற்கு அமெரிக்கா வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்தநிலையில், வடமேற்கு ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்திற்கு உட்பட்ட தாவலினா மாவட்டத்தில் உள்ள மசூதியை குறிவைத்து தீவிரவாதிகள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் பொது மக்கள் உட்பட 20 பேர் பலியாகினர். ஆனால் 30இற்கும் அதிகமானோர் பலியாகினர் என முதலில் தகவல்கள் வெளியாகின.

இதேபோல், காபூலில் உள்ள மசூதியிலும் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இந்தக் கொடூரத் தாக்குதலில் தொழுகைக்கு வந்திருந்தவர்கள் உட்பட 30 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் 41 பேர் படுகாயம் அடைந்தனர்.










தகவலறிந்து வந்த பாதுகாப்பு படையினர் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். இதைத்தொடர்ந்து அந்த பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியவை வருமாறு-

இரண்டு மசூதிகளைக் குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 50 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றமையால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

## ரோஹிங்யா குழந்தைகள் நரகத்தில் வாழ்கின்றனர் - யுனிசெப்



ரோஹிங்கியா அகதிகளில் உள்ள குழந்தைகள் அனைவரும் ஊட்டச் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டு உள்ளதாக யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மியன்மாரில் இருந்து பங்களாதேஷிற்கு அடைக்கலம் தேடிச் சென்றுள்ள 6 லட்சம் ரோஹிங்யா முஸ்லிம் அகதிகளில் 58 வீதம் பேர் குழந்தைகள். அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் அந்தக் குழந்தைகள் குறித்து ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) கடந்த 8 வாரங்களாக நடத்திய ஆய்வின் அறிக்கையை ஜெனிவாவில் நடைபெற்ற நிதி திரட்டும் நிகழ்ச்சியில் வெளியிட்டது.

அந்த அறிக்கையில், முகாம்களில் உள்ள குழந்தைகளில் 5இல் ஒரு குழந்தை ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து குழந்தைகளும் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர். அகதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்யப்பட வேண்டும். சுத்தமான குடிதண்ணீர் குடிக்காவிட்டால் கொலரா போன்ற நோயால் பாதிக்கப்படுவர்.

குழந்தைகளுக்கு எவ்வித உதவியும் கிடைப்பதில்லை. அவர்கள் இந்த இடத்தை நரகமாக கருதுகின்றனர். அவர்களை பாதுகாக்கும் பணியில் யுனிசெப் அமைப்பானது ஈடுபட்டுள்ளது. ரோஹிங்கியா அகதிகளுக்கு உதவி செய்வதற்கு ஐ.நா. 43 கோடியே 4 லட்சம் ரூபா நிதி திரட்டி வருகின்றது. அதில் ஆறில் ஒரு பங்கு அங்குள்ள குழந்தைகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## வன்முறைகளைவிட சுற்றுச்சூழல் மாசுபாட்டால் அதிக மக்கள் சாவு

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



உலகில் போர் மற்றும் வன்முறை மற்றும் நோய்களை விட சுற்றுச்சூழல் மாசுபாட்டால் அதிகமானோர் இறக்கின்றனர் எனத் திடுக்கிடும் தகவல்கள் வெளி யாகி உள்ளன.

உலகில் சுற்றுச்சூழல் மாசுபாட்டால் ஆண்டுதோறும் அதிக அளவில் மக்கள் மரணமடைகின்றனர். இந்த எண்ணிக்கை புகைப்பிடித்தல், பட்டினி, இயற்கைப் பேரிடர், போர்கள் மற்றும் பயங்கரமான நோய்களால் ஏற்படும் மரணத்தைவிட அதிகமாக உள்ளதாகத் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

2015ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, உலகில் மரணமடையும் ஆறில் ஒருவர் நச்சு வெளிப்பாட்டால் ஏற்பட்ட நோயால் இறந்ததாக லான்சட் மருத்துவ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவுகள் குறித்து நியூயோர்க்கின் இகான் மருத்துவ பள்ளியின் தலைமை மருத்துவர் கூறியவை வருமாறு:-

2015ஆம் ஆண்டில் 9 மில்லியன் மக்கள் சுற்றுச்சூழல் மாசுபாட்டால் மரணமடைந்துள்ளனர். காற்று, நீர் மற்றும் நில மாசுபாட்டால் இறந்துள்ளனர். அதில் இந்தியாவில் 25 இலட்சம் மற்றும் சீனாவில் 1.8 மில்லியன் பேர் மாசுபாட்டால் இறந்துள்ளனர்.

மாசுபாட்டால் இறப்பவர்களின் எண்ணிக்கை புகைப்பிடித்தலால் இறப்பவர்களை விட ஒன்றரை மடங்கு அதிகமாகவும், நோய்களால் இறப்பவர்களை விட மூன்று மடங்கு அதிகமாகவும், வீதி விபத்துகளில் மரணமடைவர்களை விட 3 மடங்கு அதிகமாகவும் மற்றும் வன்முறையால் இறப்பவர்களை விட 15 மடங்கு அதிகமாகவும் உள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சந்திரனில் மிகப்பெரிய குகை கண்டுபிடிப்பு

ஜப்பானின் 'செலீன்' விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது. அது எடுத்து அனுப்பிய படங்கள் மூலம் சந்திரனில் மிகப்பெரிய குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சந்திரனுக்கு முதன் முதலாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பிச் சரித்திர சாதனை படைத்தது. அதைத் தொடர்ந்து இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் சந்திரனில் ஆய்வுகளை மேற்கொண்டன.

தற்போது ஜப்பானின் 'செலீன்' விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்திவருகிறது. அதுஎடுத்து அனுப்பிய படங்கள் மூலம் சந்திரனில் மிகப்பெரிய குகை இருக்கின்றமையை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அக்குகை 50 கிலோ மீற்றர் நீளமும், 100 மீற்றர் அகலமும் கொண்டது. இது சந்திரனில் உள்ள 'மாரியஸ்' என்ற எரிமலையில் உள்ளது. அது வெடித்ததில் வெளியேறி ஓடிய எரிமலைக் குழம்பு சென்ற வழி குழாய் போன்ற அமைப்பில் உள்ளது. அதுவே மிகப்பெரிய குகையாக மாறியுள்ளது.

இந்தக் குகை 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். குகையில் சந்திரனுக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் தங்க முடியும்.

அதன் மூலம் சந்திரனை தாக்கும் அதிக அளவு தட்பவெப்ப நிலை மற்றும் கதிர் வீச்சில் இருந்து அவர்கள் தங்களை பாதுகாத்து கொள்ளலாம்.இந்தத் தகவல் ஜியோபிசிக்கல் ஆராய்ச்சி கடிதங்கள் என்ற அமெரிக்க அறிவியல் இதழில் வெளியாகி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# விடுதலை அல்லது நீண்ட கால விடுப்பு பேரறிவாளனுக்கு வழங்க வேண்டும்

சென்னை,ஒக்.22

பேரறிவாளனுக்குவிடுதலை அல்லது நீண்டகால விடுப்பு வழங்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறி உள்ளார்.

பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறியவை வருமாறு:-

ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும், இவ்வழக்கில் அவர் கொடுத்த வாக்கு மூலத்தை திரித்து தவறாக பதிவு செய்தது தாம் தான் என்றும் இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான தியாகராஜன் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கின்றார்.


ராமதாஸ்

இந்த அடிப்படையில் இவ்வழக்கின் தீர்ப்பில் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி சி.பி.ஐக்கு அவர் கடிதம் கொடுத்தார். அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் பேறிவாளன் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு, இப்போது சுதந்திரமான மனிதராக வலம் வந்து கொண்டிருப்பார்.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களின் விடுதலையை எதிர்த்து முந்தைய காங்கிரஸ் அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்கு மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்று வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவ்வழக்கின் விசாரணையை காலம்தாழ்த்துவது மத்திய அரசு தான்.தமிழர்கள்விடுதலையாகி விடக்கூடாது என்பதற்காகத் தான் இந்த வழக்கின் விசாரணை தாமதப்படுத்தப்படுகின்றது.

எந்த அடிப்படையிலும் தண்டிக்கப்படதகுதியற்ற ஒருவரை 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைத்து வைப்பது மிகப்பெரிய மனித உரிமை மீறல் ஆகும். பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களும் விடுதலைசெய்யப்படுவார்கள் என ஜெயலலிதா இருமுறை அறிவித்த நிலையில், அதற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அ.தி.மு.க. அரசு ஈடுபட வேண்டும். அதற்கு வாய்ப்பில்லாத சூழலில் பேரறிவாளன் உள்ளிட்டோரின் விடுதலை தொடர்பான வழக்குகளில் இறுதித் தீர்ப்பு வெளியாகும் வரை அவர்களை நிபந்தனையற்ற நீண்டகால சிறை விடுப்பில் விடுவிக்கின்றமை தான் முறையாக இருக்கும்.

எனினும் பேரறிவாளனின் தாயார் இந்த வாதங்களையெல்லாம் முன்வைக்காமல், மனித நேயத்தின் அடிப்படையில் பேரறிவாளன் தந்தையார் மற்றும் சகோதரியின் மருத்துவம் தொடருவதற்கு வசதியாக சாதாரண சிறை விடுப்பை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிக்கும்படி தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த இரு மாதமாக சிறை விடுப்பில் உள்ளபேரறிவாளன் சிறை விடுப்புக்கான கட்டுப்பாடுகளைசிறிதும்மீறவில்லை. எனவே, அவரது தாயாரின் கோரிக்கையை ஏற்று, பேரறிவாளனின் சிறை விடுப்பை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டித்து தமிழக ஆட்சியாளர்கள் ஆணையிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

## கோடீஸ்வரர்களாக வாழ்கின்ற மாவோயிஸ்ட் குடும்பத்தினர்



பாட்னா,ஒக்.22

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் மாவோயிஸ்டுகளைப் பற்றி பீகார் காவல் துறையின் சிறப்பு பாதுகாப்புப் படை தயாரித்த உளவு அறிக்கையில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.இதில் பீகார்மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களைச் சேர்ந்த இரண்டு மாவோயிஸ்ட் தலைவர்களின்குடும்பத்தினர் கோடீஸ்வரர்களாக வாழ்ந்து வருகின்றமை தெரிய வந்துள்ளது.

மாவோயிஸ்டுக்கள், அப்பகுதியில் இருக்கும் தேயிலைத் தோட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் சாலை ஒப்பந்ததாரர்களிடம் ஒவ்வோர் ஆண்டும் கணிசமான தொகையை மிரட்டி வாங்கி வருகிறார்கள். இவர்கள் ஆண்டுதோறும்வசூலிக்கும்பணம் ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது.

அதாவது, இரண்டு மாவோயிஸ்டு தலைவர்களின் குடும்பத்தினர் பற்றிய தகவல் என்ன சொல்கிறது என்றால், இரு குடும்பங்களும் தலா 1.2 கோடிக்கு மேல் சொத்துக்கள் இருக்கிறது என்பது தான்.

ஒரு மாவோயிஸ்ட் தலைவரின் பெயர் சந்தீப் யாதவ், பிகார் - ஜார்க்கண்ட் சிறப்புப் பகுதி பொறுப்பாளர். இவர் மீது 88 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இவரது தலைக்கு 5 லட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவரது மூத்த மகன், மிகப்பெரிய கல்லூரியில் படித்து வருகிறார், தாயாருடன் வசித்து வரும் 2 ஆவது மகனும் பொறியியல் கல்லூரியில் படித்து வருகிறார். இந்த இரண்டு பேரிடமும் பல லட்சம் மதிப்புள்ள ஸ்போர்ட்ஸ் மோட்டார் வண்டி உள்ளது. மகளும் மிகப்பெரிய பள்ளியில் படித்து வருகிறார்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், சந்தீப்பின் மனைவி ராஜந்தி, ஒரு பள்ளியின் ஒப்பந்த ஆசிரியராக வேலை செய்கிறார். அவர் பல ஆண்டுகளாக பள்ளிக்கே செல்வதில்லை என்றாலும் மாதந்தோறும் ஊதியம் வழங்கப்படுகிறது. என்றாலும் இதுவரை இது பற்றி ஒரு குற்றச் சாட்டும் எழுந்ததில்லை. இவர்களுக்கு பல லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. வீடு, இடம், வங்கிக்கணக்கில்பெரியதொகை என கோடீஸ்வரர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

மேல் நடவடிக்கைக்காக,இந்த உளவு அறிக்கை அமுலாக்கத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் காற்று, நீர் மாசால் 2015 இல் 25 லட்சம் பேர் சாவு

புதுடில்லி,ஒக்.22

உலகிலேயே இந்தியாவில் தான் காற்று, நீர் மற்றும் பிற மாசுகளுக்கு 2015ஆம் ஆண்டில் அதிக அளவில் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது.

டில்லி ஐ.ஐ.டி. நிறுவனம் அமெரிக்காவின் ஜஹான் மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உலக நாடுகளில் நிலவும் மாசு குறித்து மேற்கொண்ட ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது. பல்வேறு மாசுகளால் உலகம் முழுவதும் கடந்த 2015 ஆம் ஆண்டில் 65 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பணிபுரியும் இடத்தில் நிலவும் மாசு காரணமாக 8 லட்சம் பேர் பலியாகி உள்ளனர் என்று அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.



உலகிலேயே இந்தியாவில் தான் காற்று, நீர் மற்றும் பிற மாசுகளுக்கு 2015ஆம் ஆண்டில் அதிக அளவில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. 25 லட்சம் பேர் பலியாகி உள்ளனர். அதற்கு அடுத்தப்படியாக சீனாவில் 18 லட்சம் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வேகமாக தொழில்மயமாகி வரும் இந்தியா, சீனா, வங்காளதேசம், மடகாஸ்கர், கென்யா போன்ற நாடுகளில் உலகில் 4இல் ஒரு பங்கு உயிர் இழப்புகள் மாசு காரணமாக நேரிட்டுள்ளது.

ஆண்டுதோறும் நேரிடும் உயிர் இழப்புகளில் 90 லட்சம் பேரின் உயிர் இழப்புக்கு மாசுதான் காரணமாகும். அதாவது மொத்த உயிர் இழப்புகளில் 16வீத உயிரிழப்புகள் மாசு காரணமாகவே நேரிடுகின்றன. மாசுகளால் பாதிக்கப்படுவது, உலகின் பொதுவான ஏழைகள் மற்றும் நடுத்த மக்கள் என்று அந்த ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

## மெர்சல் வசனம்: ராகுல் ஆதரவு

புதுடில்லி,ஒக்.22

மெர்சல் பட விவகாரத்தில் பிரதமர்மோடி தலையிட்டு தமிழின் பெருமையை மதிப்பிழக்க செய்ய வேண்டாம் என காங்கிரஸ்துணைத்தலைவர் ராகுல் கூறியுள்ளார்.

நடிகர் விஜய் நடித்த மெர்சல் படத்தில் ஜி.எஸ்.ரி. மற்றும் டிஜிட்டல் இந்தியா தொடர்பான வசனங்கள் இடம்பெற்றிருந்தன. இதற்கு பா.ஜ.க. தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், மோடி அவர்களே, சினிமா என்பது தமிழ் கலாசாரத்தின் ஆழமான வெளிப்பாடு. மெர்சல் பட விவகாரத்தில் தலையிட்டு தமிழின் பெருமையைமதிப்பிழக்க செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளார்.

## வழிபாட்டுத் தலங்களுக்கு முன்னோடியாக கேதார்நாத் - மோடி பெருமிதம்

உத்தரகாண்ட் மாநிலம் கேதார்நாத் கோவிலில் வழிபாடு செய்த பிரதமர் மோடி இது அனைத்து வழிபாட்டு தலங்களுக்கும் முன்னோடியாகத்திகழ்கிறது எனத் தெரிவித்துள்ளார்.



கேதார்நாத் யாத்திரை இன்றுடன் முடிவடையும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கேதார்நாத் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். அவருடன் முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரும் சுவாமி தரிசனம் செய்தனர். அப்போது அங்கு குடியிருந்த மக்களிடையே மோடி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியவை வருமாறு:-

கேதார்நாத் ஆலயம் அனைத்து சுற்றுலாத்தலங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. இமயமலை அடிவாரத்தில் உள்ள புகழ்பெற்ற புனித தலங்களான பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகியவற்றை மக்கள் அனைவரும் கண்டு மகிழ வேண்டும்.

2013ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் ஆலயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தற்போது அமைக்கப்பட்டு வரும் உட்கட்டமைப்புகள் மிகவும் தரமானவையாக இருக்கும். அது தற்போது உள்ள புதிய வடிவமைப்பில் கட்டப்பட உள்ளது என்று பேசினார்.


யாழ். பல்கலைக்கழக அணி


திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி

# வி.ரி.மகாலிங்கம் இருபது - 20 இறுதிப் போட்டி


சென்றலைட்ஸ் அணி


அரியாலை மத்தி அணி

(கங்கா)

வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறி மியர்லீக்கின் இறுதிப்போட்டியில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும், திருநெல்வேலி கிரிக்கெட் அணியும் மோதும் இறுதிப்போட்டிகள் இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது -20கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது, கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றின.

சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், ஶ்ரீகா மாட்சி, ஸ்ரான்லி, அரியாலை மற்றும் விக்டோரியன்ஸ், ஜொனியன்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், ஹாட் லியன்ஸ், ஸ்கந்தா ஸ்ரார், றெஜின்போ மற்றும் கிறாஸ்கோப்பர், ஓல்கோட், சென்ரல், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ, யூனியன்ஸ், பற்றீசியன்ஸ் மற்றும் மானிப்பாய் பரிஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி கிரிக்கெட் கழகம், டிறிபேக், நியுஸ்ரார், விங்ஸ், ரைரேன் ஆகிய அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.

அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 6 அணிகள் இடம்பெற்று அவற்றுக் கிடையில், லீக் முறையில் முதற்சுற்று ஆட்டங்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள், காலிறுதிக்குத் தகுதி பெற்றன. காலிறுதி மற்றும் அரை யிறுதியாட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற் றன. மொத்தமாக 66 போட்டிகள் இதுவரையில் நடைபெற்று முடிந்து, இந்தச் சுற்றுப்போட்டி யானது தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

அரையிறுதியாட்டங்களில், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக அணி, 8 ஓட்டங்களால் சென்றலைட்ஸ் அணியை வென்றது. அதே போல், திருநெல்வேலி கிரிக்கெட் அணி, 21 ஓட்டங்களால் அரியாலை ஐக்கிய அணியை வென்றது.

இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டிக்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன், கௌரவ அதிதியாக வட மாகாண கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் பி.றஜீவன், சிறப்பு அதிதிகளாக யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், மல்லாகம் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் பாலாம்பிகை சிறிபாஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இறுதிப்போட்டிக்கு முன்னதாக காலையில் மூன்றாமிடத்துக்கான ஆட்டமும் இடம்பெற வுள்ளது. இதில் அரியாலை ஐக்கிய அணியும் சென்ற லைட்ஸ் அணியும் மோதவுள்ளன. சிரேஷ்ட சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கத்தின் ஆதரவில் இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


இறுதியாட்ட அணித் தலைவர்கள்

# இலங்கை மகளிர் அணியுடனான முதல் ரி – 20 போட்டியும் மேற்கிந்தியத் தீவுகள் வசம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்குமிடையில் நேற்றுமுன்தினம் நடந்த முதலா வது ரி-20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 71 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

ஏற்கனவே இடம்பெற்ற ஒரு நாள் தொடரை இலங்கை மகளிர் அணி 3:0 எனும் கணக்கில் இழந்திருந்த நிலையில் ரி-20 போட்டிகளில் மீள எழ வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி இருந்தது.

அன்டிகுவாவில் உள்ள ஸ்டான்போர்ட் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் தரப்பு முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக ஹெய்லி மத்தியூஸ் 37 ஓட்டங்களையும் ஸ்டபனி டெய்லர் 31 ஓட்டங்களையும் மெரிசா அகுயல்லேரியா மற்றும் பிரிட்னி கூப்பர் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 22 மற்றும் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை மகளிர் அணியின் தலைவி இனோகா ரணவீர 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சசிகலா சிறிவர்தன 26 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் சமரி அத்தபத்து 23 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் 141 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுபெடுத்தாடிய இலங்கை வீராங்கனைகள் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சிறப்பான பந்து வீச்சுக் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 69 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணி சார்பில் அமா காஞ்சனா 17 ஓட்டங்களையும், ரெபேக்காவேண்டோர்ட் 10 ஓட்டங்களையும் பெற ஏனைய வீராங்கனைகள் யாவரும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இந்தப் போட்டியில் இலங்கை வீராங்களைகள் மூலம் தமது இன்னிங்ஸிற்காக ஒரே ஒரு பௌண்ரி மாத்திரமே பெறப்பட்டது.

பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகிரா செல்மன் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அனிசா முஹம்மத் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஹெய்லி மத்தியூஸ், டீன்றா டொட்டின் மற்றும் அகிரா பீட்டர்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட் வீதமும் கைப்பற்றினர்.

## டோனியின் வழிகாட்டல் கோஹ்லிக்குத் தேவை: கங்குலி சொல்கிறார்

இந்தியாவின் அணித்தலைவராக திகழும் விராட் கோஹ்க்கு இன்னும் டோனியின் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது என கங்குலி கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி விராட் கோஹ்லி தலைமையில் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வருகிறது. தொடர்ந்து 8 டெஸ்ட் தொடர்களையும், 6 ஒருநாள் கிரிக்கெட் தொடரிலும் வெற்றி பெற்றுள்ளது.

விராட் கோஹ்லி அணித்தலைவராக இருந்தாலும், முன்னாள் அணித்தலைவரான டோனியிடம் ஆலோசனை கேட்டு வருகிறார். இந்த நிலையில் விராட் கோஹ்லிக்கும் இன்னும் டோனியின் ஆலோசனை தேவை என கங்குலி கூறியுள்ளார்.

இதுகுறித்து கங்குலி கூறுகையில் டோனி இந்திய அணியில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று விராட் கோஹ்லி விரும்புகிறார். தற்போது அவருக்கு 36 வயதாகிறது. 2004ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய டோனியாக அவர் இல்லை. என்றாலும், தற்போது மாறுபட்ட வீரராக உள்ளார். டோனியை விராட் கோஹ்லி வெறும் விக்கெட் காப்பாளராக மட்டும் பார்க்கவில்லை. அணித்தலைவர் பதவிக்கான அனைத்து தகுதியில் உள்ள டோனியிடம் இருந்து சிறந்த அறிவுரையை பெறுகிறார். என்று தெரிவித்துள்ளார்.

# சிவகரன் மீது விசாரணை

விடுதலைப்புலிகளின் கருத்தியல் போக்கை வலுப்படுத்துகின்ற வகையிலும், பயங்கரவாதத்தைத் தூண்டுகின்ற விதத்திலும் தொடர்ச்சியான செயற்பாடுகளையும் கருத்துகளையும் தான் முன்னெடுத்து வருகிறார் எனத் தன்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வி.எஸ்.சிவகரன் நேற்றுமுன் தினம் கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த வருடம் மாவீரர் தின நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டமை, அதனை தொடர்ந்து மே 18 முள்ளிவாய்க்கால் இன அழிப்பு அனுஷ்டிப்பு நிகழ்வு நடத்தியமை ஆகியன தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் அவரிடம் மேற்கொண்டனர்.

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது எது, பிரிக்கப்பட வேண்டியதுஎது, நீக்கப்பட வேண்டியது எது என்பன தெரியவரும். அதன் பின்னர், அது பொது மக்களுக்கு விடப்பட முன்னர், மகா சங்கத்தினருக்கு தெரியப்படுத்தப்படும். – எனவும் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

## கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைவந்துள்ள ஐ.நா.வின் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை உறுதி செய்வதற்கான விசேட நிபுணர் பப்லோ டி கிரீப்புக்கும் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும் இடையில் நேற்றுக் கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

காணிவிடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விசேட நிபுணரின் கவனத்திற்கு இரா.சம்பந்தன் கொண்டுவந்தார்.

இக்கலந்துரையாடலில் காணிவிடுவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன் எமது மக்கள் தமது காணிகள் தொடர்பில் வெறும் உணர்ச்சிக்கும் அப்பாலான இணைப்பினைக் கொண்டுள்ளார்கள், இந்த மக்கள் சில பிரதேசங்களில் கடந்த 300 நாள்களுக்கும் அதிகமாகத் தமது காணிகளை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் எனத் தெரிவித்தார்.

மேலும் இவர்கள் மழையிலும் வெயிலிலுமாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என இந்தப் போராட்டங்களில் மிகவும் தீர்மானமாக உள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயமானது மக்களின் உணர்வுகளோடும் அவர்களது உரிமைகளோடும் சம்பந்தப்பட்ட விடயம் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்திய இரா.சம்பந்தன், உண்மையான புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமெனில் இந்த யதார்த்தம் புரிந்துகொள்ளப்பட வேண்டும் எனவும், எனவே இந்த விடயங்கள் மேலும் தாமதமின்றி முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர், ஒருதாய்தனது மகனை படையினரிடமோ அல்லது பொலிஸாரிடமோ கையளித்திருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதனை அறிந்து கொள்ளும் உரிமை உள்ளது, அந்த உரிமையை மறுக்க முடியாது எனவும் வலியுறுத்தினார்.

காணாமல்ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயலாக்கம் தொடர்பில்காணப்படும் தாமதம் குறித்துத் தமது கரிசனையை வெளிப்படுத்திய இரா. சம்பந்தன் இந்த அலுவலகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நிறுவப்படவேண்டும் என வும் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் தொடர்பில் பேசிய எதிர்க்கட்சி தலைவர் இவர்கள் களவு செய்த காரணத்தினாலோ அல்லது தமது நன்மைக்காக சூறையாடிய காரணத்தினாலோ காவலில் இருக்கவில்லை. இந்த ஒவ்வொருவரினதும் வழக்குகள் அரசியல் பரிமாணத்தைக் கொண்டுள்ளன. ஆகவே இவை அந்த அடிப்படையில் நோக்கப்பட்டு முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என வும் தெரிவித்தார். மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டமானது மிகக் கேடானதும் இந்நாட்டுச் சட்ட புத்தகங்களில்இருந்து நீக்கப்பட வேண்டியதுமான ஒன்று என அரசாங்கமானது ஒப்புக் கொண்டுள்ளபோது, எந்த அடிப்படையில் அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்களைத் தொடர்ந்தும் சிறையில் வைத்திருக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

இந்த விடயங்களில் தவறிழைக்க முடியாது என தெரிவித்த இரா. சம்பந்தன் அவ்வாறு தவறிழைக்கின்ற பட்சத்தில் அது நல்லிணக்க படிமுறைகளிலே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தினார். மேலும் ஒரு சிலர் நல்லிணக்க மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகளை குழப்புவதற்கு தயாராக உள்ள நிலையில் இந்த விடயங்கள் அவர்களுக்குச் சாதகமாக இருப்பதை அனுமதிக்க முடியாது என வும் தெரிவித்தார்.

இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றுவதை ஐ.நா.உறுதிசெய்ய வேண்டும் என விசேட நிபுணரை வலியுறுத்திய இரா. சம்பந்தன் இந்த வாக்குறுதிகள் இலங்கை நாட்டினதும் அதன் மக்களினதும் நன்மையைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கத்தினால் தன்னார்வமாக கொடுக்கப்பட்டவை என்பதனை சுட்டிக்காட்டிய அதேவேளை அவற்றை இலங்கை அரசு மதித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என வும், இவை வெறுமனே எழுத்துருவில் மாத்திரம் இருக்ககூடாது எனவும் தெரிவித்தார்.

தனது விஜயத்தின் முடிவில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தனது கருத்தைத் தெரிவிக்க வுள்ளார் எனக் கூறிய விசேட நிபுணர், இலங்கையில் நிலையான சமாதானத்தைஏற்படுத்தும் நோக்கிலும் அரசியல்தீர்வை அடையும் வகையிலும் தனதும் ஐ.நாவினதும் தொடர்ச்சியான பங்களிப்பு இருக்கும் என்பதையும் இச்சந்திப்பில் வலியுறுத்தினார். (உ)

## அதிகாரப் பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய நியாயமானதொரு சமூகத்தில் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதே அதிகாரப்பகிர்வின் நோக்கமென குறிப்பிட்ட ஜனாதிபதி, அது ஒருபோதும் நாட்டை பிளவுபடுத்துகின்ற, துண்டாடுகின்ற நிகழ்ச்சித் திட்டமாக இருக்கக் கூடாதென்றும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வவுனியா மாவட்ட 'உத்தியோகபூர்வ பணி' ஜனாதிபதி சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான அபிவிருத்தியையும் அரசியல் சீர்திருத்தத்தையும் மேற்கொள்வதற்குத் தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றபோது பல்வேறு எதிர்ப்புகள் உருவாகி வருகின்றன எனத் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்கின்றபோது அதற்கெதிராகசெயற்படுகின்ற அனைவரும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கான உண்மையான யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றும், இன்று இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்காது விட்டால் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் அனைவரும் வகைகூற வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு எதிராக விமர்சனங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கும் எவரிடமும் இந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த எந்தவொரு முன்மொழிவும் கிடையாதெனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டில் ஏற்படுத்த வேண்டிய அரசியல் சீர்திருத்தம் குறித்த முன்மொழிவுகளை முன்வைக்குமாறு தான் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றார் எனவும் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்புத்தொடர்பில் உத்தேச வரைவு கூட இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதுடன், அனைவரினதும் கருத்துக்கள், முன்மொழிவுகளை பெற்று, கலந்துரையாடலுக்கு உட்படுத்தி, நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் நாட்டின் ஒருமைப்பாடு, பௌத்த சமயத்திற்குரிய இடம், நாட்டில்உள்ள அனைத்து மக்கள் மத்தியிலான நல்லிணக்கம் மற்றும் சமத்துவமான சமூகம் ஆகியன குறித்துத் தெளிவான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்படாத விடயங்களை சுட்டிக்காட்டி சிலர் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இன்று சில பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக மக்களைப் பிழையாக வழிநடத்தும் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நாட்டுக்காகத் தமது பொறுப்புக்கள் என்னவென்று விளங்கி செயற்படுமாறு தான் அவர்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 50 வருட காலமாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் அவற்றில் எவையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சென்றடைய வில்லை. 50 வருடமாக காணி உறுதிப்பத்திரங்கள் இல்லாத மக்கள் வாழ்கின்றனர். அது பிரதேச செயலகத்தால் செய்ய வேண்டிய வேலை. ஆனால் தற்போது நடமாடும்சேவைமூலமேசெய்யமுடிந்திருக்கிறது. இது கடந்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவு.

அனைத்து மாவட்டங்களுக்கும், மாகாணங்களுக்கும் அபிவிருத்தி சமமான முறையில் பகிரப்படவில்லை. இப்பகுதியில் பலபாடசாலைகளிலும், அரசாங்க திணைக்களங்களிலும் பற்றாக்குறை நிலவி வருகின்றது. எனவே தான் மேல் மாகாணத்தைப் போன்று வட மாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனநாம்செயற்பட்டுவருகின்றோம்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களை போன்று, அரசமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்துவதிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. அதன்படி புதிய அரசமைப்பு ஊடாக அதிகாரத்தைப்பகிர்ந்தளிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இதனைத் தவறாக புரிந்துக் கொண்டுள்ள சிலர் யுத்தத்தினால் பிரிக்கமுடியாத நாட்டை தற்போது நாம் பிரிக்கப் போகின்றோம் என விமர்சிக்கின்றனர். அதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன். அதிகார பரவலாக்கலை எதிர்ப்பவர்கள் வடக்கு – கிழக்கு பகுதிகளுக்கு வரவேண்டும். தென் மாகாணத்தில், சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள அபிவிருத்தி வேலைகள் இந்த மாகாணங்களில் உள்ளனவா என்பதை அவர்கள் தங்களது கண்களால் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

சில அச்சு ஊடகங்கள் மக்களை தவறாக வழிநடத்துகின்றன. உண்மைக்கு மாறான கருத்துக்களை தமது பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கிறார்கள். வழங்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அரசியல் நிகழ்ச்சி நிரலில் இயங்குகிறார்கள். மகாசங்கத்தினரையும் தவறாக வழிநடத்தப் பார்க்கிறார்கள். புதிய அரசமைப்பு தொடர்பில் அறிக்கை தான் வந்துள்ளது. இதுதான் முடிவல்ல. இதில் திருத்தத்தை மேற்கொள்ள முடியும். தேவையில்லாதவற்றை நீக்க முடியும். ஒற்றையாட்சி என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தைப் போல் பௌத்த சமயத்திற்கும் உரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால்தவறாகதென்னிலங்கையில் இதனை வெளிப்படுத்துகிறார்கள். அதிகாரங்கள் எல்லாப் பகுதிக்கும் பகிரப்பட்டுள்ளன. இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே வகையான அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும் என்பதே எமது நோக்கம். – என்றார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'உத்தியோகபூர்வ பணி' ஜனாதிபதி மக்கள் சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 63 பிரதேச நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்து தேசிய ரீதியாக இடம்பெறும் மூன்றாவது தேசிய நிகழ்ச்சித்திட்டம் வவுனியா மாவட்டத்தை மையப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் பொலன்னறுவை மற்றும் காலி மாவட்டங்களில் 'உத்தியோகபூர்வ பணி' ஜனாதிபதி மக்கள் சேவை நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. அடுத்த நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தை மையப்படுத்தியதாக நடைபெறும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் நிரந்தர காணி உறுதிகள் இல்லாத மக்களுக்கு 5000 காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தல், இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குதல், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெங்கு அபிவிருத்தி சபையினால் தென்னங்கன்றுகளை வழங்குதல், வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்குத் தேவையான இரண்டு பௌசர்களைபெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஜனாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

உத்தியோகபூர்வ பணி ஜனாதிபதி மக்கள் சேவை நடைபெற்ற வளாகத்தை ஜனாதிபதி பார்வையிட்டமையுடன், இதன்போது முன்வைக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, அமைச்சர்களான கயந்த கருணாதிலக்க, எஸ்.பி.நாவின்ன, ரிஷாட் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.காதர் மஸ்தான், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட செயலாளர் எம்.பி.ஆர். புஸ்பகுமார உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்ட இரு பொது மன்னிப்புக் காலங்களில் 34 அதிகாரிகள் உட்பட 8843 இராணுவத்தினர் சரணடைந்து தங்களைச் சட்ட ரீதியாக விடுவித்துக் கொண்டனர் எனத் தெரிவிக் கப்பட்டது. (உ)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடம் பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்கள் மன்னார் உதவிக் கடற்றொழில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தனர். (உ)

## காப்பாற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு மூழ்கியதால் செய்வதறியாது திகைத்து நின்ற மீனவர்கள் ஏழுபேரும் உயிருக்குப் போராடிய படி இருந்தனர்.

சர்வதேச கடல் எல்லையில், கொழும்புக்குத் தென்கிழக்குப் பகுதியில், 65 கடல்மைல் தொலைவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

அப்போது, மீனவர்கள் சிலர் உயிருக்குப் போராடியபடி இருப்பதைக் கண்ட இலங்கை மீனவர்கள், உடனடியாக அப்பகுதிக்கு விரைந்து சென்று, ஏழு மீனவர்களையும் பத்திரமாக மீட்டனர்.

மீட்கப்பட்ட மீனவர்கள் காலி கடற்படை முகாமில் ஒப்படைக் கப்பட்டனர்.

இந்நிலையில், 7 பேரும் தற்போது பாதுகாப்பாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பாதாளத்தில் தள்ளிய பொல்லாத புயல் 'மரியா'!

## புவேர்ட்டோ ரிக்கோதீவை

*ர.சீனிவாசன்*

லிஃப்ட் வசதி இல்லாததால் 24 மாடிகள் தினமும் ஏறி இறங்கும் குடும்பம். காலவரையின்றி மூடப்பட்டு, இடியும் நிலையில் பள்ளிகள், எண்ணிக்கையில் பாதி மட்டுமே செயற்படும் செல்போன் கோபுரங்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாய் செயற்படும் வங்கிகள், முழுவதும் செயற்படாத ஏ.டி.எம்கள், மருத்துவமனைகள் மற்றும் விமான நிலையத்தில் களவு போன ஜெனரேட்டர்கள், 80 சதவிகிதம் திரும்பாத, மின்சாரம் இல்லாத இருண்ட நிலை.

இதுதான் மரியா என்ற புயல் தாக்கிய ஒரு மாதத்திற்குப் பின் மீதமிருக்கும் புவேர்ட்டோ ரிக்கோ தீவு!

**புவேர்ட்டோ ரிக்கோ**

மரியா புயல் கரிபியன் தீவுகளைக் காவு வாங்காத குறைதான். கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் களமிறங்கிய புயல் பல இடங்களை நாசம் செய்தது. அதிகபட்ச உக்கிரத்துடன் அது தாக்கிய இடம் அமெரிக்கா பிராந்தியங்களில் ஒன்றான புவேர்ட்டோ ரிக்கோ தீவு (Puerto Rico) தான். 48 பேர் மரணம், பலர் தங்கள் வாழ்வாதாரங்கள், வீடுகளை இழந்து வாழ வேண்டிய நிலைமை என்று நீங்காத் துயரை ஏற்படுத்தி விட்டது.

இழப்பு 8 கோடியே 80 லட்சம் டொலர்களைத் தாண்டும் என்று சொல்கிறது ஒரு கணக்கு.11 வருடங்கள் பஞ்சத்தில், பொருளாதார பின்னடைவில் இருந்த பிராந்தியம். இப்போது இந்தச் சோகம் வேறு!





**இருண்ட தீவான கதை**

சரியாக செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி தன் பணியை நிறைவு செய்து கொண்டது மரியா. இது நடந்து ஒரு மாதம் ஓடிவிட்டது. ஆனால், இன்றும் புவேர்ட்டோ ரிக்கோவால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை. இன்னமும் இருண்ட தீவாகவே இருக்கிறது. 30 சதவீத மக்களுக்குத் தண்ணீர் இல்லை. 5 ஆயிரம் பேர் ஏதோ ஓர் இடத்தில் கூரை இருக்கிறதே; அது போதும் என்று ஒதுங்கியுள்ளனர். அவர்களுக்கு மழை நீர்தான் குளிக்க, குடிக்க எல்லாவற்றிற்கும். 90 சதவிகித சூப்பர் மார்கெட்கள் திறக்கப்பட்டு விட்டாலும், பெரும்பாலும், காலியாகவே இருக்கின்றன.

தண்ணீர், வாழைப்பழங்கள், கேனில் அடைக்கப்பட்ட டூனா மீன்கள் இவை மட்டுமே கிடைக்கின்றன. போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் ஆஸ்துமா நோயாளிகள் என்ன செய்வதென்று புரியாமல் தவிக்கிறார்கள். அத்தியாவசிய பொருள்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதால் திருட்டுகள் அதிகமாகிவிட்டன. கட்டுப்படுத்த யாருமில்லை.

**மக்களின் நிலை என்ன?**

அங்கேயே தொழில் செய்து, மகிழ்ச்சியுடன் இருந்த சேமிப்புடன் வாழ்க்கை நடத்தி வந்த பலர் எல்லாவற்றையும் இழந்து தவிக்கின்றனர்.

அவர்களில் சிலர் ஊடகங்களுக்குக் கண்ணீருடன் கூறிய வார்த்தைகள் ஒட்டுமொத்த அமெரிக்காவையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

42 வயதான மரவேலை செய்பவர் ஒருவர், வீடுகளை இழந்து விட்டோம், கார்கள் முழுவதும் நொறுங்கிவிட்டது. சென்ற வாரத்தில் இருந்துதான் மீண்டும் வேலை செய்ய தொடங்கியுள்ளேன்.- என்கிறார்

அவருடன் வேலை செய்யும் 28 வயதான பராமரிப்புப் பணியாளர், வெறும் வெள்ளை அரிசியும், பொறித்த முட்டையும்தான் உணவு; அதைக் கொடுக்க ஹெலிக்கொப்டர் எப்போது வரும் என்று வானத்தையே வெறித்துப் பார்க்கின்றனர் குழந்தைகள்.

என் மனைவி, மூன்று குழந்தைகள் மற்றும் மாமியாருடன் ஒரு சிறிய 13X9 அறையில் தற்போது வசித்து வருகி றேன். மீதி வீடு முழுவதும் புயலில் போயிட்டுது. இனி முடியாது. வரும் வாரம் குடும்பத்துடன் மாசசூசெட்ஸ் செல்லவிருக்கிறேன். விருப்பமில்லைதான், இருந்தும் என்ன செய்ய? என்று வருத்தப்பட்டார்.



வறுமையால் 'ஒட்டாண்டி'களாக மக்கள்; ஒரு மாதம் கடந்தும் மீள முடியாத சோகம்...!!

பளிங்கு மற்றும் ஜிப்சம் பலகைகள் நிறுவும் ஒருவர், வாழ்க்கையே திசை மாறிவிட்டது. சொந்தமாகத் தொழில் செய்து வந்தேன். இனி இந்த ஊர் இயல்பு நிலைக்குத் திரும்பினாலும் நான் இழந்த வாழ்க்கையைப் பெற முடியாது. எனக்கு 50 வயதாகிவிட்டது. வேலை இல்லை. இனி யார் தருவார்கள்? எல்லாம் முடங்கிவிட்டன! என்று இதயம் நொறுங்கப் பேசினார்.

பள்ளிகள் இல்லாததால் சிறு குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்குக் கூட செல்ல முடியாத நிலை. பார்த்துக் கொள்ள ஆள் கிடைக்குமா எனச் சமூக வலைத்தளங்களில் பக்கத்துக்கு ஊர்களைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

ஒரு சிலர் பற்றரியில் இயங்கும் ஃபேன்கள் எங்கு கிடைக்கும் என்று கேட்கிறார்கள். துணிகளைக் கைகளில் எப்படி சுலபமாக துவைக்க முடியும் என்றெல்லாம் கூட கேள்விகள் நீள்கின்றன. நிறையப் பதில்களும் வருகின்றன.

**என்ன செய்கிறது அரசு?**

அரசு தரப்பில் மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிக்காக, புவேர்ட்டோ ரிக்கோ மற்றும் வெர்ஜின் தீவுகளுக்கு 36.5 பில்லியன் டொலர்கள் உதவித் தொகையாக அறிவித்துள்ளது. ஒரு சாரார் இதிலிருந்து மீண்டு வரும் வரை வரிகள் எதுவும் விதிக்க வேண்டாம் என்று அரசைக் கேட்டுள்ளனர்.

மேலும் சிலர், புயலால் பாதிக்கப்பட்ட அமெரிக்க மாநிலங்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டனவோ, அதையே பாரபட்சமில்லாமல் பிராந்தியங்களுக்கும் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த நூற்றாண்டில் இந்தத் தீவை தாக்கிய பெரிய புயல் இது, அதுவும் கேட்டகரி 4 புயல். காலத்தில் பின்னோக்கிச் சென்றுள்ளது புவேர்ட்டோ ரிக்கோ! இந்த நிலை தொடர்ந்தால் அங்கு வசித்த மக்களுக்கு அந்த இடத்தை விட்டு வெளியேறுகின்றமையைத் தவிர வேறு வழி இல்லை. அதை அவர்களும் அரசாங்கத்திடம் தெரிவித்துவிட்டனர்.

புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்கிய புவேர்ட்டோ ரிக்கோ மீண்டு வர வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பமும். ஆனால், எப்போது என்றுதான் தெரியவில்லை!

# யாழ் ஆஸ்பத்திரியில் கொல்லப்பட்டோரின் 30 ஆவது வருட நினைவு நேற்று அனுஷ்டிப்பு







யாழ்ப்பாணம், ஒக்.22

இந்திய அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கையின் போது யாழ் போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் முப்பதாவது ஆண்டு தின நினைவு போதனா வைத்தியசாலையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலைக்குள் இந்தியப் படைகள் நுழைந்த போது அங்கு கடமையிலிருந்த 22 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்களின் 30 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நினைவு நிகழ்வுகள் வைத்தியசாலையில் இடம்பெற்றன.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வைத்திய சாலை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உட்பட பொது மக்கள் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து தீபமேற்றி மலரஞ்சலியும் செலுத்தினர்.

# வித்தியாவின் குடும்பத்தவரை ஜனாதிபதி அவர்களது வீட்டுக்குச் சென்று சந்தித்தார்

## வவுனியாவில் நேற்று இடம்பெற்றது





படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் குடும்பத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார்.

நேற்று நடமாடும் சேவைக்காக வவுனியா வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வவுனியா, சிங்கள பிரதேச செயலக வீதியில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டிற்குச் சென்றே சந்தித்தார்.

வித்தியாவின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட வீட்டிற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு வசிக்கும் வித்தியாவின் குடும்பத்தினரை சந்தித்துக்கலந்துரையாடினார்.

அண்மையில் வித்தியா கொலை தொடர்பான விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றில் 'ட்ரயல் அட் பார்' முறையில் நடைபெற்று 7 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக விரைவாக வழக்கு விசாரணைகளை முடிவுறுத்தி தீர்ப்பு வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு வித்தியாவின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்க, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஆகியோரும் இச்சந்திப்பின் போது உடன் இருந்தனர்.

# கூட்டமைப்பு மக்களை ஏமாற்றுகிறது கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏமாற்றி வருகிறது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டும் கருத்தரங்கு ஒன்று நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருக் கின்றார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப் பினர் தமிழ் மக்களின் எந்த பிரச் சினையை இதுவரை தீர்த்துவைத்துள்ளார்கள் என இதன் போது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முயற்சியை தாண்டி போராட் டங்களின் மூலமே மக்கள் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை மீட்டு வருகின்றன எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டார்.

இதுமாத்திரமன்றி ஜனாதிபதி அரசியல் கைதிகள் விடயத்தில் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறார் எனவும் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் முல்லைத் தீவுமாவட்டத்தின் பலபகுதிகளையும் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியாவில் ஒரு நாள் மட்டும் இயங்கிய புதிய பஸ் நிலையம்!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வவுனியாவில் பங்குபற்றிய நடமாடும் ஜனாதிபதி செயலகத்தின் சேவைக்காக நேற்று ஒரு நாள் மட்டும் வவுனியா புதிய பேருந்து நிலையம் மீள இயங்கியது.

ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடமாடும் சேவைக்காக வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 78 வரையான தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன. நடமாடும் சேவைக்காக வரும் மக்களின் போக்குவரத்து தேவைகளை இலகுபடுத்துவதற்காக இப்புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்ததன.

சுமார் இருபது கோடி ரூபா நிதியில் கட்டப்பட்ட இந்தப் புதிய பேருந்து நிலையம் கடந்த பல மாதங்களாக இயங்காத நிலையில் முடங்கிக் கிடக்கிறது. அது, ஜனாதிபதியின் நடமாடும் சேவைக்காக மட்டும் மீண்டும் இயங்கியுள்ளது.

# லண்டனில் அமைச்சர் இராதாகிருஷ்ணன்



'LADDER' அமைப்பின் அழைப்பில், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் நேற்று சனிக்கிழமை லண்டன் சென்றடைந்தார்,

இவர் நாளை திங்கட்கிழமை பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச உள்ளார், மாலையில் East Ham, Trinity Church Hall இல் மாலை 6 மணிக்கு புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

சகலரையும் கலந்து கொண்டு தாயகக் கல்வி வளர்ச்சியில் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.



செல்லமுத்து வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் ஆயிரம் கவிஞர்களின் கவிதைகள் பெரு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.